www.tamilarangam.net

# களத்தில்

> நாம் உறுதியுடன் தொடர்ந்தும் போராடுவோம். எமது தாயக பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து, சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.
>
> - தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (04.06. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (136) அன்பளிப்பு: 60 p

# முப்படைகளின் இராணுவ முன் நகர்வு விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டது

- நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பலி
- ஆயிரக்கணக்கில் படுகாயம்
- டாங்கிகள் உட்பட நவீன இராணுவத் தளபாடங்கள் தகர்ப்பு
- இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த அன்றே முறியடிப்பு

"வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குத் தரைப்பாதை" என்ற திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்ட 'நிச்சய வெற்றி' என்று கூறப்படும் சிறிலங்கா முப்படைகளின் இராணுவ நடவடிக்கை விடுதலைப் புலிகளால் ஓமந்தையுடன் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. கடற்படை, விமானப்படையின் உதவியுடன் 20,000 க்கும் அதிகமான இராணுவத்தினர் நவீன இராணுவத் தளபாட உதவியுடன் தரைநகர்வு முயற்சியைத் தொடங்கியிருந்தனர். விடுதலைப்புலி வீரர்களின் கடுமையான எதிர்த் தாக்குதல்களால், நொச்சிமோட்டைக்கும் ஓமந்தைக்கும் இடையிலிருந்த மனிதரற்ற பகுதிக்கூடாக விரைவாக வந்த சிறிலங்காப் படைகள் இப்போதும் ஓமந்தையிலேயே முடங்கியுள்ளதாகத் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

24-05-97 அன்று ஓமந்தையில் இருந்து இரண்டாம் கட்ட நடவடிக்கையை (நிச்சய வெற்றி-2) ஆரம்பித்த சிறிலங்காப் படைகள், விடுதலைப் புலிகள் கொடுத்த உக்கிரமான தாக்குதலைத் தொடர்ந்து அந் நடவடிக்கையை கைவிட்டனர். இது குறித்து தமிழீழத்தில் இருந்து வெளியாகும் "ஈழநாதம்" நாளிதழ் வெளியிட்ட செய்தியில், "இரண்டாம் கட்ட இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த படையினர், விடுதலைப் புலிகள் கொடுத்த பதிலடியால் படைநகர்வை அன்றே இடைநிறுத்தினர். இது வழமைக்கு மாறான செயற்பாடாகும். இந்த இடைநிறுத்தத்திற்கு அல்லது தாமதத்திற்கு சிறிலங்காப் படைகளுக்கு ஏற்பட்ட பேரிழப்புக்களே காரணமாகும்" எனத் தெரிவித்துள்ளது. மேலும் அது குறிப்பிடுகையில், "இந்த நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## தியாகி பொன் சிவகுமாரனின் 23ம் ஆண்டு நினைவு




**1974 ஆனித் திங்கள் 5ம் நாள் ...** சிறிலங்காவின் கூலிப்படைகள் தமிழீழமெங்கும் தமிழ் இளைஞர்களை வேட்டையாடி, தமிழர்களை அடிமையாக்கி இன அழிப்புச்செய்து வந்த வேளையில், சிங்கள ஆட்சியாளர்களுக்கெதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய தியாகி சிவகுமாரன் அவர்கள் தமிழினத்திற்காகக் களப்பலியான நாள். தமிழின விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த இம்மாவீரனுக்கு எமது வீரவணக்கம்.

# திட்டமிட்ட இனப்படுகொலை பொதுமக்கள் மேல் போர்

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

சந்திரிகா அரசு திட்ட மிட்ட முறையில் இனப் படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளனர். இராணுவ வெறித்தனத்துடன் பொதுமக்கள் மேல் போர் தொடுத்து, சர்வதேச குற்றச் செயலில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா அரசு, இனப்படு கொலையில் ஈடுபட்டுள்ளமைக்கு ஆதாரமாகப் பின்வரும் ஆறு நடவடிக்கைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

01- கடந்த இரண்டு ஆண்டு காலமாக சர்வதேசப் பத்திரிகையாளர்கள் தமிழர் பிரதேசங்களுக்கு வரமுடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளமை.

02- தமிழர்களால் சாகுபடி செய்யப்பட்ட உணவுத் தானியங்கள் இராணுவ இலக்காக்கப்பட்டு காலத்துக்குக் காலம் அழிக்கப்பட்டு வருதல்.

03- ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் அகதிகள் சிறிலங்காவால் உருவாக்கப்பட்டுள்ளமை.

04- தமிழர்களின் வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள் திட்டமிட்டுத் தாக்கி அழிக்கப்படுதல்.

05- வன்னிப் பிரதேச மக்களுக்கான மருந்துகளின் விநியோகம் குழப்பப்படுதல்.

06- வன்னிப் பிரதேச மக்களுக்கான உணவு வழங்கல் முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளமை.

# மட்டக்களப்பில் நடந்த பாலியல் கொடூரம்

- கணவன்-பிள்ளைகள் முன்னிலையில் தமிழ்ப்பெண் மீது பாலியல் வன்முறை
- பாலியல் உறுப்பில் குண்டை வெடிக்க வைத்து அப்பெண் படுகொலை

சிறிலங்காப் படைகளின் பாலியல் கொடூரங்கள் தென்தமிழீழத்தில் மிகவும் அதிகரித்துச் செல்கின்றன. ஆக்கிரமிக்கப்பட்ட யாழ். குடாநாட்டில் வெளிவந்த சில பயங்கரமான பாலியல் வதைகள் போல், வெளிவராத பல சம்பவங்கள் தென்தமிழீழத்தில் இடம்பெற்றுள்ளன. இதில் இரத்தத்தை உறைய வைக்கும் ஓர் கொடூரச் செயலை மட்டக்களப்பு எல்லைக் கிராமமான மத்திய முகாம் பகுதியில் சிறிலங்காப் பொலிசார் செய்துள்ளனர்.

இரவு 10 மணியளவில் செல்வகுமார் என்பவரின் வீட்டுக்குள் புகுந்த பல பொலிசார், அவரையும் பிள்ளைகளையும் கட்டி வைத்துவிட்டு, அவர்கள் முன்னிலையிலேயே அவரின் மனைவியான கோணேஸ்வரி மீது கூட்டான பாலியல் வன்முறையைப் பிரயோகித்துள்ளனர். இக் காடைத்தனத்தைப் புரிந்த அப் பொலிஸ் குண்டர்கள், மயக்கநிலையில் இருந்த அந்த அப்பாவிப் பெண்ணின் பாலியல் உறுப்பில் கைக்குண்டொன்றை வெடிக்க வைத்து மிருகத்தனமான முறையில் படுகொலை செய்துள்ளனர். அது மட்டுமல்லாமல், சிதறிய அப் பெண்ணின் உடலை கணவனையும், பிள்ளைகளையும் கொண்டே பக்கத்தில் உள்ள வளவில் புதைக்குமாறும் செய்துள்ளனர். தமது காடைத்தனத்தை புரிந்து விட்டுச் செல்கையில், இச் சம்பவம் பற்றி யாருக்கும் முறைப்பாடு செய்தாலோ

தொடர்ச்சி 18 ம் பக்கம்...

# இராணுவத்தை விலக்கு! உணவு - மருத்துத்தடையை அகற்று!

## வன்னிப்பகுதி மக்கள் மாபெரும் கண்டனப் பேரணி

சிறிலங்கா அரசின் இனப்படுகொலைகளுக்கும் மனித நேயத்திற்கு எதிரான குற்றங்களுக்கும் உள்ளாகி இன்னலுறும் வன்னிப் பிரதேச மக்கள், பல்லாயிரமாய்க் கிளர்ந்தெழுந்து மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை ஸ்கந்தபுரத்தில்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இராணுவ முகாம் வளாகத்துள் மனித உரிமைக் கண்காணிப்புக் குழு

## -காணாமல் போனோரின் பெற்றோர் யாழ். செயலகத்தில் ஆர்ப்பாட்டம்

சிறிலங்கா இராணுவத்தினர் யாழ். குடா நாட்டை ஆக்கிரமித்த பின் யாழ். குடாநாட்டில் நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்கள், இளைஞர்கள் காணாமல் போவது சமீபத்திய நாளாந்த நடவடிக்கையாக உள்ளது. இவர்களில் 750 பேர் காணாமல் போனவர்கள் எனப் பதிவாகியும் உள்ளது. இருந்தபோதிலும், இவர்கள் நிலைகுறித்து இவர்களின் பெற்றோர், உறவினருக்கு சிறிலங்கா அரசு எதுவித தகவல்களையும் வழங்காத நிலையில், பெருங்கவலையுற்ற பெற்றோர்கள் உறவினர்கள் யாழ். செயலகத்தின் முன் பெருந்திரளாக அணிதிரண்டு ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

தமது பிள்ளைகளின் நிலைகுறித்து விபரம் பெற சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்க, தமக்கு நேரம் ஒதுக்கித் தரும்படி இவ் அப்பாவிப் பெற்றோர்கள் யாழ். சிறிலங்கா அரச அதிபரிடம் கேட்டுள்ளனர்.

இதேவேளை, சர்வதேச சமூகத்தினரை ஏமாற்றுவதற்கும் சர்வதேச அழுத்தங்களைச் சமாளிப்பதற்கும் சந்திரிகா அரசினால் மேடையேற்றப்பட்ட "மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு" சிறிலங்கா இராணுவ முகாம் வளாகத்துள்ளேயே தனது இயக்கத்தை கொண்டுள்ளது. எதுவித நடைமுறைச் செயற்பாடுமின்றி இருந்துவரும் இந்தக் குழு அமைக்கப்பட்ட பின்னரும் யாழ். குடாநாட்டில் இளவயதினர் காணாமல் போவது தொடர்ந்தவண்ணமே உள்ளது.

இதனால், தமது பிள்ளைகள் நிலை குறித்து அச்சமும், பீதியும் கொண்டுள்ள யாழ். குடாநாட்டுப் பெற்றோர்கள், சிறிலங்காவின் இராணுவ ஆட்சியுள் உயிரைக் கையில் பிடித்த நிலையில் வாழ வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

எத்தனையோ மகஜர்கள், ஆர்ப்பாட்டங்கள் நடாத்தியும் தங்கள் பிள்ளைகளின் நிலை குறித்துத் தகவல் பெற வழியின்றித் தவிக்கும் பெற்றோர்கள், இதுகுறித்து சிறிலங்கா ஜனாதிபதியிடம் நேரடியாகவே விபரம் கேட்பதென முடிவெடுத்து செயற்பட்டு வருகின்றனர்.

ஒரு பெண்ணாக இருந்தும் தமிழ்க் குழந்தைகளைப் பொறுத்தமட்டில் பேயாகக் காட்சியளிக்கும் சந்திரிகாவின் இந்த சர்வதேச சட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்த, சர்வதேச மனித உரிமைக் குழுக்களும் சர்வதேச சமூகமும் உடன் அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென இந்த அப்பாவிப் பெற்றோர்கள் சர்வதேச சமூகத்தினரையும் சர்வதேசத்திலும் வாழும் தங்கள் உடன்பிறப்பான தமிழர்களையும் வேண்டி நிற்கின்றனர். ●

## 1000க்கும் மேற்பட்ட சிறிலங்கா பொலிசார் சேவையிலிருந்து தப்பியோட்டம்

கடந்த ஓரிரு வாரங்களில் மட்டும் சிறிலங்காப் பொலிசார் ஆயிரத்திற்கும் அதிகமானோர் தமது சேவையில் இருந்து விலகியோ அல்லது தலைமறைவாகியோ உள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பயிற்சி முகாமிலிருந்தே தப்பியோடும் சூழ்நிலை அதிகமாகக் காணப்படுவதாகவும், குறிப்பாக அண்மைய இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த பின்னர் பொலிசாரை வட பகுதியில் சேவையாற்ற அனுப்ப முயற்சித்த வேளையிலேயே இந்த ஓடும் படலம் தொடங்கியுள்ளதாக அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. ●

# தமிழகக் கட்சிகள் சந்திரிகா அரசுக்குக் கண்டனம்

இலங்கைத் தீவில் அப்பட்டமான இன அழிப்பை மேற்கொண்டுவரும் சந்திரிகா அரசின் கொடுங்கோண்மை, சர்வாதிகாரப் போக்கு தமிழகம் உட்பட உலகெங்கும் வாழும் தமிழரிடையே என்றும் இல்லாத அளவிற்கு ஆத்திரத்தையும் இனமான உணர்வையும் தட்டி எழுப்பியுள்ளது.

சிங்கள அந்நிய ஆட்சியின் ஆக்கிரமிப்பையும் இனவெறித்தனமான சிங்களப் படையின் இனப்படுகொலைப் போக்கையும் கண்டித்து தமிழகத்தில் 6-6-97 க்கு, தமிழகம் தழுவிய முழு அளவிலான மறியல் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய குழுவொன்று இந்தியப் பிரதமரைச் சந்தித்து முறையீடு செய்வதெனவும் கட்சித் தலைவர்கள் இக்கூட்டத்தில் முடிவெடுத்துள்ளனர். இது தொடர்பாக பத்திரிகையாளரிடையே பேசிய திராவிடக் கழகப் பொதுச்செயலர் வீரமணி அவர்கள், போர் வெறிகொண்ட சிங்கள அரசு தமிழர்களைச் சொந்த மண்ணில் அகதிகளாக்குவதை மிக வன்மையாகக் கண்டித்துப் பேசியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ●

## 3 நாட்களில் 16 மாணவர்கள் போராட்டத்தில் இணைவு

விசுவமடுவில் போராட்டத்தில் இணையும் மாணவர்கள் உத்வேகம் அதிகரித்துக் காணப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. 20-05-97 இல் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, 3 நாட்களில் 16 மாணவர்கள் தாயக மீட்புப் போரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்துள்ளனர். இந்த ஆர்வம் வன்னிப் பகுதி முழுவதும் பரந்து காணப்படுவதாகக் களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் சிறிலங்காப் படையினரின் தற்போதைய இராணுவ நடவடிக்கையினால் காயமுற்றோருக்கு இரத்தம் வழங்குவதில் வன்னிப் பகுதி மக்கள் தாமாக முன்வந்து உதவி செய்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ●

## படகு கவிழ்ந்ததில் 13 பொதுமக்கள் பரிதாபகரமாக மரணம்

நொச்சிக்குடாவிலிருந்து யாழ். குருநகர் பகுதி நோக்கிப் படகில் பயணம் செய்துகொண்டிருந்த 13 தமிழ்ப் பொதுமக்கள், அப் படகு கவிழ்ந்ததில் கடலில் மூழ்கி பரிதாபகரமான முறையில் இறந்துள்ளனர். 6 பொதுமக்களைப் பற்றிய விபரம் தெரியவரவில்லை எனக் கூறப்படுகிறது. இறந்த மக்களில் 4 குழந்தைகளும் அடங்குவர். 5 ஆண்கள் மட்டுமே நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

## 600க்கு மேற்பட்ட வழிபாட்டுத் தலங்கள் சந்திரிகா ஆட்சியில் அழிப்பு

அமைதியை ஏற்படுத்துவேன் - என்னுடைய ஆட்சியில் தமிழர்கள் மீது குண்டுவீச்சு நடாத்தப்பட மாட்டாது, என்றெல்லாம் பொய்யுரை கூறி அதிகாரத்துக்கு வந்த சந்திரிகாவின் ஆட்சியில் இதுவரை அறுநூறுக்கு மேற்பட்ட வழிபாட்டுத் தலங்கள் அவரின் படையினரால் அழிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளி விபரங்கள் உறுதி செய்கின்றன. அண்மைய 'நிச்சய வெற்றி' எனக்கூறப்படும் இராணுவ நடவடிக்கையின் போதும் ஓமந்தைப் பகுதியில் ஒரு தேவாலயமும் ஒரு கோவிலும் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகளின்பொழுது பொதுமக்கள் மதவழிபாட்டுத் தலங்களில் தஞ்சமடைவதும் அவ்வாறு தஞ்சமடையும் மக்களைக் குண்டுவீசி கூட்டாகக் கொல்வதும் சிறிலங்கா அரச வழமையாகி வருகிறது. யாழ். சூசையப்பர் தேவாலயம், நவாலியில் 145 மக்களை குண்டுவீச்சால் படுகொலை செய்த புனித இராயப்பர் தேவாலயம் முதல் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் வற்றாப்பளை அம்மன் கோவில் என எத்தனையோ ஆலயங்களும் தேவாலயங்களும் இவ்வாறு அழிக்கப்பட்டு மக்கள் படுகொலை செய்யப்பட்ட வரலாறு தொடர்கிறது. இதில் நவாலிப் படுகொலை சர்வதேச அமைப்புக்களால் கண்டனம் செய்யப்பட்டதும் அனைவரும் அறிந்ததே. சிறிலங்கா அரசின் இவ்வாறான தாக்குதல்கள், தமிழ் மக்களின் கலை, பண்பாட்டு வாழ்வை - வரலாற்றை அழிக்கும் ஒரு முயற்சியாகவும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ●

## சிறிலங்கா தூதரகம் எதிரே ஆர்ப்பாட்டம்

சென்னை சிறிலங்கா தூதரகம் எதிரே, பாட்டாளி மக்கள் கட்சியினர் சிறிலங்காவின் இனப்படுகொலைப் போக்குக்கு எதிராகக் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். 24-05-97 அன்று நடைபெற்ற இவ்ஆர்ப்பாட்டத்தில் கலாநிதி ராமதாஸ் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

மேலும், இதேதினத்தில் புதுச்சேரியில் ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாடும் நடைபெற்றுள்ளது. பல அமைப்புகள், கட்சிகள் கலந்து கொண்ட இம் மாநாட்டில் இந்திய அரசு தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டுமெனவும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் இனமான உணர்வின் வெளிப்பாட்டை நன்கு காண முடிந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## மன்னார் வீதியில் கைதான மூன்று பல்கலைக்கழக மாணவர்களை காணவில்லை

கடந்த 27ஆம் திகதி வவுனியா - மன்னார் வீதியால் பயணத்தை மேற்கொண்ட யாழ். பல்கலைக்கழக மேற்பட்டப் படிப்பு மாணவர்கள் மூவர், கடையொன்றில் தேநீர் அருந்திக் கொண்டிருக்கையில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாக்கப்பட்டனர். மேற்படி மூன்று மாணவர்களும் தற்போது காணாமல் போயுள்ளனர். இவர்கள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் - உயிருடன் தான் இருக்கிறார்களா என்ற எந்த விபரமும் சிறிலங்கா இராணுவத்திடம் இருந்து அவர்களின் பெற்றோரால் அறிய முடியவில்லை.

மேலும், தெகிவளையில் சிங்களப் பொலிசாரால் மற்றொரு பல்கலைக்கழக மாணவர் செபமாலை முத்து குலோக்கஸ் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். 22 வயதான இவர், முன்னாள் சம்பத்தரிசியார் கல்லூரி மாணவர் எனத் தெரியவருகிறது. இவர் சிங்கள இராணுவத்தின் அனுமதி பெற்று கப்பலில் பயணம் செய்து கொழும்பு வந்தவர் எனவும் உரிய முறையில் அனுமதி பெற்று வந்த இவர் கைதான காரணம் என்னவென தெரியவில்லையெனவும் கூறப்படுகிறது. ●

## பேசாலை, வவுனியா, ஓமந்தையில் அதிரடித் தாக்குதல்கள் -9 படையினர் பலி - பலர் படுகாயம்

கடந்த 25-05-97 அன்று வவுனியா நெல்லுக்குளத்திற்கும் ஓலுக்குளத்திற்கும் இடையில் வந்துகொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர்த் தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மற்றைய சில இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் பயணம் செய்த வாகனம் முற்றாகச் சிதைந்தது.

இது நடைபெற்ற இருதினங்களின் பின் 27-05-97 அன்று, பேசாலையில் உழவு இயந்திரத்தில் நாச்சிக்குடா இராணுவ முகாமில் இருந்து பேசாலை மத்திய முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த சிங்களப் படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய 'கிளைமோர்' தாக்குதலில் ஆறு படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். வாகனம் முற்றாக சிதைக்கப்பட்டது. காயமடைந்த இராணுவத்தினர் ஓடித் தப்பிக் கொண்டதாகத் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்ததாக, 29-05-97 அன்று ஓமந்தையில் தமது நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 'ஆட்டிலறி' தாக்குதலில் ஒரு இராணுவத்தினன் கொல்லப்பட்டு குறைந்தது இரு இராணுவத்தினராவது படுகாயமடைந்திருக்கலாம் என கொழும்பிலுள்ள சர்வதேசச் செய்தித் தாபனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இம் மூன்று தாக்குதல்களிலும் விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மக்களின் தீர்ப்பு

வன்னியில் சந்திரிகா அரசின் இனப்படுகொலைகளுக்கும், "மக்கள் மீதான போருக்கும்" எதிராக கொதிப்புற்ற தமிழ் மக்கள், தமிழ் மக்களை மோசமாகப் பாதித்துள்ள இராணுவ நடவடிக்கைகளை உடன் நிறுத்தும்படியும், உணவு – மருந்து வகைகளை வன்னிக்கு எடுத்து வரமுடியாமல் ஏற்படுத்தியுள்ள தடைகளை நீக்கும்படியும் இரண்டு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இக் கோரிக்கைகள் – அம் மக்களின் "உயிர் வாழ்வதற்கான உரிமை" நிலைபெறுவதற்கு இன்றியமையாதவை. மேலைத்தேய அரசியல் சித்தாந்தங்களில் "உயிர் வாழ்வதற்கான உரிமையும்", "சொத்தினை பேணுவதற்கான உரிமையும்" அடிப்படை மனித உரிமைகளாகப் பேணப்படல் வேண்டும் என்பது பல்லாண்டு காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

ஆனால், இவ் இரண்டுமே தமிழ் மக்களுக்கு சந்திரிகா அரசினால் மறுக்கப்பட்டு, தமிழ் மக்கள் வாழ்வே போராட்டமாக போராட்டமே வாழ்வாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பது இன்றைய இலங்கைத்தீவின் வரலாறாக உள்ளது. இந்தப் போராட்டம் நியாயமான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்று கூறியே வாக்கு வேட்டையாடி பதவிக்கு வந்தவர் சந்திரிகா என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மை. அமைதியை ஏற்படுத்துவேன் என வாக்குறுதியளித்த சந்திரிகா, அரசியல் அதிகாரம் கையில் வந்தவுடன் யாவற்றையும் மறந்து இனவாதம் தலைக்கேறியவராகவுள்ளார். தமிழ் மக்கள் மீது போர் திணிக்கப்பட்டு முன்னைய அரசைவிட பல மடங்கு வேகமாக மனித வதைகளும் இனப்படுகொலைகளும், மக்கள் காணாமற் போதலும் சிங்களப் படைகளால் நடாத்தப்படுகின்றன. இவற்றுக்குச் சந்திரிகா இட்டபெயர் "சமாதானத்திற்கான போர்", "தமிழ் மக்களை விடுவிப்பதற்கான போர்" என்பதாகும். இவ்வாறான சந்திரிகாவின் பொய்வேடத்தை, தமிழ் மக்கள் தமது கண்டனப் பேரணிகள் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

சிறிலங்கா அரசின் "இராணுவ நடவடிக்கைகள்" உடன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ் மக்களின் தெளிவான கோரிக்கையாக உள்ளது. ஏனெனில், இராணுவ நடவடிக்கை எனும் பெயரில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதும், உடமைகள் அழிக்கப்படுவதும், பயிர்நிலங்கள் அழிக்கப்பட்டு மக்களைப் பட்டினி நிலைக்கு உள்ளாக்குவதும்தான் நடைமுறையில் காணப்படுகிறது. நோயாளிகளுக்குக் கூட, மருந்துகள் மறுக்கப்பட்ட உலகமாக அவர்கள் வாழும் உலகு சந்திரிகா அரசால் மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறாக, மனித இனத்திற்கு தீங்கு விளைவிக்கும் ஓர் நாசகார இனவெறி பிடித்த அரசாக சிறிலங்கா ஆட்சிப் பீடத்தில் இருக்கும் சந்திரிகா அரசை – இந்த 21ஆம் நூற்றாண்டின் சர்வதேச சமூகம் எவ்விதம் அனுமதிக்கக்கூடும் என்பதுதான் அனைத்துலகிலும் வாழும் தமிழர்களின் கேள்வியாக உள்ளது. மக்களின் "விருப்பு", மக்களின் "பொதுச்சித்தம்" என்பன பற்றி பெரிதாகப் பேசிக் கொள்ளும் சர்வதேச நாட்டு அரசியல் தலைவர்களுடைய காதுகளில் வன்னிப் பகுதி மக்களின் 'விருப்பு',"பொதுச்சித்தம்" விழாமல் இருப்பதன் மர்மம் என்னவென்பதுதான் தமிழ் மக்களுக்கு அதிசயமான ஒன்றாக உள்ளது.

சர்வதேச சந்தைக் கவர்ச்சிகள், தென்னாசியாவில் இராணுவ நலன்களை அதிகரித்தல், சிறு ஆயுதங்களின் விற்பனை மையமாக இலங்கைத் தீவைத் தத்தெடுத்தல் போன்ற பல காரணிகள் சர்வதேச அரசுகளின் சுயநலத் தன்மைகளுக்கு ஊக்கம் கொடுத்து, இலங்கைத்தீவில் நடைமுறையில் உள்ள சந்திரிகாவின் இனப்படுகொலை அரசுக்கும் ஊக்கம் அளிக்கக்கூடும். ஆனால் சர்வதேச மக்கள் மீதும், சர்வதேச அமைதி விரும்பிகள், சர்வதேச பத்திரிகையாளர்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதும் தமிழ் மக்களுக்கு என்றும் நம்பிக்கை உண்டு. இவர்களது பணிகளினால் அரசுகளின் சுயநலப் போக்குகள் மாற்றியமைக்கப்படுவது உலக வரலாறு. இந்தவகையில், இவைகளின் பணியை தமிழீழ மக்கள் பக்கம் ஈர்ப்பதன் மூலம் வன்னி மக்களின் குரலை மக்கள் தீர்ப்பாக உலகுக்கு அறிவிக்க வைக்க வேண்டிய கடமை ஒவ்வொரு புலம்பெயர் தமிழனதும், ஒவ்வொரு அனைத்துலகு வாழ் தமிழ் மக்களதும் இனக் கடமையாக உள்ளது.

"ஒருவனது இனமே அவனது சிறப்புகளில் எல்லாம் தலையான பெருமையைக் கொடுக்கக்கூடியது" என்ற வள்ளுவரின் கூற்று வழிவந்த அனைத்துலக தமிழ்ச் சமுதாயம், தன்னில் இருந்து பிரிக்கப்பட முடியாத தன்சதையான "தமிழீழச் சமுதாயத்தை" சந்திரிகா சாகடித்து மகிழ்வதை பார்த்துக் கொண்டு வாளாவிருக்காது என்பதை வரலாறு மூலம் சிங்கள தேசத்திற்கு உணர்த்த – அனைத்துலக தமிழ் சகோதர நெஞ்சங்கள் முன்வர வேண்டும். தமிழீழ மக்களின் குரலை சர்வதேச அரங்கில் "மக்கள் தீர்ப்பாக" வெளிப்படுத்தி, அந்நிய சிங்கள அரசின் அடிமைத்தனமான ஆக்கிரமிப்பில் இருந்து அவர்கள் விடுதலை பெற – அம்மக்களின் பாதுகாப்பிற்கு ஆணிவேராக இருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒருங்கிணைந்து அனைத்துலக தமிழ் மக்கள் எல்லோரும் செயற்பட வேண்டும். ◆

# அழைப்பு

வன்னிப் பெருநிலப்பரப்பில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று இடம்பெற்றுக்கொண்டு இருக்கையில் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத்திட்டம் பற்றிப் பேசுவதற்கு, சிறிலங்காவின் அரசியல் விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தமிழ் குழுக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். அமைச்சர் பீரிஸின் இவ் அழைப்பானது, இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் அரசு கொண்டுள்ள ஆர்வம், அக்கறை என்பவற்றை வெளிக்காட்டும் ஒன்றாகவே வெளிப்பார்வைக்கு இருக்கும். ஏனெனில், இப்பாரிய படையெடுப்பு முடிவுற்றதும் அரசியல் தீர்வில் அரசு தீவிர அக்கறை காட்ட உள்ளது என்ற பட்சத்தையே, அமைச்சர் பீரிஸ் தமிழ் குழுக்களுக்கு விடுத்த அழைப்பு காட்ட முனைகிறது. ஆனால், உண்மையில் இவ்வேளையில் அரசு எடுக்கும் நடவடிக்கையானது, அரசின் வன்னிப் படையெடுப்பினால் அரசுக்கு ஏற்படக் கூடிய அழுத்தங்களை போக்குவதற்கும் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தவுமேயாகும். இதைத் தவிர இனப்பிரச் சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணவேண்டும் என்றோ அன்றி தமிழ்க் குழுக்களுடன் பேசுவதனால் இவ்வாறான ஒரு தீர்வுத்திட்டத்தை எட்டி விடலாம் என அது கருதுவதினலோ அமைச்சர் தமிழ் குழக்களை இன்று அழைக்க முனைகிறார். 1995 இல் யாழ் குடாநாட்டில் பாரிய படையெடுப்பிற்கு அரசு முடிவு செய்தது. அரசு அதிகாரப் பரவலாக்கல் பற்றியும் அரசியல் தீர்வு பற்றியும் பேசத் தொடங்கியது. ஆனால், யாழ் குடாநாடு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் இவ் விவகாரத்தில் அரசு பெரிதாக அக்கறை காட்டவில்லை. இது குறித்து தமிழ்க் குழுக்களுடன் பல சந்திப்புக்களை அரசு நடத்தியது. ஆயினும், அரசியல் தீர்வு விடயத்தில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இருப்பினும் அரசின் இலக்கு மாத்திரம் நிறைவேறியது. தமிழ்க் குழுக்கள் யாழ் படையெடுப்பிற்கு ஆதரவு அளித்து சிங்கள ஆட்சியாளர்களின் யாழ்ப்பாண ஆக்கிரமிப்புக்குத் துணை போனார்கள். இதன் மூலம் சிறிலங்கா அரசிற்கு எதிராக எழுந்த கண்டனங்கள் ஓரளவு வலுவிழந்தது என்றே கூறலாம். சிறிலங்கா அரசு இராணுவ நடவடிக்கைக்குக் காரணம் கற்பிக்க வாய்ப்புக் கொடுத்தது. ஆனால், அதன் பின்னர் தமிழ்க் குழுக்கள் அரசுக் கட்சியுடனும் பல தடவை பேசியுள்ளபோதும் அதில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த நிலையில் சலிப்படைந்து தமது அரசியல் எதிர்காலம் குறித்து அவநம்பிக்கையுடன் தமிழ்க் குழுக்கள்

தொடர்ச்சி 7 ம் பக்கம்...

# மதிப்பீட்டுக்கு அப்பால்

சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடமும், அரசும் எதிர்பார்த்ததை விட, 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையில் துருப்புகளுக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை சிறீலங்கா இராணுவ வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்கின்றன. இதைத்தவிர இராணுவ நடவடிக்கையைத் திட்டமிட்டவாறு நடத்திச் செல்ல இராணுவத்தினரால் முடியவில்லை என்பதும் தற்போது வெளியிடப்பட்டுள்ள முக்கியமான ஒரு விடயமாக உள்ளது. இதனைப் பல வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் ஊர்ஜிதம் செய்துள்ள போதிலும் அவதானிப்பின் மூலம் நாமும் இதனை உணர்ந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக ஜெயசிக்குறு முதலாம் கட்ட நடவடிக்கை முடிந்து சுமார் ஒரு வாரத்துக்குப் பின்னர், ஜெயசிக்குறு நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தை 24–05–97 சனிக்கிழமையன்று அதிகாலை வேளை இராணுவம் ஆரம்பித்தது. ஆனால், அன்றே புலிகள் கொடுத்த பலமான ஓர் பதிலடித் தாக்குதலினால் படை நகர்வை இராணுவம் நிறுத்தியுள்ளது. இது வழமைக்கு மாறான ஒரு செயற்பாடாகும். பொதுவாகவே இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டால் அது சில நாட்களாக நடைபெறும். பெரும்பாலும் நான்கு, ஐந்து நாட்களோ அன்றி ஒரு வாரமோ நீடிப்பது உண்டு. இது பொதுவாகப் புலிகளின் எதிர் நடவடிக்கையைப் பொறுத்ததொன்றாகவே அநேகமாக இருப்பதுண்டு. ஆனால், ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டமோ வழமைக்கு மாறாக ஒரே நாள் நடவடிக்கையுடன் இடை நிறுத்தப்பட்டுள்ளது என்றே கொள்ளலாம். ஏனெனில், இப்படையெடுப்பில் இரண்டு நாட்கள் கழிந்தும் இராணுவம் பெரும் நகர்விற்கான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு, இரண்டாம் கட்ட நடவடிக்கையின் இடை நிறுத்தத்திற்கு அல்லது தாமதத்திற்கு இராணுவத்திற்கு ஏற்பட்ட பெரும் இழப்பே காரணமாகும். இல்லாவிடில் இராணுவம் தொடர்ந்து நகர்வை நிச்சயம் மேற்கொண்டு இருக்கும். அதிலும் குறிப்பாக, சிறிலங்காத் தரைப்படையின் முதுகெலும்புபோலுள்ள கனரகப் படைப்பிரிவு, குறிப்பாக டாங்கிப் பிரிவு பலமான அடிவாங்கியது. இது இராணுவத்திற்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்ததொன்றாகவே உள்ளது. ஆனால், இவ்வாறு இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்புகளினால் இந்த நடவடிக்கை முற்றுப் பெற்றதாக எவரும் கருதுவதற்கு இல்லை. அடுத்த கட்டத்தை இராணுவம் எப்போதும் ஆரம்பிக்கலாம். ஆனால் இங்கு சுட்டிக்காட்ட விளையும் அம்சம் என்னவெனில், யுத்த நடவடிக்கை இராணுவத் தலைமையினரின் அன்றி அரசின் மதிப்பீடு, கணிப்பீடு என்பவற்றை மீறிச்சென்று கொண்டிருக்கின்றது என்பதேயாகும். இதனை இப்படை நடவடிக்கைக்கு திட்டமிட்ட 20,000 துருப்புகளுக்கு மேலதிகமாக வேறும் பல படையணிகளை இராணுவத் தலைமைப்பீடம் களத்திற்கு அனுப்பியதில் இருந்து புரிந்துகொள்ள முடியும். இந்த நிலையானது, விடுதலைப் புலிகளின் பலம் குறித்தும் அவர்களின் போர் ஆற்றல் குறித்தும் அரசும் இராணுவத் தலைமையும் தவறான மதிப்பீட்டைக் கொண்டிருந்தன என்பதேயாகும்.

தொடர்ச்சி 7 ம் பக்கம்...

www.tamilarangam.net






1-05-97 அன்று நோர்வேயில் நடைபெற்ற மே தின ஊர்வலத்தின் போது...

## முப்படைகளின் இராணுவ முன் நகர்வு....

சிறிலங்காவுக்கு பெரும் இழப்புகள் ஏற்படும். அது சிறிலங்கா இராணுவத்தின் சக்திக்கு மீறியதாக இருக்கும் எனத் துணிந்து கூறமுடியும்" எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஓமந்தையில் இறுதியாக நடந்த மோதலில் மட்டும் 20 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 75 பேர் கடுங்காயமடைந்ததாகவும் இரண்டு ரி-55 ரக டாங்கிகள் நிர்மூலமாக்கப்பட்டதுடன் மேலும் இரண்டு திருத்தமுடியாத அளவிற்கு சேதமடைந்ததாகவும் களச் செய்திகள் உறுதி செய்துள்ளன. இவற்றை வைத்துப் பார்க்கும்போது, இத் தரைநகர்வு முயற்சிகளில் சிறிலங்காப் படைக்கு மொத்தமாக கிடைத்துள்ள பேரிழப்புகள் மிகமிகப் பெரியதாக இருக்கும் என இராணுவ அவதானிகள் தெரிவித்துள்ளனர். இது இவ்வாறிருக்க, இந் இராணுவ நடவடிக்கையில் சிங்களப் படைகளின் பெரும் இழப்புகளை மூடிமறைத்து, விடுதலைப் புலிகளுக்கே பேரிழப்பு என சிறிலங்கா அரசு பொய்ப்பரப்புரை செய்து வருகிறது. ஆனால், விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் விடுத்த அறிக்கையில், 24-05-97 இல் நடந்த மோதலில் 13 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பெரும் மனக்குழப்பத்தில் சிறிலங்கா படையினர்

21-05-97 ஆம் நாளன்று, அதாவது சிங்கள 'வெசாக்' தின கொண்டாட்டங்களுக்கு முன்னதாக வன்னியைக் கைப்பற்றுவென திட்டமிட்டு, ஆரம்பிக்கப்பட்ட இந் இராணுவ நடவடிக்கை எதிர்பார்த்தவாறு இல்லாது, இது படையினருக்குப் பெரும் மனக் குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து அவசரமாகக் கொழும்பில் ரத்வத்த தலைமையில் கூடிய இராணுவ உயர் அதிகாரிகள் கூட்டத்தில், ரத்வத்தவின் கருத்துக்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புளியங்குளம் வரையாவது இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு, ஓமந்தையில் பெரியதொரு இராணுவ முகாம் அமைத்து நடவடிக்கையைக் கைவிடலாம் என ரத்வத்த ஆதரவு இராணுவ அதிகாரிகள் கருத்துத் தெரிவித்ததாகவும், ஆனால் இதற்குப் பெரும் விலை கொடுக்க வேண்டும் என நடவடிக்கையை நிறுத்தக் கோரும் இராணுவ அதிகாரிகள் கடுமையாக எச்சரித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் படையினரைக் பலிக் கடாக்களாக நினைக்கும் சந்திரிகாவும் அவரது இராணுவ அதிகாரிகளும் போர் தொடர வேண்டும் எனப் பணித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### பொதுமக்கள் மீது பழிவாங்கல் தாக்குதல்

வழமைபோல் விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாத சிங்களப் படை, மக்கள் மீது பழிவாங்கல் தாக்குதலைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். கடந்த சில தினங்களாக கடுமையான எறிகணை மற்றும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது ஒருபுறமிருக்க, உணவை ஆயுதமாக்கும் தனது சர்வதேச சட்ட விரோத நடவடிக்கையையும் மருந்துகளை தடுத்து மக்களைக் கொல்லும் இனக் கொலை உத்தியையும் சிறிலங்கா அரசு பலமாக மேற்கொண்டு இராணுவ நெருக்குதலில் சிக்குண்டுள்ள மக்களை மேலும் மேலும் இனத்துன்புறுத்தல் செய்துவருவதாகச் செய்திகள் உறுதி செய்கின்றன. ✷

# இராணுவத்தை விலக்கு...

நடாத்தியுள்ளனர்.

சர்வதேசச் சட்டங்களுக்கும், சர்வதேச மனித உரிமை சாசனத்திற்கும் எதிரான வகையில் பகிரங்கமாகவும் எவ்வித அச்சமின்றியும் சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையைக் கண்டித்தும் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்டு வரும் உணவு மருந்துத் தடைகளைக் கண்டித்தும் வன்னியில் திரண்டெழுந்த மக்களின் கண்டனப் பேரணி, "இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்தி இராணுவத்தை விலகக் கோரியும் உணவு மருந்து வகைகளை வன்னிக்கு எடுத்து வரமுடியாமல் ஏற்படுத்தியுள்ள தடைகளை நீக்கக் கோரியும்" சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கையொப்ப மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர். இதன் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் மக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### மேலும் மோசமடைந்துள்ள உணவு விநியோகம்

சிறிலங்கா அரச படைகளின் நெடுங்கேணி ஆக்கிரமிப்பினால் 3776 தமிழ் மக்கள் தங்கள் வீடுகளை இழந்துவிட்டதாகவும் இவர்கள் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் தொகையில் மேலும் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் சிறிலங்கா அரச அதிபர் அறிவித்துள்ளார். சிறிலங்காப் படைகளின் தாக்குதலின்போது நெடுங்கேணியில் உள்ள ஊஞ்சல்கட்டி, நாயன்மடு, பாடிக்குடியிருப்பு பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கடைகள் கைவிடப்பட்டுள்ளதாகவும் இதில் கடமையாற்றிய 105 ஊழியர்களும் இடம்பெயர்ந்துள்ளதாகவும் இதனால் முன்பே இக்கட்டான நிலையில் இருந்த உணவு விநியோகம் மேலும் நெருக்கடியை எய்திவிட்ட தாகவும் செய்திகள் தெரிவிக் கின்றன.

### தொண்டர் நிறுவனங்களின் உதவிக்கும் சிறிலங்கா அரசு தடை

இந்த இக்கட்டான நிலை, வன்னியை நோக்கிய இராணுவ நடவடிக்கை தொடங்கியது முதல் உணவு விநியோகத்தை சிறிலங்கா நிறுத்தியுள்ளமையால் மேலும் மோசமடைந்துள்ளது. வன்னிப் பகுதி மக்களுக்கு உதவி வழங்க சர்வதேச அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் முன்வருகின்ற போதிலும் சிறிலங்கா அரசு அவற்றைத் தடுத்து வருகிறது.

நிவாரணப் பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் தூதுவராலயத்தின் இலங்கைப் பிரதிநிதி தெரிவித்தபோதிலும் சிறிலங்கா அரச அதிகாரிகள் உதவி வழங்கல் கோரிக்கையை விடுக்காததினால் எதுவும் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. வன்னியில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியை நிவர்த்தி செய்யுமாறு வவுனியா அரச அதிபரினால் சிறிலங்கா அரசுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் புறக்கணிப்பட்டுள்ளது.

மக்கள் படும் அவலங்களை எடுத்துச் சொல்லி உடனடி நிவாரண உதவிகளைப் பெறும் நோக்குடன் கத்தோலிக்க மதகுருமாருடன் மடு வந்த கிளிநொச்சி அரச அதிபரை, அவரது கடமையைச் செய்ய அனுமதியாது சிறிலங்காப் படையினர் அவரைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இதையடுத்து, முல்லைத்தீவு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவ முன்வருமாறு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. தங்குமிட வசதி, உணவு வசதி, மருத்துவ வசதியின்றித் தவிக்கும் இடம்பெயர்ந்த மக்களின் நிலையைச் சுட்டிக்காட்டி விடுக்கப்பட்ட இவ் அழைப்பில், அனைத்து சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களையும் மக்களுக்கு உதவி வழங்க தாமதமின்றி முன்வருமாறு கோரப்பட்டுள்ளது.

### உணவு வழங்கலிலும் நாடகமாடும் சிறிலங்கா அரசு

பல தொண்டர் அமைப்புகளும் கிளிநொச்சி, வவுனியா, மன்னார் அரச அதிபர்களும் தொடர்ச்சியாக விடுக்கும் வேண்டுகோளின் சர்வதேச தாக்கத்தைச் சமாளிக்கும் வகையில், மிகமிக மட்டுப்படுத்தப்பட்ட உணவு வழங்கல் நடவடிக்கை ஒன்றில் சிறிலங்கா அரசு இறங்கியுள்ளதாகத் தெரிகிறது. 200 லொறி மாவும், 200 லொறி அரிசியும் உடன் தேவை என அறிவிக்கப்பட்ட நிலையில் 52 லொறியில் மிகக் குறைந்த அளவு உணவை சிறிலங்கா அரசு அனுப்பி, தான் உணவு வழங்கலைச் சீர்செய்வதுபோல் நாடகமாடி வருகிறது.

### சமூக அபிவிருத்தி நிலையமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் உதவி

இதேவேளை, சிறிலங்காவினால் மேற்கொள்ளப்பட்ட சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த மக்களுக்கான பங்கீட்டு உணவு, உலர் உணவு நிவாரண உதவிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதினால் மக்கள் பெரும் அவல வாழ்வுக்கு ஆளாகியுள்ளனர். இவ்விதம் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமூக அபிவிருத்தி நிலையம் உதவி செய்து வருகின்றபோதிலும் உணவு நிலை மோசமடைவதினால் பட்டினி நிலை தோன்றும் அபாயம் அதிகரித்து வருகிறது.

19 நலன்புரி மையங்களில் 1370 குடும்பங்களைச் சேர்ந்தவர்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பராமரித்து வருகின்றபோதிலும் உணவு நிலை மோசமடைவதை அடுத்து, இம்மாதம் முதல் இவர்களைப் பராமரிப்பதில் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்க நேரிடலாம் எனத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது.

மேலும் புதூர், புதுவிளாங்குளம் பகுதியில் இடம்பெயர்ந்த தமிழருக்கான புதிய அகதிகள் முகாம் ஒன்று திறக்கப்பட வேண்டியுள்ளதாக அறிவித்துள்ள வவுனியா உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் இதுவிடயமாக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் அவசர உதவியை நாடியுள்ளன.

### வன்னியில் உணவுக்கும் மருந்துக்கும் பெரும் தட்டுப்பாடு

புதுவிளாங்குளத்தில் 70 குடும்பங்கள் தற்போது சுத்தமான குடிநீர் மற்றும் உணவுப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், முல்லைத்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் தம்மிடம் இரண்டு தினங்களுக்குரிய உணவு மட்டுமே கையிருப்பில் உள்ளதாக அறிவித்துள்ளன. இதேவேளை, கிளிநொச்சி பிரதம மருத்துவ அதிகாரி இரண்டு கிழமைகளுக்குரிய மருந்துகளே கையிருப்பில் உள்ளதென எச்சரித்துள்ளார். மருந்துப் பற்றாக்குறை குறித்து சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் எச்சரித்துள்ள போதிலும் நிலைமையை மேலும் மோசமாக்கக்கூடிய வகையில் வவுனியா மருத்துவமனை, அனுராதபுரம் மருத்துவமனைக்கு உயிராபத்தான நோயாளிகளைப் பரிமாற்றுவதையும் சிறிலங்கா தடை செய்துள்ளது.

இந்த இக்கட்டான சூழ்நிலையிலேதான், வன்னிப் பகுதி மக்கள் கிளர்ந்தெழுந்து "இராணுவத்தை விலக்கு, இராணுவ நடவடிக்கைகளை உடன் நிறுத்து, உணவு- மருந்துத் தடைகளை அகற்று" என்ற கோரிக்கையுடன் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தியுள்ளனர். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நெஞ்சில்

## கடற்கரும்புலி கப்டன் மாலிகா

கடற்கரும்புலி கப்டன் விக்கியும் கடற்கரும்புலி கப்டன் மாலிகாவும் இணைபிரியாத தோழிகள். இருவரும் ஒன்றாகவே இயக்கத்தில் இணைந்து ஒன்றாகப் பயிற்சி எடுத்து, எப்போதும் இணைபிரியாமல் பாசறையில் உலா வந்தவர்கள்.

இருவரும் தோழிகள் என்றாலும், பயிற்சிப்பாசறையில் இருவருக்கும் போட்டி. நீந்துவது, படகு ஓட்டுவது, ஏனைய பயிற்சிகள் எல்லாவற்றிலும் ஒருவருக்கு மற்றவர் சளைத்தவர் இல்லை என்ற ரீதியில் வேகம் இருக்கும். கடற்கரும்புலி கப்டன் விக்கி கொழும்புத் துறைமுகத்தினுள் கரும்புலியாய் சென்று அவளைவிட்டுப்பிரிந்ததில், மாலிகாவுக்கு மிகுந்த கவலை. 'நீ முன்னால் போ. நான் வருகிறேன்' என்று தனக்குள் உறுதியெடுத்துக் கொண்டாளோ!

அதன்பிறகு அவளிடம் நீண்ட எதிர்பார்ப்பு. தனக்கு இலக்கு விரைவாகக் கிடைக்க வேண்டும் என்று அவளிடம் இருந்த துடிப்பு, அதுவே அவளது கனவும் நினைவுமாக இருந்தது.

மாலிகா, சிறந்த நீச்சற்காரியாக ஆரம்ப நீச்சற் பயிற்சியின்போதே இனங்காணப் பட்டவள். ஆரம்பப் பயிற்சியின் பின் சிறிதுகாலம் தொலைத்தொடர்பு வேலையில் நின்றபோது, தான் ஒரு கரும்புலியாக வேண்டும் என்ற நீண்ட கனவு அவளிடம் இருந்தது. சுலோஜன் நீரடிநீச்சற்பிரிவுக்குச் சென்றவள், அங்கு தனது திறமைகளாலும் பண்புகளாலும்



எல்லோரையும் கவர்ந்தாள். வேகமாக நீந்துவாள். அதிகவலுவுள்ள எந்தப் படகையும் ஓட்டக்கூடிய திறமையை அவள் பெற்றிருந்தாள். மைல் கணக்காக நீந்தி, திறமையாகச் சுழியோடி, தன் குழுவிலுள்ள அனைத்துப் போராளிக ளுக்கும் நீச்சல் பழக்கி, படகு ஓட்டக் கற்றுக்கொடுத்து அவள் செய்த வைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

உயரக்கிளம்பும் இராட்சத அலைக ளுக்குக் கீழால் நீந்துவது கடினம்தான். அந்த அலைகளை ஊடுருவி நீந்துவதற்குச் சிரமப்படும் பிள்ளைக ளையும் நீந்திக்கொண்டே இழுத்து நீந்தப் பழக்கி....... அலைகள் அவளிடம் பணிந்துவிடும். எல்லோருக்கும் எல்லா மும் தெரிந்திருக்க வேண்டும். அவளது குழு எல்லாவற்றுக்கும் முன் நிற்கும்.

எந்தக் கடுமையான பயிற்சியையும் இலகுவாக்கி சிரித்தபடி செய்து முடிப்பதில் மாலிகா கெட்டிக்காரி. பெரிய பழுவுள்ள இயந்திரங்களையும், வலுவுள்ள பொருட்களையும், தூக்கி தோளில் அடித்து, அவளது உடல் வலுவானதில் வியப்பில்லை. தசைகள் இறுகித் தெரியும். அவளது கம்பீரத் தோற்றத்தால் தோழிகள் அவளைச் செல்லமாகக் 'கட்ஸ்' என்று அழைப்பதுண்டு.

அந்தச் சம்பவம் அவளது உறுதியை நினைக்கத் தோன்றும். அவள் பயிற்சி முடித்தவுடன் இருபது கடல்மைல் நீந்துவதற்காக அவளின் குழு கடலில் இறங்கியது. இரவு பன்னிரண்டு மணிக்கு ஆரம்பித்த பயிற்சி காலை எட்டு மணிக்கு மேலாகியும் முடிந்தபாடில்லை. மாலிகாவின் வாயிலிருந்து இரத்தம் வரத்தொடங்கியது. அவளை கரை யேறுமாறு பணிக்கப்பட்டது. மாலிகா தான் நீந்தி முடிக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தாள். முழுவதும் நீந்தி முடித்த பின்னரே

# பூத்த

அவள் கரை ஏறினாள். எந்த நோய் வந்தாலும், தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்துமுடித்த பின்னரே ஓய்வாள்.

அவளது கடற்சண்டைக் களங்களைக் கூறிக்கொண்டே போகலாம். கிளாலியில் மக்கள் பாதுகாப்புப் பணியிலும், இன்னும் பூநகரி மீதான தவளைத் தாக்குதலிலும் அவளது படகு கடலில் இறங்கியது. கரும்புலியாய் இருளில் அவள் இலக்குத்தேடி அலைந்த நாட்கள் மெய்சிலிர்க்க வைப்பன.

இறுதியாக அங்கயற்கண்ணி நீரடி நீச்சற் பிரிவிலிருந்துதான் திருமலைத் துறைமுகத்துக்குப் போனாள். அவள் தனது இலக்கை அண்மிப்பதற்கு நீண்ட தூரம் நடக்க வேண்டியிருந்தது. பாதை முழுவதும் சேறு. காலடிகளை ஒழுங்காக எடுத்து வைக்க முடியாதபடி முழங்காலளவு சேறு இருந்தது. அட்டைக் கடிக்குள்ளால் சிலிண்டரையும் தோளில் சுமந்தபடி செல்வது சாதாரணமாக நினைத்துப்பார்க்க முடியாதது. கரும்புலிக்கேயுரிய அசாத்திய துணிவும், தன்னம்பிக்கையும்தான் எல்லாவற்றையும் செய்யக்கூடிய வலுவை நிறையவே தந்தன. கூட வழியனுப்பச் சென்ற தோழிகள் அந்த அனுபவத்தை நெகிழ்ச்சியுடன் நினைவு கூர்ந்தார்கள்.

"கடைசியா எங்களுக்கெல்லாம் சாப்பாடு குழைச்சுத் தந்தாள். அடிபட்டுச் சந்தோசமாய்ச் சாப்பிட்டம்."

இறுதியாக வழியனுப்பிய அந்தத்தோழியின் கன்னத்தில் தட்டி, "நான் போய் வெடிக்கிறபோதுதான் இந்த நோ மாறும்" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

கூடவே வந்த வேவு எடுத்துக்கொடுத்த கடற்புலித் தோழர்களிடமும் இருநூறு மீற்றரிலேயே விடைபெற்றுப் போனாள். இலக்குப் பெரியது. சாதனையும் பெரியதுதான். நகர்ந்து கொண்டிருந்த கடற்படையினரின் டோரா அவளது இலக்கானது. 1996.12.08 அன்று அந்த இலக்கினோடு துறைமுகத்தினுள் புகுந்து மாலிகாவும் இல்லாமற்போனாள். அவளுக்குப் பணிந்த அந்த அசுர அலைகள் அவளை அள்ளிச் சென்றிருக்கக் கூடும். நாங்கள் இக்கரையில் நின்றிருந்தோம். அலைகள் மட்டும் திரும்பி வந்தன.

## மேஜர் கண்ணகி

அந்தச் சண்டை அவளது பொறுமையின் எல்லையைத் தொட்டு விட்ட சண்டைதான். சண்டையின் வெற்றிக்காக, சண்டைக்குப் போக முடியாது உழைக்க வேண்டிய நாட்கள் அவை.

சண்டையிலிறங்கும் போராளிகள் பற்றிய கள அறிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு கடல் கடந்த பயணத்தை மேற்கொண்டு மண்டைதீவை நோக்கி அணிகள் முன்னேறின. சண்டைக்கான அறிக்கை



விபரத்தில், அடங்காத அவளின் பெயர், அவளது பிறந்த மண்ணிலிருந்து எப்படி மறைந்து போக முடியும்? யாருக்கும் சொல்லாமல், தளபதிக்குத் தெரியாமல் அந்தச் சண்டைக்குச் சென்று, திறமையாக அடிபட்டு, காயமடைந்த போராளிகளின் எல்.எம்.ஜி யை எடுத்து அடித்து, இயக்க விதிகள், கட்டுப்பாடு, தண்டனை என்பதையும் மீறி தனது மண் உணர்வே அவளிடம் முன்நின்றது என்பதை ஆழமாக எம்மால் புரிந்து கொள்ள முடிந்தது. அந்தச் சண்டையோடு இதுவரை அவளை அறியாதவர்களுக்கும் கண்ணகி

# மலர்கள்

அறிமுகமானாள். 'குட்டித்தம்பி' என கண்ணகியால் செல்லமாக அழைக்க ப்படும் டொங்கான் துப்பாக்கி, இந்தச் சண்டையின்பின் அவளின் கைகளில் மிளிர்ந்தது. உக்கிரமாக நடந்த 'சூரியக்கதிர்' சண்டையில் அத்துப் பாக்கியால் எதிரியை இலக்கு வைத்து தேடித்திரிந்து அழித்த, அந்தத் துணிவு மிக்க பெண்ணை இந்த மண்ணுக்கு இனங்காட்டியது விடுதலைப் போரா ட்டமே.

கண்ணகி! இந்தப் பெயரைக் கேட்கும்போது, மதுரை மாநகரை ஆவேசத்துடன் தீப்பற்றி எரியவைத்த அந்தப் பெண்ணின் ஞாபகம் அனைவருக்கும் வந்திருக்கும். நீண்ட மூக்கும் எதையும் உன்னிப்பாக நோக்கும் கழுகுப் பார்வையுடன், எதையும் இலகுவில் செய்துமுடிப்பேன் என்ற தன்னம்பிக்கையுடன் அதிகம் அலட்டிக் கொள்ளாத, வார்த்தைகளை அளந்து கதைக்கும் ஒரு நிதானமான பெண் போராளியே மேஜர் கண்ணகி. ஆத்திரம், ஆவேசம் இவற்றுக்கு இடமளிக்காத ஒரு செயற்திறனுள்ள இனிய போராளி இவள்.

தன் தாயைப் போலவே சிறு வயதிலேயே தாயை இழந்துவிட்ட கண்ணகியையும் சகோதரர்களையும் அன்போடு வளர்த்த தந்தையில் அவளுக்கு அளவற்ற அன்பு. 'ஹலோ மிஸ்டர்' என்று தந்தையைப் பெயர் சொல்லி அழைத்து ஒரு நண்பரைப் போல உரையாடும் அவளது இயல்பான போக்கு யாரையும் கவர்ந்துவிடும். தீவகம்தான் அவளின் பிறப்பிடம். அங்கு புலரும் இனிய காலைகளில் ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகடிப்பாய் இனிமையாய்க் கழிந்தது அவளின் இளமைக்காலம். படிப்பில் நல்ல கெட்டிக்காரி. பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் அதிக புள்ளிகளைப் பெறுவாள். பிள்ளையை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என்ற தந்தையின் விருப்புக்கேற்ப போட்டி போட்டுக்கொண்டு படிப்பாள். எல்லோரையும்போல தீவக மண்ணிலிருந்து அந்தக் குடும்பமும் இடம்பெயரும் நாள் வந்தது. பிறந்த மண், சொந்த மண் எதிரியின் உறைவிடமாய் மாறுவதை ஏற்க முடியாமல் இடம்பெயர்ந்தனர்.

படிப்பில் அவள் கொண்டிருந்த ஆர்வம், குடும்பத்தில் அவள் வைத்திருந்த பாசம் இவையே அவளது விடுதலைப் பயணத்துக்கான ஆதாரங்கள். இரண்டாம் ஈழப்போர் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு நாளில் அவள் இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டாள். இயக்கத்தில் சேர்ந்தவுடன் பயிற்சி, பின் சண்டை, எதிரியை வெற்றி கொள்ளும் தாக்குதல்கள் என எண்ணியிருந்த அவளுக்கும் இன்னும் சில போராளிகளுக்கும் பயிற்சி எடுக்கும் முன்பெ அரசியல் வேலைத்திட்டம் காத்திருந்தது. பயிற்சி எடுக்காத போராளிகளாக, சைக்கிளில் அலைந்து அரசியல் வேலைத் திட்டங்களைச் செய்யும் அதேவேளையில், ஏனைய புதியவர்கள் பயிற்சி எடுத்து, சண்டைக்குப் போய்வந்தனர். எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஒரு வருடத்துக்கு மேலாக சண்டைக் கனவுகளைத் தூரவைத்து, இயக்கத்தின் கட்டளைப்படி வேலை செய்த போராளிகளுள் அவளும் ஒருத்தி.

விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் இருபத்துமூன்றாவது பயிற்சி முகாம் அவளை ஒரு சிறந்த போராளியாக இனங்காட்டியது. சின்னத் தவறு செய்தாலும் கவலைப்பட்டு, அத்தவற்றை அடுத்தமுறை விடக் கூடாது என்பதில் உறுதியாக நடந்துகொள்வாள். பயிற்சியைத் தொடர்ந்து பல பாசறைகளில் புடம்போட்டு வெளிவந்தபோது அவள் RPD-LMG கனரக ஆயுதப் பயிற்சி ஆசிரியர். பயிற்சி ஆசிரியர்களுக்குரிய கடின பயிற்சிகளை திறமையாக எடுத்ததோடு, குறிபார்த்துச் சுடுவதிலும் அவள் கைதேர்ந்தவள். படை யணிகளுக்குப் பயிற்சி அளித்து புதியவர்களை கனரக ஆயுதக்காரர்களாக்க தானும் அவர்களோடு இணைந்து பயிற்சி எடுத்தாள். அப்போதெல்லாம் சண்டைக்களங்கள் அவளது கனவுகளில் மட்டும்தான்.

முல்லைத்தீவுச் சண்டை அணிகளின் தலைவியாக, பதற்றமற்ற நிதானமான துணிவோடு களத்தில் அவளும் நின்றாள். அந்தத் தாக்குதலை வெற்றியுடையதாக்கி எமக்குத் தந்துவிட்டு அணியிலிருந்து அன்று அவள் காணாமல் போனாள். ஆரம்பத்திலிருந்தே தான் கரும்புலியாகச் செல்லவேண்டும் என்ற பிடிவாதத்துடன் இருந்த அவளை, படையணிக்கும் பயிற்சிமுகாமுக்கும் தேவை என்ற காரணத்தால் சிறப்புத் தளபதி மறித்து வைத்திருந்தார். அதிகம் அலட்டிக் கொள்ளாத, நிதானமான, செயல்திறன்மிக்க கண்ணகி இப்போது எம்முடன் இல்லை என்பதை மீறி இந்த மண்ணுக்கும், விடுதலைப்போராட்டத்துக்கும் இன்னும் அவளது தேவை இருந்தது என்பதே உண்மை.

தொடர்ச்சி 6 ம் பக்கம்...

www.tamilarangam.net



# நெஞ்சில் பூத்த ....

## மேஜர் கஜாளினி

மெல்ல எங்கள் மனங்களைத் தொட்டு? எங்களுக்கு மகிழ்வையூட்டி எங்களுக்குள் ஆழமாகப் பதிந்துவிட்ட போராளி அவள். நீண்ட பயணங்களிலெல்லாம் களைத்து, சோர்ந்துபோன நேரங்களில் உறுதியூட்டி,



சிரிப்பை வரவழைத்து எல்லாவற்றையும் இலகுவாக்கி செய்து முடிக்க வேண்டும் என்று ஊக்கமளித்தவள். அவள் எங்களோடு பழகிய நாட்களில் எங்கள் மனக்கூட்டுக்குள் நிறைந்துபோன நினைவுகள் இவை.

மேஜர் கஜாளினி ஒருவித்தியாசமான போராளி. போராளிகளுடனும் பொது மக்களுடனும் பழகுவதில் கஜாளினி தனித்துவமானவள். 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதி. அவளின் பயிற்சிக்காலம் அவளின் போராட்ட வாழ்வின் ஆரம்ப நாட்கள். அந்த நாட்கள் உற்சாகமாக இருந்தன. கஜாளினி ஒரு திறமையான போராளியாக தன்னை மாற்றிக்கொண்ட காலப்பகுதி அதுதான். பயிற்சி முகாமில் அவளை எல்லோரும் மணி என்றுதான் அழைப்போம். அவளின் கட்டையான உருவமும், அவளின் நடையையும் வைத்து தோழிகள் மணி என்று அழைத்தால் அவளின் முகத்தில் புன்னகை மட்டும் வரும்.

பலாலி இராணுவத்தளத்தைச் சுற்றி 1990ஆம் ஆண்டின் இறுதியில் காவல்நிலைகள் போடப்பட்டபோது கஜாளினியும் அங்குதான் நின்றாள். இதன்போது எதிரியின் 'சினைப்பர்' தாக்குதலால் தொண்டையில் காயம். இந்தக் காயத்தினால் பின்னர் அவள் சில வேளைகளில் திக்கித்திக்கிக் கதைப்ப துண்டு.

தான் கடற்புலிக்குப் போகப்போறேன் என்று கூறி தலைவருக்குக் கடிதம் எழுதிவிட்டு, அவரின் பதிலுக்காக எதிர்பார்த்திருந்த நேரம் நாம் அவளைக் கேலி செய்ததுண்டு.

"நீ, தொண்டையில காயப்பட்டு சும்மா கதைக்கேக்கையே திக்கித் திக்கிக் கதைப்பாய். அங்கை கடலுக்கை நீந்திப்போய் 'பொக்கான்' மாதிரித்தான் கிடப்பாய்"என்றால், அவள் சிரித்தபடி சண்டைபிடிப்பாள்.

அவள் அரசியல் வேலை செய்யும்போது மக்கள் மத்தியில் பிரபல்யமானாள்.

மிதிவண்டிகளில் அவள் வெய்யிலும் மழையும் பாராது அவள் அரசியல் வேலை செய்த நாட்கள் மறக்க முடியாதவை. முல்லை மாவட்ட மகளிர் அமைப்பின் பதில் பொறுப்பாளராகக் கடமையாற்றிய காலங்களில் பிள்ளைக ளுக்கும் அவளுக்கும் இடையே மிகுந்த நெருக்கம் இருக்கும். அவளது கதைகளும் அறிவுரைகளும் கூட எம்மை இதமாகத் தடவிவிடும். முகாம் கலகலத்தபடி இருக்கும்.

இவ்வாறுதான், ஒரு முறை பாடசாலையின் கண்காட்சியில் கலந்து கொள்ள இவளுக்கு அழைப்புக் கிடைத்தது. அப்போது அவள் அரசியல் வேலைகளுக்குப் புதிது. மேடைப் பேச்சுக்கும் புதிது. மேடைப்பேச்சு என்றாலே, அச்சமும் நடுக்கமும் கொண்ட அவளைப்பார்க்க ஒரு புறம் சிரிப்பாகவும் பாவமாகவும் இருக்கும்.

இவளை மேடையில் பேசுவதற்குக் கூப்பிட்டார்கள். ஒரு நிமிடம் 'நீ, பேசு, நான் பேசேன்' என்று மாறிமாறி விவாதம். ஒருவாறு கஜாளினி மேடையேற வேண்டியதாயிற்று.

மைக்கைப்பிடித்த கைகள் நடுங்கின. பதற்றத்துடன் கொத்தணி அதிபரை வாய்தவறி "குத்துணி அதிபர் அவர்களே" என, நாங்கள் வந்த சிரிப்பை அடக்கப் பெரும்பாடுபட்டோம்.

இதன்பிறகு நாங்கள் எல்லோரும் அவளைக் 'குத்துணி, குத்துணி' என்றே கிண்டல் செய்வோம். அந்த நேரங்களில் "பொறுங்கோ நான் எப்பிடிப் பேச்சாளர் என்று சொல்லக்கூடிய வகையில் செய்து காட்டுறன்" என்ற சவால் அவளிடமிருந்து வரும்.

1993ஆம் ஆண்டு பூநகரிச் சண்டை யிலும், புலிப்பாய்ச்சல் சண்டையிலும் வழமையான உற்சாகத்துடனேயே நின்று சண்டைபிடித்தாள்.

இதன் பிறகு அவள் தொடர்ச்சியாக சண்டைக்களங்களிலேயே நின்றாள். சூரியக்கதிர் என்ற பெயரில் இராணுவம் யாழ்குடாவைக் கைப்பற்ற எடுத்த நடவடிக்கையை எதிர்த்த சண்டை களிலெல்லாம் அவளும் நின்றாள். ஓயாத எறிகணை மழைக்குள் தப்பி நின்று, சண்டைபிடித்த கணப்பொழுதுகள் மறக்க முடியாதவை.

முல்லைச் சமருக்கும் ஓயாத பயிற்சியின்பின் சென்றாள். வெற்றியோடு மீண்டும்வந்து இன்னொரு களத்துக்குச் செல்லுவேன் என்று அவள் கூறியபடியே, அடுத்த சண்டைக்களமும் உடனேயே அமைந்தது.

முல்லை முகாம்வீழ்ந்த கையோடு தனது இராணுவ மேலாதிக்கத்தை நிலைநாட்ட வேண்டி ஆனையிறவு இராணு வத்தளத்திலிருந்து கிளிநொச்சி நகரைக்கைப்பற்ற சிறிலங்கா இராணுவம் முன்னேறிக்கொண்டிருக்க, அங்கு அணிகள் நகர்ந்தன. கஜாளினி தன்னுடைய அணியுடன் புறப்பட்டாள். தாக்குதல்கள் ஆரம்பமாகின. அந்தச் சண்டை அவளின் இறுதிச் சண்டை. வெட்டைவெளி, இராணுவத்தின் இலக்கு களை நோக்கியதாய் நகர்வு. அன்று எமது அணிகள் இறங்கித் தொடுத்த தாக்குதலில், கஜாளினி, அணியின் பதில் பொறுப்பாளராக முன்னின்று வழிநடத்திச் சென்றாள். பொறுப்பாளர் காயப்பட்டவுடன் அந்தக் கடமையை ஏற்று முன்னுக்குச் சென்றாள்.

டாங்கிகள் சகிதம் எதிரி பெரும்படையாய் முன்னேறி தலைநிமிரமுடியாத எறிகணை களை ஏவ, இறுதிவரை சண்டை பிடித்தாள். இவளுக்கு அடுத்த பொறுப்பாளர் 'உதவி தேவையா' என்று அடிக்கடி வோக்கியில் கேட்க,

'நான் கவனிக்கிறன், சமாளிக்க முடிகிறது' என்ற கடைசிச் சொல்லுக்குப் பிறகு அவளது குரலை நாங்கள் கேட்கவே யில்லை. நெற்றியில் காயப்பட்டு ரவை பின்பக்கத்தால் வந்து இரத்தம் ஆறாய் ஒழுகி 1996.09.26 அன்று கஜாளினி வரவேயில்லை. அதன் பின் நாங்கள் 'குத்துணி' என்று அழைக்கின்ற அவளது குரலைக் கேட்கவே யில்லை. ✸

# மறுக்கப்பட்ட உரிமைகள்; வதைபடும் தமிழர் வாழ்வு

**"தை பிறந்தால் வழி பிறக்கும் என்று கூறுவார்கள். தற்பொழுது சமாதானத்தையும் சுபீட்சத்தையும் நோக்கிச் செல்லும் அந்தப் புதிய வழி பிறந்துள்ளது."**

இது சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரணதுங்க ஈழத் தமிழர்களுக்கு விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தி.

தை பிறந்து அதன் பின்னர் மாசியும் பிறந்து, இன்று ஆனியும் பிறந்து விட்டது. ஆனால், வவுனியா தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களுக்குத்தான் ஒரு வழியும் பிறக்கக் காணோம்.

பட்டியில் அடைக்கப்பட்டுள்ள ஆடு, மாடுகளைப்போல பாடசாலை மண்டபங்களிலும், களஞ்சியக் கட்டிடங்களிலும், கோழிப்பண்ணைக் கட்டிடங்களிலும் மூச்சுமுட்டத் திணறியபடியே அவர்களில் வாழ்வு கழிகிறது. மறுபக்கம் திரும்பிப் படுக்க முடியாதளவு இடநெருக்கடி நிலவுகிறது. ஏராளமான மக்கள் ஓரிடத்தில் குவிந்திருந்தால் இயல்பாகவே பாதிப்படைகின்ற சுற்றுச் சூழலிலிருந்து பெருகுகின்ற கொடிய நுளம்புகளின் தொல்லை தாங்கமுடியாது. நிம்மதியாகத் தூங்கமுடியாத இரவுகள். பெண் - ஆண் வேறுபாடுகளின்றி காலைக் கடன்களை நிறைவேற்றுவதற்காக மணித்தியாலக் கணக்கில் மூக்கைப் பொத்தியவாறு காத்திருக்க வேண்டியுள்ளது.

தடைமுகாம்களில் போதிய மருத்துவ வசதி சிறிலங்கா அரசால்



செய்துகொடுக்கப்படாததால் குழந்தை களிலிருந்து முதியவர்கள்வரை மலேரியா, நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம் என்பவற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு மயங்கித் துவண்டுபோய் கிடப்பதைவிட வேறு வழியில்லை. பிரசவ வேதனையால் துடிக்கும் தாய்மார் சுற்றிக்கட்டிய சேலை மறைப்பின் நடுவே குழந்தையைப் பெற்றெடுக்கின்ற அவலமும் தொடர்கின்றது. சொந்த ஊரில் எப்படி எப்படியெல்லாமோ வாழ்ந்து வாழ்வின் இறுதிக்கணங்களை தூரத்தே வாழும் தன் பிள்ளைகளுடன் கழிக்கவென வந்து, தடைமுகாமில் துன்பத்துக்கு மத்தியில் கண்ணை மூடுகின்ற முதியவர்களின் கடைசி ஆசைகளெல்லாம் காற்றிலே கரைகின்றன.

நோயால் துடிக்கும் பலரில் ஒருவர், இருவர் இராணுவத்தினரால் வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்படுகின்றனர். இதுகூட வெறும் கண்துடைப்பு நடவடிக்கைதான். கண்டும் காணாததுபோல் இராணுவம் அலட்சிய மாக இருப்பதும் இராணுவத் தினரின் காலைப் பிடித்துக் கெஞ்சியும் பயனில்லாமல் பல உயிர்கள் பரிதாபமாகப் போய்ச் சேர்ந்துவிட்டன.

கடந்த நவம்பர் மாதம் 18ஆம் திகதி ஜீவன் பவளரதி (வயது 25) என்பவர் தடைமுகாமில் இறந்த குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார். தாயின் வயிற்றிலேயே அந்தப் பிஞ்சு இறக்கக் காரணம் இராணுவத்தினரின் பாராமுகமே ஆகும்.

பத்து வயதுச் சிறுமியான நித்தியானந்தன் கெற்சியா என்பவர் செப்ரிசீமியாவினால் பாதிக்கப்பட்டார். இவரை வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்ல அவரது பெற்றோர் எடுத்த முயற்சிகள் யாவும் இராணுவத்தினரால் நிராகரிக்கப்பட்டன. உயிர் பிரியும் இறுதிக்கட்டத்தில் அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் இருநாட்களுக்கு முன்னர் மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் உயிர் பிழைத்திருப்பார் என்று கூறினார்கள்.

இதேபோல, இழுப்பு நோயினால் பாதிக்கப்பட்ட முதியவர் ஒருவர் யாருடைய உதவியுமே இல்லாத நிலையில் உயிரை விட்டுள்ளார். இவை

தொடர்ச்சி 12 ம் பக்கம்...


www.tamilarangam.net



# வவுணதீவு இராணுவத்தள அழிப்பில் மகளிர் படையணியின் முக்கிய பங்கு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுணதீவின் இரு இராணுவ முகாம்கள் மீது, 06-03-1997 அன்று அதிகாலை ஒரு மணியளவில் விடுதலைப் புலிகள் பாரியதொரு தாக்குதலைத் தொடுத்தனர். இத்தாக்குதலின்போது வவுணதீவு இராணுவ முகாம் முற்றாக அழிக்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான பெண் புலிகளும் கலந்துகொண்ட இத்தாக்குதலில் மட்டு – அம்பாறை பிரதேசத்தின் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி



லெப். கேணல் மதனா உட்பட தொண்ணூறுக்கும் அதிகமான புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பின் பிரதான முகாம்களுள் அடங்குகின்ற இவ்விரு இராணுவ முகாம்களின் மீதும், ஒரே நேரத்தில் விடுதலைப் புலிகளின் படையணிகள் தாக்குதல்களைத் தொடுத்தன. அதிகாலை 1.00 மணியளவில் ஆரம்பித்த இத்தாக்குதல் நடவடிக்கை காலை 7.30 மணி வரை இடம்பெற்றது. அண்மையில் இடம்பெற்ற புளுகுணாவை இராணுவ முகாம் தாக்குதலை அடுத்து, கிழக்கில் இடம்பெற்ற பெரிய தாக்குதல் இதுவாகும்.

கிழக்கில் இவ்வருட ஆரம்பத்திலேயே சிறிலங்கா இராணுவம் ரிவிஜெய என்ற இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. குறித்த இராணுவ நடவடிக்கையின் இலக்கை இராணுவத்தினர் தாம் அடைந்துவிட்டோம் என்று கூறிய சில நாட்களில் நடாத்தப்பட்ட வவுணதீவுத் தாக்குதல் சிறிலங்கா அரசுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

வவுணதீவு முகாமும் வவுணதீவு பாலத்தில் இருந்த இராணுவ முகாமும் ஒரு சேரவே விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டன. சுமார் ஆறரை மணி நேரங்கள் இடம் பெற்ற இத்தாக்குதலின்போது பெருந்தொகையான ஆயுதங்கள் அள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகளின்போது நூற்றுக்கதிகமான இராணுவத்தினர் பலியாகியதுடன், பெருமளவிலான படையினர் படுகாயமடைந்தும் உள்ளனர்.

தாக்குதல் நடந்துகொண்டிருக்கும் இம்முகாம் நோக்கி உதவிக்கு வந்த படையினரை புலிகளின் மற்றொரு அணியினர் வழிமறித்துத் தாக்குதல் நடாத்தினர். வவுணதீவுப் பாலத்தையும் தகர்த்து படையினரின் முயற்சியை முறியடித்தனர்.

பெரும் எண்ணிக்கையான பெண் புலிகள் பங்கேற்ற இத்தாக்குதலில் மட்டு – அம்பாறைப் பிரதேசத்தின் மகளிர் படையணிச் சிறப்புத் தளபதி லெப். கேணல் மதனா, வினோதன் படையணித் தளபதி லெப். கேணல் பாலேந்திரா உட்பட தொண்ணூறுக்கும் அதிகமான புலிகள் வீரச்சாவடைந்தனர். இதில் பதினான்கு பெண்புலிகள் அடங்குவர்.

மட்டு – அம்பாறைப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக நடந்த தாக்குதல் நிகழ்வுகளிலும் மற்றும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளிலும் லெப். கேணல் மதனாவின் செயற்பாடுகள் முதன்மையானவை. வவுணதீவின் வெற்றிக்காக மகளிர் படையணியின் சார்பில் தாக்குதல் நடவடிக்கையை வழிநடாத்திச் சென்ற லெப். கேணல் மதனாவின் பங்கு குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து நடந்துவரும் இத்தாக்குதல்கள் மூலம் கிழக்கில் இராணுவத்தின் ஆதிக்கம் கேள்விக்குறியாகியுள்ளது.

இவ்வாண்டின் ஆரம்பத்திலேயே கிழக்கில் பெரும் இராணுவ வீழ்ச்சிகளையும் நெருக்கடிகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசு, தற்போது கிழக்குப் பிராந்தியப் படை முகாம்கள் அனைத்தையும் அதி உச்சப் பாதுகாப்பு நிலையில் இருக்குமாறு உத்தரவிட்டிருக்கிறது.

"தாக்குதலில் பெண்புலிகளே அதிகளவில் ஈடுபட்டனர்" – வவுணதீவில் காயமடைந்த சிப்பாய் தெரிவிப்பு.

"வவுணதீவு முகாம்மீது புலிகள் தாக்குதல் நடத்தியபோது கஜபா, விஜேபாகு, எஸ். எல். எம், ஜீ. சீ. எல். ஏ என நான்கு படையணிகள் அங்கு இருந்தன. சற்றுத் தொலைவில் மினி முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது" என வவுணதீவு முகாம் மீதான தாக்குதலில் காயமடைந்த சிப்பாய் ஒருவர் தெரிவித்தார்.

"தேநீர் தயாரிக்கத் தயாராகிக் கொண்டிருந்தவேளை, புலிகள் குண்டுத் தாக்குதலை நடத்த ஆரம்பித்தனர். முகாமுக்குள் வந்து விழுந்த குண்டு வெடித்ததில் 10 சிப்பாய்கள் ஸ்தலத்தில் பலியாகினர். இத்தாக்குதலில் பெண்புலி



லெப். கேணல் மதனா

உறுப்பினர்களே அதிகளவில் காணப்பட்டனர். விமானப்படையின் முகாமை சென்றடையும் எண்ணத்துடன் சென்றுகொண்டிருந்த படையினருடன் பின்தொடர்ந்துகொண்டிருந்தவேளை, பெண்புலிகள் சிலர் எம்மைத் துரத்திச் சுட்டனர்" என மேலும் அவர் தெரிவித்தார். ✳

கிழக்கில் இவ்வருட ஆரம்பத்திலேயே சிறிலங்கா இராணுவம் ரிவிஜெய என்ற இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. குறித்த இராணுவ நடவடிக்கையின் இலக்கை இராணுவத்தினர் தாம் அடைந்துவிட்டோம் என்று கூறிய சில நாட்களில் நடாத்தப்பட்ட வவுணதீவுத் தாக்குதல் சிறிலங்கா அரசுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

## அழைப்பு ....

இருக்கையிலேயே மீண்டும் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு தமிழ்க் குழுக்களுக்குக் கிட்டியுள்ளது. ஆனால், இவ்வழைப்பானது இந்த நடவடிக்கைக்கு எதிராக வெளியில் இருந்து வரும் கண்டனங்களின் வலுவைக் குறைப்பதற்குக் கூறப்பட்டதாகும். எடுத்துக்காட்டாக, இன்று தமிழகத்திலும் இலங்கைத் தமிழ் மக்கள் வாழும் மேற்குலக நாடுகளிலும் இவ்விராணுவ நடவடிக்கைக்கு எதிராகத் தமிழ் மக்கள் குரல் கொடுத்து வருகின்றனர். இது சர்வதேசத்தின் கவனத்தை ஓரளவேனும் கவர்வதாகவே உள்ளது. இது சிறிலங்கா அரசைப் பொறுத்து பெரும் அழுத்தங்களை விளைவிக்காது விடினும்கூட, அரசு தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்தப்பட வேண்டிய தேவையை ஏற்படுத்தக் கூடியதேயாகும். இந்த நிலையில் தமிழ்க் குழுக்களுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதோ அன்றி ஆரம்பிப்பது போன்று காட்டிக் கொள்வதோ சிறிலங்கா அரசுக்கு தேவையான ஒன்றாக உள்ளது. ஆனால், அரசியல்தீர்வு விடயத்தில் எதுவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தமாட்டாது என்பது அரசுக்குத் தெரியும். இது தமிழ்க் குழுக்களுக்கும் தெரிந்ததொரு விடயமே. ஆனால், இது தெரிந்திருந்தும் தமிழ்க் குழுக்கள் அரசின் கோரிக்கையை நிராகரிக்கப் போவதில்லை. ஏனெனில், அர்த்தமற்ற பேச்சுவார்த்தைகளே அவர்களின் அரசியல் வாதத்திற்கு அடித்தளமாக உள்ளது. இந்த வகையில் தற்போது இது தமிழ்க் குழுக்களைப் பொறுத்து தமது அரசியல் வாழ்நாளை நீடிக்க மற்றுமொரு காட்டிக்கொடுப்புக்கான சந்தர்ப்பம் எனலாம். ✳

(நன்றி : ஈழநாதம்)

## மதிப்பீட்டுக்கு ....

ஆகையினால், மீண்டும் இந்த நடவடிக்கையை அரசு ஆரம்பித்தால் பெரும்பாலும் அது இராணுவத்திற்கும் பெரும் இழப்பை ஏற்படுத்தும் என்று துணிந்து கூறமுடியும். அத்தோடு, சிறிலங்கா இராணுவத்தின் எல்லைக்கு மீறியதாக இது இருக்கும் என்றும் துணிந்து கூறமுடியும். அத்தோடு, இது தனியாக விடுதலைப் புலிகளின் பலம் குறித்து தாம் செய்த தவறான மதிப்பீடாக மட்டும் இருக்கும் என சிறிலங்கா அரசு எண்ணிவிடக் கூடாது. இது ஒட்டு மொத்தமாக விடுதலைப் புலிகள் குறித்தும் அவர்கள் தலைமை தாங்கி நடத்தும் விடுதலைப் போராட்டம் குறித்தும் தாம் கொண்ட தவறான மதிப்பீடு என்பதைச் சிங்கள அரசு புரிந்து கொள்ள வேண்டும். இதை மறந்து தவறான மதிப்பீட்டுடன் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்ததுபோல் வேறு நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளுமானால், அதற்குரிய பெறுபேறுகளையும் அரசே அனுபவிக்க வேண்டிவரும். ✳

(நன்றி : ஈழநாதம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வன்னி மண் மறவர்களின் பிறப்பிடம்!

# வீரத்தின் விளை நிலம்!

- நக்கீரன் -

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில் என்கிறமாதிரி சந்திரிகா அரசு சமாதானம் என்று ஒருபுறம் பேசிக் கொண்டு, மறுபுறம் போரைப் பலமடங்கு வேகத்தில் நடத்தி முடிக்க மும்முரமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

"வடக்கு – கிழக்கில் நடைபெறும் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் பொருண்மிய அபிவிருத்தியைக் காண அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. போரிற்கு முடிவு காணாமல் பொருண்மிய அபிவிருத்தி காண முடியாது. இந்தப் போரினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 4 ஆயிரத்து 800 கோடி ரூபா செலவாகிறது." சந்திரிகாவின் மே தினப் பேச்சிது.

இப்படித் தேவாரம் பாடிக்கொண்டு மறுபுறம் வவுனியா –கிளிநொச்சி தரைப்பாதையைத் திறக்கும் முயற்சிகள் இராணுவ நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வவுனியா – கிளிநொச்சிப் பாதையின் இருமருங்கிலும் உள்ள கிராம மக்கள் விமானக் குண்டுவீச்சுக்கும் எறிகணை தாக்குதலுக்கும் அஞ்சி கிழக்கு வன்னிக்கு இடம்பெயர்ந்துள்ளார்கள்.

சந்திரிகா அரசின் இரக்கமற்ற பொருண்மியத் தடையால் போதிய உணவு, உடை மற்றும் மருந்துக்குத் திண்டாடிய தமிழ் மக்கள் இந்த இடப்பெயர்வால் மேலும் மேலும் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஏப்பிரல் மாதம் பிரித்தானிய வெளியுறவு அமைச்சின் முயற்சியால் சந்திரிகா – ரணில் இருவருக்கும் இடையில் இனப்பிரச்சினை சம்பந்தமான உடன்பாடு கைச்சாத்திடப்பட்டபோது விரைவில் போரிற்கு ஒரு முடிவு கட்டப்பட்டு நாட்டில் சமாதானமும், அமைதியும் நிலைநிறுத்தப்படப் போவதாகப் பலர் எண்ணினார்கள்.

அந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட ஒரு சில மணித்தியாலங்களில் வெளியுறவு அமைச்சர் லட்சுமன் கதிர்காமர் தொலைநகல் மூலம் பத்திரிகையாளர்களை அழைத்து, பத்திரிகையாளர் மாநாட்டை கடுகதி வேகத்தில் கூட்டி அந்த உடன்பாட்டை பகிரங்கப்படுத்தியது மக்களது எதிர் பார்ப்புக்கு எண்ணெய் வார்த்தது.

ஆனால் இன்று அந்த உடன்பாடுபற்றி பேச்சையும் காணோம் மூச்சையும் காணோம்.

அந்த உடன்பாட்டுக்கு அடிகோலிய பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் மல்கெம் றிவ்கிண்ட் நடந்து முடிந்த பிரித்தானிய பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுள்ளார். பழமைவாதக் கட்சியின் தோல்வி எல்லோரும் எதிர்பார்த்ததுதான். அதில் யாருக்கும் சந்தேகம் இருந்ததில்லை. கேள்வி என்னவென்றால், தோல்வியின் விளிம்பில் இருந்த ஒரு கட்சியின் அமைச்சரும் துணை அமைச்சரும் இந்த உடன்பாட்டுக்கு ஏன் அவசரப்பட்டார்கள் என்பதே.

எது எப்படி இருந்தாலும் இதற்குமுன் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் போலவும், காணப்பட்ட உடன்பாடுகள் போலவும் இந்த உடன்பாடும் ஏட்டுச் சுரைக் காயாக இருந்து விடப்போகிறது என்பதில் சந்தேகமில்லை. இந்த உடன்பாட்டை சுதந்திரக் கட்சியோ, பொதுசன ஐக்கிய முன்னணியோ இன்னும் அங்கீகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மையில் இந்த உடன்பாடு போரை நிறுத்தி அரசு – விடுதலைப் புலிகளுக்கு இடையிலான பேச்சு வார்த்தைக்கு அடிகோல எழுதப்பட வில்லை. மாறாக, "பொது எதிரியான" விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் கைகோர்த்துக் கொள்ள வழிசமைத் திருக்கிறது என்றே கொள்ள வேண்டியுள்ளது.

இந்த உடன்பாட்டினால் அரசு – விடுதலைப் புலிகள் இரகசியப் பேச்சுக்கு இடமில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அட்டன் டன்பார் மைதானத்தில் நடந்த ஐ.தே.க. மேதின கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

வழமைபோல, "விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசு பேசக்கூடாது. விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வந்து சேரும் பாதைகள் மூடப்பட்ட பின்னர் தேவையானால் பேச்சு நடாத்தலாம்" எனக் கண்டி மல்வத்த பௌத்த பீடாதிபதி வண. ரம்புக்வெல விபாசி தேரர் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். மொத்தத்தில் இந்த உடன்பாடு எதுவித அர்த்தமும் அற்ற வெறும் கண்துடைப்பு என்று சொல்லிவிடலாம்.

சந்திரிகா அரசின் போர் ஆயத்தங்களுக்கு பெருவாரி பணச் செலவில் இறக்கப்படும் ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் நாளும் பொழுதும் இறக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றன.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலட்சக்கணக்கான 'ஆட்டிலறி' எறிகணைகள் போதிய பண்டகசாலைகள் இல்லாத காரணத்தால் தரையிறக்கப்படாது கப்பலில் நடுக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இந்த ஆண்டில் இதுவரை எண்ணிப் பன்னிரண்டு விமானங்களை இழந்த சிறிலங்கா விமானப்படை அதனை ஈடுசெய்ய விமானங்களை வாங்கப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறது.

இதேபோல் கடற்படையின் ஆள்பலம் ஆயுதபலம் கப்பல் பலம் இவற்றை மூன்று மடங்காக அதிகரித்தால் மட்டுமே கடற்படை தனது பணிகளைப் பூரணமாக நிறைவேற்ற முடியும் எனக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திசேரா கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் கூறியிருக்கிறார்.

இது எதைக் காட்டுகிறது என்றால் பிச்சைக்காரன் புண்போல, சிறிலங்காவின் இராணுவத் தளபதிகளுக்கு போர் ஒரு காமதேனுவாக அட்சய பாத்திரமாக இருந்து வருகிறது. போர் முடிவடைந்தால் தங்கள் பிழைப்புக் கெட்டுவிடும் என்று இந்த சிங்கள இராணுவத் தளபதிகள் நினைக்கிறார்கள். போரை முன்னெடுக்கும் சந்திரிகா அரசு, 'கோவிலுக்கு நேர்ந்துவிட்ட ஆட்டுக்கு நன்றாகத் தீனிபோட்டு வளர்ப்பதுபோல' இந்த இராணுவம் கேட்பதையெல்லாம் கொடுத்து அதனை வளர்த்து வருகிறது.

இராணுவம் போரை மட்டுமல்ல, அரசிற்குள் இன்னொரு அரசாக இருந்து கொண்டு செயற்படுகிறது.

இதுவரை காலமும் இராணுவ ஆக்கிரமிப்பில் இல்லாத மன்னார் பெருநிலப்பரப்பில் வதியும் தமிழ் மக்களுக்கு வழங்க, நிவாரண உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், பங்கீட்டுப் பொருட்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் மூலம் பொதுவாக 'விற்பனை செய்யப்பட்டு வந்த பொருட்கள் யாவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு வாகனத் தொடரணி மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வந்தன.

இவற்றிக்கு இப்போது படையினரால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் 19,000 குடும்பங்களைச் சேர்ந்த 70,000க்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பட்டினிச் சாவை எதிர்நோக்குகிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்ட வாழைச்சேனை, நாசிவன்தீவு படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வேண்டிய வற்றைச் செய்யுமாறு வாழைச்சேனை பிரதான செயலர், இந்து இளைஞர் பேரவைத் தலைவர், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் கூட்டாக விடுத்த வேண்டுகோளை இராணுவம் நிராகரித்துள்ளது.

மன்னார் மீனவர்கள் இரவில் மீன்பிடிக்க இராணுவம் தடைசெய்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பகலில் மீன்பிடிக்க பல கட்டுப்பாடுகள் படையினரால் விதிக்கப்பட்டுள்ளது.

'எடிபல' இராணுவ நடவடிக்கையின் விளைவாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்தும் இவற்றில் இருநூறுக்கும் குறைவான குடும்பங்களே மீளக் குடியேறியுள்ளன. அரசின் ஆக்கிரமிப்பில்லாத விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் சுமார் 80,000 பேர் வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் அகதிகளாவர். மடு தேவாலயத்தில் பெரும் எண்ணிக்கையிலான அகதிகள் இருக்கிறார்கள். இப்பகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை லொறிகளில் ஏற்றிச் செல்வதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது.

இந்த இராணுவத் தடைகள் இராணுவம் அரசுக்குள் இன்னொரு அரசாக இயங்கிக் கொண்டிருப்பதை உறுதிப் படுத்துகிறது.

நிவாரணப் பொருட்களை நிறுத்தி மக்களைப் பட்டினிபோட்டு வதைத்தால் அவர்கள் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குத் திரும்புவார்கள் என்று இராணுவம் கணக்குப் போடுகிறது.

இதே இராணுவம் தமிழ் மக்களின் பாரம்பரிய கிராமமான பறையனாலங்குளத்துக்கு சிங்களத்தில் 'சப்புமல்புர' என்று பெயர் சூட்டியிருக்கிறது. இந்தப் பெயர் 'வேண்டும்' என்றே தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சப்புமல்குமரய என்ற செண்பகப் பெருமாள்தான், யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது படையெடுத்துச் சென்று கனகசூரியன் என்ற மன்னனை வென்று தன்னை யாழ்ப்பாண அரசனாக முடிசூட்டிக் கொண்டான். கோட்டை அரசனான ஆறாம் பராக்கிரமபாகு தன் ஆட்சியின் முடிவில் (1467) முடிதுறந்து தன் மகள் வழிப்பேரனும் உலகுடைய தேவியின் மகனுமாகிய ஜெயவீர பராக்கிரமபாகுவிற்கு முடிசூட்டினான்.

இதனைக் கேள்விப்பட்ட செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்திலுள்ள படைகளை அழைத்துக் கொண்டு கோட்டைக்குச் சென்று போர்புரிந்து ஆட்சியைக் கைப்பற்றினான். பின் சிறிசங்கபோதி புவனேகபாகு என்னும் பட்டப் பெயரோடு கோட்டையை ஆட்சி செய்தான்.

எனவே பறையனாலங்குளம் பெயர் மாற்றத்தின் பின்னணி – அன்று சப்புமல்குமரய யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்றியதுபோல் இன்று தாங்களும் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிவிட்டோம் எனப் பறை சாற்றவே.

இதில் வேடிக்கை என்னவென்றால், பறையனாலங்குளத்தை சிங்கள இராணுவம் கைப்பற்ற கைகொடுத்த கைக்கூலிகளின் தலைவர்கள் இந்தப் பெயர் மாற்றத்தை எதிர்த்து அறிக்கைவிட்டிருக்கிறார்கள்.

சந்திரிகா அரசும் அதன் சிங்கள இராணுவமும் தமிழீழத்தின் மீது மேற்கொண்டுள்ள போர், ஒரு அப்பட்டமான ஆக்கிரமிப்புப் போராகும்.

தமிழ் மக்களைப் பட்டினிபோட்டு அந்த மக்களையும், அவர்களது மண்ணையும் அடிமை கொள்ளத் துடிக்கும் சந்திரிகா அரசும் அதன் சிங்களப் படையும் தமிழீழத்தில் இருந்து விரட்டியடிக்கப்பட வேண்டும். தமிழீழ விடுதலை என்பது – விடுதலைப் புலிகளின் குருதியினால் – மாற்றானுக்கு மண்டியிட மறுத்த பண்டாரவன்னியன் பிறந்த மண்ணில் எழுதப்பட இருக்கிறது. வன்னி மண் மறவர்களின் பிறப்பிடம். வீரத்தின் விளைநிலம். வேங்கைகளின் இருப்பிடம். ✷

www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைப் போராட்டம் (4)

## சர்வதேச அரங்கில்

இறுதியாக, தமிழீழத்திலும் சிறிலங்காவிலும் இயங்கி வரும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களினதும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களினதும் நிலையினை நோக்குவோம். இந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் சுதந்திரமானவையாக இருந்தாலும் இவற்றிற்கான நிதி பல்வேறு அரசுகளினாலேயே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்கப் படுகின்றன. இதனால், இந் நிறுவனங்களின் நிலைப்பாடுகள் பொதுவாக நிதி வழங்கும் அரசுகளின் நலன்களுக்கு எதிராக பாரிய அளவில் செல்ல மாட்டா என்பதை ஒரு பொது விதியாகக் கொள்ளலாம்.



சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கையில்.....

தமிழீழத்திலும் சிறிலங்காவிலும் இயங்கி வரும் அரசசார்பற்ற நிறுவனங்களில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC), அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்த் தானிகராலயம் (UNHCR), என்பன முக்கியமானவையாகும். இவற்றைவிட Medicine San Frontiers (MSF), Save the Children, Oxfam, Christian Aid போன்ற வேறு பல நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. இந் நிறுவனங்கள் யாவும் சிறிலங்கா அரசின் கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொண்டே இயங்கி வருகின்றன. இதனால் இவை உண்மை நிலையினை உலகுக்கு எடுத்துக் கூற முடியாதவையாக உள்ளன.

சிறிலங்கா அரசு இந் நிறுவனங்களைச் சுதந்திரமாக இயங்க அனுமதிப்பதில்லை. அத்துடன் தனது நலன்களுக்கு எதிராக இந்த நிறுவனங்கள் சிறிதளவேனும் செயற்படுவதாக சந்தேகம் எழும் பட்சத்தில் சிறிலங்கா அரசு பல்வேறு விதமான மிரட்டல்களையும் விடுக்கத் தயங்குவதில்லை. உதாரணமாக 1995ம் ஆண்டு நவாலி தேவாலயத்தின் மீது சிறிலங்கா விமானப்படை குண்டுத் தாக்குதல் நடத்தி அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழித்தபோது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உண்மை நிலையினை விளக்கி அறிக்கை விடுத்தது. இதனால் ஆத்திரமடைந்த சந்திரிகா அரசு செஞ்சிலுவைச் சங்கத்தை வெளியேற்றுவோம் என்பது போன்ற மிரட்டல்களை விடுத்தது. இதே போன்ற மிரட்டல் MSF நிறுவனத்திற்கும் நாகர் கோவில் படுகொலைகளை வெளிப் படுத்தியமைக்காக விடுக்கப்பட்டது. இப்படியாக இந் நிறுவனங்கள் யாவும் இன்று கையாலாகாத நிலை யிலேயே உள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்த் தானிகராலயத்தினை (UNHCR) எடுத்துக் கொண்டால் ஒரு வித்தியாசமான நிலைப்பாட்டினை இந் நிறுவனம் கொண்டுள்ளது. அதாவது, தனிநபர்களுக்கு பாதுகாப்புப் பிரச்சனைகள் இருந்தாலும் தமிழ் மக்கள், தமிழ் மக்கள் என்பதற்காக அடக்குமுறைக்கு சிறிலங்கா அரசினால் உள்ளாக்கப்பட வில்லை என்பதே அதுவாகும். உண்மை இதற்கு மாறாக இருந்த போதும், அதாவது தமிழ் மக்கள், தமிழ் மக்கள் என்பதற்காக சிறிலங்கா அரசினால் அடக்கி ஒடுக்கப் பட்டு வருகின்றபோதும் UNHCR இவ்வாறான நிலைப்பாடு ஒன்றினை எடுப்பதற்குக் காரணம் என்ன? மேற்கு நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்த ஈழத் தமிழர்கள் அந் நாடுகளில் அழையா விருந்தாளிகளாக உள்ளனர் மேலும் மேலும் ஈழத் தமிழர்கள் அகதிகளாக இந் நாடுகளுக்கு வருவதை இந் நாடுகள் விரும்பவில்லை. சிறிலங்கா அரசும் அதன் படைகளும் தமிழ் மக்களை தமிழ் மக்கள் என்பதற்காக துன்புறுத்துகின்றன என்ற உண்மையை ஏற்றுக் கொண்டால் ஈழத் தமிழர்களை அகதிகளாக ஏற்றுக் கொள்ளவேண்டிய தார்மீக நியாயம் ஏற்படும். இதனைத் தவிர்க்கவே மேற்கு நாடுகளின் நலன்களில் அக்கறை கொண்டுள்ள அமைப்பான UNHCR மேற்படி நிலைப்பாட்டினை எடுத்துள்ளது. ஆயினும், உண்மை நிலையின் அகோரத்தினால், முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முடியாத நிலையில் தனிப்பட்ட ரீதியில் சிறிலங்கா படைகள் மனித உரிமைகளை மீறி வருகின்றன என்ற நிலைப்பாட்டையும் UNHCR கொண்டுள்ளது.

> தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தலைவர் பிரபாகரன் அவர்கள் காட்டித் தந்த அடிப்படை நிலைப்பாடு ஒன்று எமக்கு வழிகாட்டியாக உள்ளது. தமிழீழ மக்கள் மட்டுமே தமிழீழ விடுதலையை வென்றெடுக்க முடியும் என்பதும் அழுத்தங்களுக்குப் பணியாமல் நிமிர்வதே போராட்டத்தின் வெற்றிக்கு அடிப்படையானது என்பதுவுமே அந்த நிலைப்பாடாகும்.

அடுத்ததாக, சிறிலங்கா, தமிழீழ நிலைமைகள் குறித்து அவதானித்து கருத்து வெளியிட்டு வரும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களை நோக்குவோம். இவற்றில் சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), US Committee for Refugees (USCR), British Refugee Concil (BRC), Article 19 என்பன குறிப்பிடத்தக்க சிலவாகும்.

1995ல் மூன்றாம் கட்ட ஈழப்போர் வெடித்தபோது பொதுவாக இந் நிறுவனங்கள் சிறிலங்கா அரசின் அட்டூழியங்களை மூடி மறைக்கும் தன்மையே காணப் பட்டது. ஆயினும் உண்மையினை விளக்கி தமிழ் மக்கள் கொடுத்த தொடர்ச்சியான நெருக்குதல்களின் விளைவாக இவற்றின் போக்கில் கணிசமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் சிறிலங்கா அரசின் அடாவடித்தனங்கள் இந் நிறுவனங்களினால் பலமாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. ஆயினும் சிறிலங்கா அரசின் அட்டூழியங்களின் முழு அளவும் இந் நிறுவனங்களினால் முற்றாக வெளிக் கொணரப்படவில்லை என்பதே கவலை தரும் உண்மையாகும்.

இந்த சர்வதேச நிலைமைகளுக்கு மத்தியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய பல்வேறு செயற்பாடுகள் உலகெங்கும் நடைபெற்று வந்துள்ளன. உலகின் பல்வேறு தலைநகர்களிலும் பல்லாயிரக் கணக்கில் தமிழீழ மக்கள் திரண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்துடனான தமது ஒருமைப்பாட்டினை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளனர். அத்துடன் உலகின் பல்வேறு பாகங்களிலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தினை விளக்கி மாநாடுகள், கருத்தரங்குகள், விளக்கக் கூட்டங்கள், சந்திப்புக்கள் என்பனவும் நடாத்தப்பட்டு வந்துள்ளன. உதாரணமாக இலண்டனில் 1996ம் ஆண்டு சுயநிர்ணய உரிமைக்கான தமிழரின் போராட்டம் என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. இம் மாநாட்டில் பிரித்தானியத் தொழிற்கட்சியின் முக்கிய வெளிநாட்டுப் பேச்சாளரான Derek Fatchett அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். இவர் தற்போது பிரித்தானிய அரசின் வெளிநாட்டமைச்சில் தென்னாசியப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான அமைச்சராக உள்ளார்.

## எதிர்கால சவால்கள்

தமிழீழத்தில் விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசின் இராணுவப் பிரயத்தனங்களை முறியடித்து வருகின்றனர். அத்துடன் எமது விடுதலைப் போராட்டத்திற்கான அங்கீகாரத்தினைப் பெறுவதற்கான அரசியல் நடவடிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.




இவற்றில் சிறிலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரங்களைத் தொடர்ந்தும் முறியடித்து உண்மைநிலையினை உலகுக்கு விளக்குவது மிக முக்கியமானதாகும். அத்துடன் தமிழீழ மக்களாக இணைந்து உறுதியாக நின்று நாம் ஒரு தேசிய இனம் என்ற உண்மையைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருவதும் மிக முக்கியமானதாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தலைவர் பிரபாகரன் அவர்கள் காட்டித் தந்த அடிப்படை நிலைப்பாடு ஒன்று எமக்கு வழிகாட்டியாக உள்ளது. தமிழீழ மக்கள் மட்டுமே தமிழீழ விடுதலையை வென்றெடுக்க முடியும் என்பதும் அழுத்தங்களுக்குப் பணியாமல் நிமிர்வதே போராட்டத்தின் வெற்றிக்கு அடிப்படையானது என்பதுவுமே அந்த நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாடு சர்வதேச அரங்கில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் மிகப் பொருந்தும். பல்வேறு காரணங்களுக்காக பல்வேறு சர்வதேச நிலைமைகள் எழும். இவற்றில் சில எமக்குச் சாதகமானவையாக இருக்கலாம்; சில பாதகமானவையாக இருக்கலாம். பாதகமான நிலைமைகளைக் கண்டு அஞ்சாமல், சாதகமான நிலைமைகளை வெற்றியாகக் கொண்டு தொடர்ந்து முன்னேறுவதே வெற்றிக்கு வழி சமைக்கும்.

> சிறிலங்கா அரசின் பொய்ப் பிரச்சாரங்களைத் தொடர்ந்தும் முறியடித்து உண்மைநிலையினை உலகுக்கு விளக்குவது மிக முக்கியமானதாகும். அத்துடன் தமிழீழ மக்களாக இணைந்து உறுதியாக நின்று நாம் ஒரு தேசிய இனம் என்ற உண்மையைத் தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருவதும் மிக முக்கியமானதாகும்.

- தீபன் -

(முற்றும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர் துடுப்பெடுத்தாட்ட

**"நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக் கொண்டு உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால், எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது"**

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

எவ்வித நம்பிக்கையையும் விட முதலில், தன்னம்பிக்கை உடையவர்களே நிலையான - உறுதியான - திடமான முடிவுடன் எக்காரியங்களிலும் ஈடுபடுவர். இவ் விடயத்திற்கும் 2வது ஆண்டாக நடைபெற்ற தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழாவிற்கும் நிச்சயமாக சம்பந்தமுண்டு. ஈழப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து போரின் கொடிய முகத்திற்கு எதிர்கொள்ள முடியாமல் தமிழீழத்தை விட்டுப் புலம்பெயர்ந்தனர் பல தமிழர்கள். இதில் கனடா நாட்டிற்கு அடுத்தபடியாக கணிசமான தொகையினர் பிரித்தானியாவில் வாழ்கின்றனர். இருப்பினும் புலம்பெயர்ந்த இத் தமிழர்களிடையேயான நெருங்கிய தொடர்புகள் பலருக்கு இல்லை என்றே கூறலாம்.

தாயகத்தை விட்டுப் பிரிந்திருப்பினும் அத் தேசம் விடுதலையடைய உதவி செய்ய வேண்டியது - தமிழர்களாகிய எங்கள் எல்லோரினதும் தார்மீகக் கடமையாகிறது. புலம்பெயர்ந்தாலும் தொடர்புகள் அற்றுப் போகாமல் எம்மினத்தின் தோற்றப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். சிங்கள இனவாத அரசின் தமிழீழ விடுதலைக்கெதிரான வெளிநாட்டுப் பிரச்சாரம் பெரும்பாலும் பிரித்தானியாவை மையமாக வைத்தே நடைபெறுகிறது. இவ்வகையில், சிறிலங்கா அரசினால் தமிழ் மக்களைத் திசைதிருப்பும் வழியில் பல விடயங்கள் தொடரப்பட்டன. இதில் ஒன்றுதான் "சிறிலங்காப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம்" எனும் பெயரில் சிங்கள அரசால் ஊக்குவிக்கப்பட்ட துடுப்பெடுத்தாட்ட விழா. குறிப்பிடத்தக்களவு பெயர் பெற்ற தமிழ்க் கல்லூரிகள் பங்கெடுத்துக் கொண்ட இவ் விழாவில் கணிசமானளவு தமிழ் மக்களும் பார்வையாளராகக் கலந்து கொண்டனர். இதில் உள்ள விசித்திரம் என்னவென்றால், முழுமையாக சிங்களவர்களாலேயே ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்பட்டு வந்த இந்த நிகழ்ச்சியில் சேர்க்கப்பட்ட பணம் (பெரும்பாலான தமிழர்களினது) சிங்களப் படையினரது வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது என்பதுதான். எனவே, ஒரே நாளில் பல தமிழர்கள் ஒன்றுகூடி சந்திக்கக்கூடிய பல நிகழ்வுகள் தமிழர்களால் செய்யப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகக் கருதப்பட்ட நிலையிலேயே இந்தத் தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா கடந்தாண்டு உருப்பெற்றது. இருப்பினும், முதன்முறையாக இது தொடங்கவிருந்தபோது ஓரிரு பாடசாலைகளைத் தவிர பெரும்பாலானோர் மத்தியில் தயக்கம் இருக்கத்தான் செய்தது. இறுதியில் தன்னம்பிக்கை வென்றது. முதலாண்டிலேயே ஓர் உறுதியான நம்பிக்கையைத் தரக்கூடிய அளவிற்கு இவ் விழா வெற்றி பெற்றது. அந்த உறுதியான நம்பிக்கையுடன் இரண்டாவது ஆண்டில் இவ் விழா காலடி வைத்தது.

லண்டனில் 26-05-97 இலை துளிர்கால காலைவேளை. அன்றைய விடுமுறை தினமன்றுதான் இரண்டாவது ஆண்டாக நடைபெறும் தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா. பொன்நிறக் கதிர் சூரிய ஒளி எங்கும் பரவிய அந்த வேளையில் குறிப்பிட்ட



விழாவை ஆரம்பித்து வைத்த இங்கிலாந்து அணி வீரரான நசார் குசைன்—

நேரப்படியே காலை 8 மணியளவில் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. சகல கல்லூரிகளினதும் விளையாட்டு அணிகள் மைதானத்தில் இருந்த தங்கள் இல்லங்களுக்கு வந்திருந்தன. முன்னாள் இங்கிலாந்து துடுப்பெடுத்தாட்ட அணி வீரரும், ஆங்கில மாவட்ட கழகமான எஸ்செக்ஸின் வீரருமான நசார் ஹுசைன் புகைப்படம் எடுக்கும் நிகழ்வுக்கு வந்திருந்தார். எல்லாக் கல்லூரிகளினதும் அணிகள் அவருடன் சேர்ந்து புகைப்படங்கள் எடுத்துக் கொண்டன.

இதனைத் தொடர்ந்து ஒன்பது மணியளவில் முதல் சுற்றுத் துடுப்பெடுத்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகின. நான்கு மைதானங்களில் நடைபெற்ற இப் போட்டியின்போது பார்வையாளர்கள் சிறிது குறைவாகத்தான் காணப்பட்டனர். காலை பத்து மணியின் பின்னர்தான் மக்கள் தொடர்ச்சியாக மைதானத்திற்கு வந்து கொண்டிருந்தனர். வாகனத் தரிப்பிடத்திலிருந்து மைதானத்தின் பிரதான வாயில் சிறிது தூரத்தில் இருந்தமையால், மக்களை ஏற்றிச் செல்வதற்கென போக்குவரத்துச் சேவை செய்யப்பட்டிருந்தது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயம். அமைப்பாளர்கள் கடந்தாண்டு அனுபவத்திலிருந்து அதனை யதார்த்தமாகச் சிந்தித்து செயற்படுத்தியிருக்கிறார்கள். அடுத்ததாகக் குறிப்பிட வேண்டிய விடயம் தமிழீழ உணவகம். மிகவும் அருமையான முறையில் திட்டமிட்டு, பல விதமான பலகாரங்கள் உணவுப் பண்டங்கள் தயாரித்து வைத்திருந்தார்கள். அவை பனங்காய் பணியாரம் என்பதில் இருந்து கூழ் – மீன் பொரியல் என்பது வரை நீண்டதொரு பட்டியல். அத்துடன் தாகம் தீர்க்க இளநீர் (சிறிலங்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதல்ல).

பதினொரு மணியளவில் முதல் சுற்று வலைப்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகின. மைதானத்தின் இன்னொரு பகுதியில் சிறார்களுக்கான காற்றடைக்கப்பட்ட கோட்டை வடிவிலான பலூன் அமைக்கப்பட்டிருந்தது. குழந்தைகள் அங்கு துள்ளி விளையாடிக் கொண்டிருப்பதை பெற்றோர்கள் மிகுந்த மகிழ்வுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். மைதானத்தின் இன்னோர் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் என்பன கூடாரங்கள் அமைத்திருந்தன.



பாடசாலைகளின் கொடியேற்ற நிகழ்வின் போது—

ஆண்டுதோறும் மிகவும் பிரமாண்டமான முறையில் பிரபல்யமாக நடைபெறும் லண்டன் மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்ற விரும்புவர்களின் பெயர் விபரங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் எடுத்துக் கொண்டிருந்தனர். இவ்வாண்டு நடைபெற்ற ஓட்டப்போட்டியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் பல தமிழர்களும் பங்கெடுத்துள்ளனர். தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர் தமது கூடாரத்தின் உள்ளே தமிழீழ மக்களின் வாழ்வு முறைகளை விபரிக்கும் வகையில் ஓர் சிறு கண்காட்சி ஒன்றையும் நடாத்தினர். மதிய வேளை தாண்டி ஒரு மணியளவில் நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக லண்டன் வோல்தம் போரஸ்ற் நகரசபையின் பிதா சிறிமதி சில்வியா பௌல்சன் (Mayor Lady Silvia Poulsen) கலந்து சிறப்பித்தார்.



சிறந்த விளையாட்டு வீரனாக மனோ (யாழ். மத்திய கல்லூரி)—

தொடர்ந்து துடுப்பெடுத்தாட்ட கால்இறுதிப் போட்டிகள் ஆரம்பமாகின. அத்துடன் வலைப்பந்தாட்ட கால், அரையிறுதிப் போட்டிகளும் தொடங்கின. சுமார் 2 மணியளவில் பிரதம விருந்தினராக பாகிஸ்தான் துடுப்பெடுத்தாட்ட அணியின் முன்னாள் தலைவரும் சிறந்த சகலதுறை ஆட்ட வீரருமான வாசீம் அக்ரம் அவர்கள் கலந்து கொண்டார். சிறுவர்கள் பெரியோர்கள் எனப் பலரும் அவருடன் சேர்ந்து நின்று புகைப் படங்கள், கையெழுத்துக்கள் பெற்றுக் கொண்டனர். 2.30 மணியளவில் தமிழீழ அணி எதிர் பாகிஸ்தான் அணியுடனான சர்வதேச துடுப்பெடுத்தாட்டப் போட்டி இடம்பெற்றது. இதில்



வோல்தம் பொரஸ்ற் நகரபிதா சிறிமதி சில்வியா பௌல்சன்

தமிழீழ அணியில் பிரபாகரன், பிரபானந்தன், பிரதீபன், சஞ்ஜீவன்,

# விழா 1997



துடுப்பெடுத்தாட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ் மத்திய கல்லூரி அணியினர்...

சாந்திகுமார், சுதர்சன், விஜயநாதன் ஆகியோர் பங்கெடுத்தனர். மட்டுப்படுத்தப்பட்ட 10 ஓவர்களில், முதலில் தமிழீழ அணி துடுப்பெடுத்தாடியது. 2 ஆறு, 7 நான்கு ஓட்டங்கள் என தமிழீழ அணி மிகவும் சுறு சுறுப்பாக ஆடி 92 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. கடைசி ஓவரில் இறுதிப் பந்து வீச்சில் பிரபானந்தன் ஆட்டமிழந்தது துரதிஸ்டமானது. இதனடிப்படையில், தமிழீழ அணி சகல விக்கட்டுக்களையும் இழந்த நிலையில் பாகிஸ்தான் அணி ஆடத் தொடங்கியது. மூன்று விக்கெட்டுக்கள் இழந்த நிலையில் பாகிஸ்தான் அணி 93 ஓட்டங்களைப் பெற்று வெற்றி கொண்டது. இருந்தபோதிலும், மிகவும் நெருக்கடி நிலையிலேயே பாகிஸ்தான் அணி இவ் ஓட்டங்களைப் பெற்றது. அதாவது, இறுதி ஓவரில் கடைசிப் பந்து வீச்சிற்கு இரண்டு ஓட்டங்கள் எடுத்தாலே வெற்றி என்ற நிலையிலேயே ஆட்டம் நடைபெற்றது. மைதானம் ஒன்றில் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த இந்த ஆட்டத்தின்போது அங்கிருந்த பெரும்பாலான மக்கள் சுற்றிவரக் கூடிநின்று கரகோசம் செய்து விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தனர். தமிழீழம் விடுதலை பெற்று சில ஆண்டுகளில் தமிழீழ துடுப்பாட்ட அணி அனைத்துலகப் போட்டியில் மிளிர்ந்து விளங்கும் என்பதற்கு இந்த ஆட்டம் நல்ல அறிகுறி.

பிற்பகல் மூன்று மணியளவில் தமிழீழ உணவகம் மிகுந்த நெரிசலாகக் காணப்பட்டது. அங்கு வேலைசெய்து கொண்டிருந்த தொண்டர்கள் இயந்திரமாகச் சுழன்று கொண்டிருந்தார்கள். வெய்யிலும் சற்று அதிகமாகத் தான் இருந்தது. இதேவேளை புனர்வாழ்வுக் கழக ஆதரவில் ஓர் மரத்தின் கீழ் 'முட்டி அடி' நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஓர் வேறுபாடு – தயிருக்குப் பதிலாக நிறமூட்டிய தண்ணீர் பாவிக்கப்பட்டது. இருப்பினும் கூடிநின்ற மக்கள் மிகுந்த குதூகலமாகக் காணப்பட்டனர்.

நான்கு மணியளவில் வலைப் பந்தாட்ட இறுதிப் போட்டி நடைபெற்றது. இளவாலை புனித கன்னியாஸ்திரியர் கல்லூரி எதிர் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி இடையில் போட்டி நடைபெற்றது. இதில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி வெற்றி பெற்று 97ஆம் ஆண்டின் தமிழர் வலைப் பந்தாட்ட வெற்றி வீராங்கனைகளாகினர். தொடர்ந்து மைதானம் ஒன்றிலும் இரண்டிலும் துடுப்பெடுத்தாட்ட அரைமிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. இதில் யாழ். இந்துக் கல்லூரியும், யாழ். மத்திய கல்லூரியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. ஆறு மணிக்கு இறுதிப் போட்டி ஆரம்பமாகியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி உற்சாகமாக விளையாடி மட்டுப்படுத்தப்பட்ட 5 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 44 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மனோ 18, விஜயநாதன் 18 ஓட்டங்களை எடுத்தனர். அடுத்து துடுப்பாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி நிதானமாக ஆடிக் கொண்டிருந்தது. இருப்பினும், கடைசி ஓவரில் 5வது பந்து வீச்சில் பிரபானந்தன் ஆட்டமிழந்தது வெற்றி வாய்ப்பை திசை மாற்றிவிட்டது. கடைசி ஓவரில் 9 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் இருந்த இந்துக் கல்லூரி அணி கடைசிப் பந்து வீச்சில் 4 ஓட்டங்கள் எடுத்தாலே வெற்றி என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. இறுதியில், இந்துக் கல்லூரி 3 விக்கெட் இழப்பிற்கு 43 ஓட்டங்களையே பெற்றது. இதில் பிரதீபன் 20, பிரபாகரன் 12 ஓட்டங்களை எடுத்தனர். அந்த வகையில், யாழ். மத்திய கல்லூரி 97ஆம் ஆண்டின் தமிழர் துடுப்பாட்ட வெற்றி வீரர்களாகினர். கடந்தாண்டும் இறுதியாட்டத்திற்கு இவ் இரண்டு கல்லூரிகளுமே தெரிவாகி யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது இங்கு குறிப்பிடத் தக்கது.

8 மணியளவில் வெற்றி பெற்ற வலைப்பந்தாட்ட–துடுப்பெடுத்தாட்ட அணிகளுக்கும், இறுதியாட்டத்தில் பங்கெடுத்த அணிகளுக்கும் வெற்றிக் கிண்ணங்கள் பரிசளிக்கப்பட்டன. இத் துடுப்பெடுத்தாட்ட சுற்றுப் போட்டியில் சிறந்த துடுப்பெடுத்தாட்ட வீரராக மட்டு. மத்திய கல்லூரியைச் சேர்ந்த திரு. செல்வன், சிறந்த பந்து வீச்சாளராக யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த திரு. பிரதீபன், சிறந்த விளையாட்டு வீரராக யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த திரு. மனோ ஆகியோர் தெரிவாகினர்.




வலைப்பந்தாட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணியினர்...

இறுதியாட்டத்தில் சிறந்த விளையாட்டு வீரராக திரு. மனோ (யாழ். மத்திய கல்லூரி) தெரிவாகினார்.




இறுதியாட்டத்தைப் பார்வையிடும் மக்களில் ஒரு பகுதியினர்...

இறுதியாக, வானவேடிக்கை சுமார் 20 நிமிடங்களுக்கு நடைபெற்றது. தமிழீழ வரைபடத்திலான வானவேடிக்கை ஒன்று சுமார் 5 நிமிடங்கள் தொடர்ந்து ஒளி வீசியவண்ணம் இருந்தது மிகவும் அழகாக இருந்தது. காலை 8 மணியிலிருந்து இரவு 9.15 மணிவரை நடைபெற்ற இவ் விழாவைக் கண்டு களிக்க வந்த 6000க்கும் அதிகமான மக்கள் (சிறுவர்கள் உட்பட) குதூகலமான மனதுடன், தாங்கள் ஒன்றுபட்டு திரண்டு வந்த இந்நாளில் தாயகத்திற்கும் ஏதோ ஓர் வழியில் உதவி செய்த மனநிறைவுடன் சென்றனர்.



துடுப்பெடுத்தாட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ். இந்துக்கல்லூரி அணியினர்...



மக்கள் யாவரினதும் மனதைக் கொள்ளை கொண்ட தமிழீழ உணவகம்...

இதில் களத்தில் பத்திரிகை சார்பாக நாம் குறிப்பிட விரும்புவது – இவ் விழா சிறப்பாக அமைவதற்கு மூலவேராக இருப்பவர்கள் நம் தமிழ் மக்கள் உட்பட சகல கல்லூரிகளினதும் விளையாட்டு அணி வீரர்கள். இவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். தனியாக துடுப்பெடுத்தாட்டப் போட்டி என்றில்லாமல், ஓர் தமிழர்களின் ஒன்றுகூடல் விழாவாக ஒவ்வொரு ஆண்டும் புதுமெருகுடன் மேலும் வளர்ச்சி பெற நாம் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் விளையாட்டு என்பது ஓர் இனத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானது. தமிழர்கள் புலம்பெயர்ந்த மற்றைய நாடுகளில் குறிப்பாக, கனடா, சுவிஸ், யேர்மனி போன்ற நாடுகளில் பல விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு மக்கள் ஆதரவுடன் திறமையாக நடாத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, பிரித்தானியாவிலும் உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகள் போன்று பல விளையாட்டுக்கள் காலஓட்டத்தில் மிகவும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட வேண்டியது ஓர் அவசியமான தேவையாக எம் மக்கள் முன் நிற்கிறது. ✱

**நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு முடிவு**

தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழாவில் நடாத்தப்பட்ட Vauxhall Astra காருக்கான நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு, கணனி மூலம் தெரிவு செய்யப்பட்டது. இக் கணனி தேர்வு வடிவமைப்பை தமிழர் ஒருவர் செய்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கம்: 1924

www.tamilarangam.net



# மறுக்கப்பட்ட உரிமைகள்...

மட்டுமல்லாமல், தத்தமது சுகாதாரத்திலே கூட மக்கள் அக்கறை எடுக்க முடியாத சூழ்நிலையில் பல புதிய கொடிய நோய்கள் அங்கு தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பண்படுத்தப்பட்ட குடும்பச் சூழலில் வளர்க்கப்பட்ட தமிழ் இளம் சமுதாயம் இத் தடுப்புமுகாம்களிலே முற்றிலும் புதியதொரு சூழ்நிலையைச் சந்திக்கின்றது. முப்பந்தைந்து முகாம் களில் தங்க வைக்கப்பட்டுள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் நாளாந்தம் உணவுக்காக ஐம்பது ரூபா

"சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான யுத்தம்" என்ற பெயருடன் தமிழீழப் பகுதிகளில் சிறிலங்கா அரசால் நடத்தப்பட்டுவரும் தமிழின அழிப்பு நடவடிக்கைகள், இந்த மண்ணில் ஆழ வேரோடிய தமிழரின் இருப்பை அசைத்துப் பார்க்க முயல்கின்றன. வீடு, வாசல், சொத்து சுகம், கல்வி, சுகாதாரம், எதிர்காலம் எல்லாவற்றையுமே கேள்விக்குறியாக்க முயல்கின்றன. வாழ்வின் எல்லாப் பாதைகளும் மூடப்படும்போது எங்கோ ஒரு திசையில் இன்னொரு பாதை திறப்பது வரலாற்று நியதி.

வழங்கப்படுகிறது. தூக்கத்தையும் உணவு உண்பதையும் தவிர, வேறெந்த வேலையுமே அற்ற நிலையில் பொழுது விரயமாகக் கழிகின்றது. இரவு, பகல் எனத் தொடர்ச்சியாகக் காட்டப்படும் திரைப்படங்களும் தவிர்க்கவே முடியாமல் உண்டான பெண் – ஆண் வேறுபாடற்ற நெருக்கமான சூழலும் சேர்ந்து நிச்சயமாக மாணவப் பருவத்தினருக்கு நல்லதொரு எதிர்காலத்தைக் கொடுக்காது. மாறாக மனிதனிடம் இயல்பாகவே உள்ள பாலியல் உணர்வுகளை வக்கிரமான முறையில் தோற்றுவிக்க முயலும்.

சின்னஞ்சிறு குழந்தைகளின் மனதில்கூட இந்தச் சிக்கலான சூழ்நிலை, அவர்களின் வயதுக்கு மீறிய வேண்டாத சிந்தனைகளை உருவாக்குகின்றது. ஒரு மனிதனின் சிந்தனைகளை வளர்ப்பது அவனைச் சுற்றியுள்ள புறச் சூழ்நிலையே ஆகும். இளைய தமிழ் சமுதாயத்தை வெறும் கனவுலக மாயைக்குள் மூழ்க வைப்பதன்மூலம், அவர்களின் இயல்பான சுதந்திர உணர்வுகளை சிங்கள அரசு துடைத்தெறிய முயல்கிறது.

ஒரு இளம் பெண் எட்டு சிங்களக் காவற்றுறையினரால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். வவுனியாவைச் சேர்ந்த ஐம்பத்தைத்து வயதான மாது ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் இதே பாதிப்புக்குள்ளாகினார். இரவு நேரங்களில், விசாரணைக்கு வருமாறு இளம் பெண்களை இராணுவம் அழைத்துச் செல்கின்றது. அப்பெண்களில் சிலர் திரும்பி வருவதே இல்லை. திரும்பும் திசையெல்லாம் இராணுவத்தினர்தான் தெரிகின்றனர். கேட்கவே காது கூசுகின்ற அவர்களின் அருவருப்பான கேலிகள், பார்வைகள், சேட்டைகளை வெளியே கூறமுடியாத பெண்கள் மனதுக்குள்ளேயே புழுங்குகின்றனர்.

இராணுவத்தால் சிறைபிடிக்கப்படும் இளைஞர்களில் சிலர் மிகவும் கொடுமையான சித்திரவதைக்கு ஆளாகின்றனர். பெற்றோல் விடப்பட்ட ரிசுப் பைகளுள் தலையைவிட்டுக் கட்டிவிட்டு அடித்துத் துன்புறுத்துகின்றனர். மெல்லிய கம்பிகளை காதுக்குள் விட்டுக் குத்துகின்றனர். இந்த வதைகளுக்கு ஆளாகியவர்கள் உளரீதியாகவும் பாதிப்படைகின்றனர். சிறிலங்கா அரசின் இந்த மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் எல்லாம் 'பயங்கரவாத தடைச்சட்டம்' என்ற போர்வையில் சட்டபூர்வமாக நியாயப்படுத்தப்பட்டு வருகின்றன. தமது பிள்ளைகளுக்கு வளமான எதிர்காலத்தைத் தேடிச் சென்ற பெற்றோர், அவர்களின் வாழ்வே நாசமாகி விடுமோ என்று தவித்துப் புலம்புகின்றனர்.

இவர்களுக்கு எப்போது "சுபீட்சத்தை நோக்கிச் செல்லும் வழி" பிறக்கும்?

"சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான யுத்தம்" என்ற பெயருடன் தமிழீழப் பகுதிகளில் சிறிலங்கா அரசால் நடத்தப்பட்டுவரும் தமிழின அழிப்பு நடவடிக்கைகள், இந்த மண்ணில் ஆழ வேரோடிய தமிழரின் இருப்பை அசைத்துப் பார்க்க முயல்கின்றன. வீடு, வாசல், சொத்து சுகம், கல்வி, சுகாதாரம், எதிர்காலம் எல்லாவற்றையுமே கேள்விக்குறியாக்க முயல்கின்றன. வாழ்வின் எல்லாப் பாதைகளும் மூடப்படும்போது எங்கோ ஒரு திசையில் இன்னொரு பாதை திறப்பது வரலாற்று நியதி. சிங்கள இனவாத பயங்கரத்தின் கொடிய கரங்களால் குரல்வளை நெரிக்கப்படும் தமிழினம், வேறெந்த வழியுமே அற்ற நிலையில் போராட முனைப்புப் பெறுவதும் அதே வரலாற்று நியதியால்தான். இதைச் சிங்கள அரசால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இதனால்தான், தமது தேவைகளுக்காகக் கொழும்பு நகருக்குச் செல்லும் தமிழர்களை அரசு கடுமையாக ஐயுறுகின்றது. தம் தேவைக்கென அங்கு வரும் ஒவ்வொரு தமிழனையுமே உடலில் குண்டுகளைக் கட்டிய தற்கொலைப் படையாளியாகவே எண்ணுகிறது. எதிரி மனப்பான்மையுடன் அணுகுகின்றது. கொழும்பிலே தமிழர்கள் தங்கியிருக்கும் விடுதிகள் திடீர் திடீரெனச் சோதனையிடப்படுகின்றன. அங்கு தங்கியிருக்கும் இள வயதினர் சிறைப்பிடிக்கப்படுகின்றனர். சித்திரவதைக் கூடங்களில் அடைக்கப்படுகின்றனர். காணாமற் போகின்றனர். குறிப்பிடப்பட்ட நாட்களுக்குமேல் விடுதிகளில் தங்கியிருக்கக் கூடாது என காலக்கெடு விதிக்கப்படுகின்றது.

கொழும்பு நகருக்குத் தமிழர்கள் வருவதை சிறிலங்கா அரசு முற்றாகவே விரும்பவில்லை. அதற்குக் காரணம், பாதுகாப்புப் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல, தமிழர்கள் மீது அரசு வைத்திருக்கும் நீண்டகால நிரந்தரப் பகையுணர்வும்தான் என்பது யாராலுமே மறுக்க முடியாத உண்மை. இந்த நிரந்தரப் பகையுணர்வு அதி உச்சத்துக்குப் போகின்ற காலங்களில் எல்லாம் (1957, 1958, 1977, 1983) அரசு இனப் படுகொலையை கட்டவிழ்த்துவிட்டது. இதன் போதெல்லாம் தமிழரின் உயிர்கள் மட்டும் பறிக்கப்படவில்லை. அவர்களுடைய வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டன. தங்க நகைகள் உட்பட பல பெறுமதியான பொருட்கள் பறித்தெடுக்கப்பட்டன. மொத்தத்தில் தமிழரின் பொருளாதாரம் நசிந்துபோகும் வகையில் அழித்தார்கள்.

தமிழரை கொழும்பு நகருக்கு வரவேண்டாம் என்று சொல்லவும் அரசால் முடியாது. அப்படிச் சொன்னால், நாடு இரண்டாகப் பிரிந்துவிட்டதா என்று எழும்புகின்ற கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய சிக்கலான நிலை உருவாகும். அதைவிட இன்னுமொரு புதிய சிக்கலும் உருவாகும். கொழும்பு மூலமாக தம் உறவினர்களிடம் போக முடியாத நிலையில், தமிழரெல்லாம் இடம்பெயர்ந்து தமிழகத்துக்குச் செல்ல முற்படுவர் (முற்படுகின்றனர்). இத்தகைய இடப்பெயர்வு இந்திய மத்திய அரசுக்கு ஏற்படுத்தும் தலையிடியின் விளைவாக இந்தியாவின் வேண்டாத் தலையீடுகளுக்கு சிறிலங்கா அரசு முகம்கொடுக்க வேண்டிவரும். அதைவிட இன்னுமொரு சிக்கலும் ஏற்படும். சிறிலங்கா அரசின் இத்தகைய நெருக்குதலினால் வெகுண்டெழும் தமிழ் இளைய தலைமுறை விடுதலைப் போராட்டத்தில் வேகமுடன் இணைந்துகொள்ள முயலும். அதனால் விடுதலைப் புலிகளின் படை பலம் அதிகரித்துவிடும்.

மொத்தத்தில் பார்க்கப்போனால், சிறிலங்கா அரசுக்கு கொழும்பு நகருக்குள் தமிழரை வரவிட்டாலும் சிக்கல், வரவிடாவிட்டாலும் சிக்கல். இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்த அரசு ஒரு புதிய வழியைக் கண்டுபிடித்தது. வாருங்கள் வாருங்கள் என இரு கரம் நீட்டி அழைத்தது. அழைப்பை ஏற்றுவந்த தமிழர்களை வவுனியாவிலே தடுத்தது. அடைத்தது. முடிந்தது விடயம். தீர்ந்தது சிக்கல்.

ஆனால் வெளி உலகுக்கு தன்னை நல்ல பிள்ளையாகக் காட்டிக்கொள்ள வேண்டுமே? "இவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க விரும்பாமல், இடம் பெயர்ந்து வந்தவர்கள்" என்று பரப்புரை செய்ததன் மூலம் அந்த மக்களை அரசு இழிவுபடுத்தியது. "இடம்பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வு கொடுக்க வேண்டும், புனரமைப்புச் செய்ய வேண்டும்" என்று பொய்களைச் சொல்லுவதன் மூலம் அரசு வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்கின்றது. அந்த நிதியை, தமிழரை அழித்து ஒழிப்பதற்கான போருக்காகச் செலவிடுகின்றது. இத்துணை நிதி உதவியும் சிறிலங்கா அரசுக்குக் கிடைக்கக் காரணமாயிருந்த அப்பாவித் தமிழர்களோ ஐம்பது ரூபாவுக்குச் சாப்பிட்டுக் கொண்டு வவுனியாத் தடைமுகாமில் அவல வாழ்வு வாழ்கின்றனர்.

ஏன் இந்தத் தடைமுகாம்களில் தமிழர்கள் குற்றவாளிகள் போன்று சிறை வைக்கப்பட்டுள்ளனர்?

இவர்கள் செய்த தவறு என்ன?

தமிழராகப் பிறந்தது குற்றமா?

கௌரவமாக, அமைதியாக வாழ விரும்பியது குற்றமா?

சிறிலங்கா அரசு தனது அரசியல் இலாபங்களுக்காக தமிழ் மக்களின் வாழ்வை எத்தகைய இழிநிலைக்குள்ளும் தள்ளிவிடுவது நேற்றைய, இன்றைய நிகழ்வல்ல. இதுவே நெடுநாளைய வரலாறு. இப்படியாகத் தமிழர்கள் மீது சிங்களம் செலுத்தும் இனவாத வக்கிரத்தின் ஒரு பகுதிதான் இன்றைய 'வவுனியாத் தடைமுகாம்' தந்திரோபாயம்.

-சந்திரிகா.

*தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக்கிளை நடாத்தும்*

## *விடுதலை கானம்பாடி 1997*

சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி

தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக்கிளை ஆண்டுதோறும் நடாத்தும் "விடுதலை கானம்பாடி" சிறந்த பாடகர் தெரிவுப் போட்டியின் 1997 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பங்குபற்றுவோருக்கான விதிகள்:

1. இதுவரை வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப்பாடற் தொகுப்புக்களிலிருந்து மாத்திரமே போட்டிக்கான பாடல்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.
2. போட்டியாளரின் தெரிவுக்காக இரண்டு பாடல்கள் அனுமதிக்கப்படும்.
3. இணைகுரற் பாடற்போட்டி, தனிக்குரற் பாடற்போட்டி என இரு வகைப் போட்டிகள் நடாத்தப்படும்.
4. தனிக்குரற் பாடப்போட்டி, 14 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு எனவும், 14 வயதிற்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு எனவும் இரு பிரிவுகளாகப் பிரித்து நடாத்தப்படும்.
5. இணை குரற் பாடற்போட்டிக்கு வயதெல்லை இல்லை. தெரிவு செய்யும் பாடல் இணைகுரற்பாடலாக இருத்தல் வேண்டும்.
6. முதற் சுற்றுப் போட்டியிற் தெரிவான பாடகர்கள் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படுவர்.
7. விண்ணப்பக் கட்டணமாக 75.00 DM செலுத்தப்பட வேண்டும்.

**T.R.O, Konto : 7360217,**
**BZ: 31070001, Deutsche Bank Monchengladbach.**

என்னும் காப்பக இலக்கத்திற்குப் பணத்தைச் செலுத்தி, பற்றுச்சீட்டுப் பிரதி ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

8. விண்ணப்பம் செய்வதற்கான இறுதித் திகதி : **30. 06. 97**
9. விண்ணப்பம் செய்யவேண்டிய முகவரி :

**E.Anandrajah**
**Tamilische Rehabilitations Organsation**
**Hompesch Str. 16, 41189 Monchengladbach.**

ஆர்வமுள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - யேர்மனிக்கிளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை

# துயரங்கள்

கோவலன்

''பரந்தாமா!...''

குசினியில் தேநீர் வைத்துக்கொண்டிருந்த அன்னம் தலையை நீட்டி வாசலால் எட்டிப் பார்த்துக் கூப்பிட்டாள்.

"நேரம் ஏழு மணியாகப்போகுது. ... .கூறுகெட்ட கழுதை... . .இன்னும் படுக்கையை விட்டு எழும்பேல்லை"

சுடுதண்ணி கொதித்து குமிழிவிடும் சத்தம் கேட்டது. பரபரவென்று பக்கத்தில் இருந்த பேப்பரை இரண்டாகக் கிழித்து சுடுதண்ணிப் பானையை இறக்கினாள்.

"மாலினி!. . மாலினி!. . குளிச்சது காணும் கெதியெண்டு வாடி. . .தேத்தண்ணி ஊத்தியாச்சு கெதியெண்டு குடிச்சிட்டு. . . வெளிக்கிடு"

"தலையைத் துடைத்தபடியே மாலினி குசினிக்குள் நுழைந்தாள்.

நான் றெடியம்மா. . .நீங்கள் போய்க் குளியுங்கோ நான் பரந்தாமனுக்கும் அப்பாக்கும் தேத்தண்ணியைக் குடுக்கிறன்"

"அவன் இன்னும் எழும்பேல்லை. . . கொப்பர் உந்தக் கடையடிமட்டும் போட்டார்... நீங்கள் போய் முதல்லை குளிச்சிட்டு வாங்கோ. . . நான்



எல்லாத்தையும் பாக்கிறன்"

அன்னம் மகளிடம் துவாயை வாங்கிக்கொண்டு "சவுக்காரம் எங்கை யடி?"

"கிணத்துக்கட்டிலை வைச்சனான். எடுங்கோ."

கிணத்தடிக்குச் சென்ற அன்னம் புறுபுறுத்தது கேட்டது.

"காகம் கொத்திக் கிணத்துக்குள்ளை விழுத்திப் போடுமெண்டு எத்தினைதரம் சொல்லுறனான். ..... இவளவை கேட்டால்தானே. ஒருநாளைக்கு விளட்டும் .... மாரிக்கிணறு இறைக்கவும் ஏலாது. "

மாலினி தேநீரை கோப்பையில் எடுத்துக் கொண்டு பரந்தாமன் படுத்திருந்த இடத்துக்கு வந்தாள். "டே எருமை மாடு எழும்படா. . .சனியன் தின்னுறதும் படுக்கிறதும்தான் வேலை."

"மாலினி! போடி அங்காலை"

"இந்தா தேத்தண்ணியைக் குடிச்சிட்டுப் படு. . . என்ரை ராசாவல்லே"

"போடி அங்காலை. . .. .இதிலை நிண்டியெண்டால் உதைப்பன்."

"பரந்தாமன் மீண்டும் போர்வைக்குள் சுருண்டுகொண்டான்.

"எனக்கென்ன . . . நானும் அம்மாவும், அப்பாவும் நல்லூருக்குப் போறம். . . இப்பிடியே கிடந்தியெண்டால் விட்டுட்டுத்தான் போவம்."

பரந்தாமன் வாரிச்சுருட்டிக்கொண்டு எழும்பினான்.

"அடச் சீ இண்டைக்கு சின்ன மாமாவின்டை கல்யாணமல்லோ மறந்து போனன். . . மாலினி பாயை ஒருக்கால் சுத்திவையடி. . .நான் முகத்தைக் கழுவிக்கொண்டு ஓடியாறன்."

ஒரு கையால் மாலினியிடம் தேநீரை வாங்கி மடமட வெண்டு குடித்துவிட்டு கோப்பையை அவள் கையில் திணித்து விட்டு

"நல்ல பிள்ளையல்லே... ஒருக்கா சுத்திவை .. .என்ன. . ?"

"சரி குமிக்காய் போய் வெளிக்கிடு"

பரந்தாமன் சறத்தை மடித்துக் கட்டியபடி கிணத்தடியை நோக்கி ஓடினான்.

"மண்டூகம்!. . .இவ்வளவு நேரமும் கண்டறியாத நித்திரை"

கிணத்தடியில் நிண்ட தாயைக் கண்டதும் சடாரென நிண்டான்.

"தலை லேசா இடிச்சுதம்மா. . . .அதுதான்."

"சரிசரி நான் குளிச்சிட்டன் வேகமா குளிச்சிட்டு ஓடியா .... கொப்பர் கடைக்கார மணியத்திட்டை கார் பிடிக்கப் போட்டார்"

"நான் கெதியா வாறன். . . நீங்கள் போங்கோ"

அவனுக்கு மழைக்குளிரில் குளிக்க விருப்பமில்லை. அன்னத்தின் தலை மறைந்ததும் சேட்டைக் கழற்றி வாளியில் போட்டவன் வேகமாக ஒரு வாளி தண்ணீரை அள்ளி கால் முகத்தைக் கழுவினான். பிறகுதான் பல்லு விளக்காதது ஞாபகத்திற்கு வந்தது.... . .சிறிது யோசித்தபின் அது பிழையில்லை என்று தானே தலை ஆட்டிக்கொண்டு துவாயை எடுத்துத் துடைத்துக் கொண்டான்.

வாசலில் கார் இரையும் சத்தம் கேட்டது.

"எல்லோரும் வெளிக்கிட்டாச்சா?"

மாணிக்கம் காரால் இறங்கியபடியே கேட்டார்.

"நாங்கள் எல்லோரும் றெடி. நீங்கள் தேத்தண்ணியைக் குடிச்சிட்டு கதவைப் பூட்டிக்கொண்டு வாங்கோ"

அன்னம் பட்டுச் சீலையை எடுத்துக் ஒதுக்கியபடி வீட்டுப் போட்டிக்கோவில் இருந்து இறங்கினாள்.

"நான் மணியத்தின்ரை வீட்டை குடிச்சனான். . .. வெளிக்கிடுங்கோ அதுகள் பத்து மணிக்கு தாலி கட்டு எண்டதுகள்"

மாணிக்கம் வீட்டைப் பூட்டிக்கொண்டு வந்து காரின் முன் சீற்றில் ஏறிக்கொண்டார்.

"மாலினி!. . . பின் படலை கட்டினதோடி?"

"இந்த அம்மாவுக்கு. . . அம்மா இருங்கோ அதெல்லாம் வடிவாச் சாத்தினது. . "

"சரிசரி நேரம் எட்டு மணி ஆகுது. கதைச்சுக்கொண்டு நிக்காமல் ஏறுங்கோ"

மாணிக்கம் திரும்பிப் பார்த்து சிடுசிடுத்தார்.

மூவரும் பின் சீற்றில் ஏறி அமர்ந்து கொண்டனர். நால்வரையும் ஏற்றிக் கொண்டு அந்தச் செம்மண் வீதியில் கார் விரைந்தது.

"இஞ்சருங்கோ காரை ஓரமாய் நிப்பாட்டச் சொல்லுங்கோ"

அன்னம் கணவனின் தோளைத் தட்டினாள். மாணிக்கம் பின்னால் திரும்பி என்ன என்பதைப் போல் பார்த்தார்.

"அப்பா . . . மேலை பொம்மர் சுத்திறமாதிரிக் கிடக்குது. "

மாலினி கார்க் கதவால் எட்டப் பார்த்தபடியே கூறினாள். எல்லோர் கண்களிலும் பயம் அப்பிப் பிடித்துக்கொண்டது.

"தம்பி ஒருக்கா காரை நிப்பாட்டு"

மாணிக்கம் நடுக்கத்துடன் காரோடும் இளைஞனின் தோளைத்தொட்டார்.

"றோட்டிலை நிப்பாட்ட இடமில்லை .. .ஒரே வெளியாக் கிடக்குது. கொஞ்சம் பொறுங்கோ அந்த மரத்தடியிலை நிப்பாட்டுவம்."

அவன் காரை வேகமாக ஓட்டத் தொடங்கினான். எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். திடீரென்று இரைச்சல் அதிகமாகக் கேட்டது.

"ஐயோ!. . பொம்பர்காரன் குத்திறான்"

அன்னம் பிள்ளைகள் இருவரையும் கைகளால் அணைத்துக்கொண்டு குளறினாள். கார் முன்னால் இருந்த ஆலமரத்தின் கீழ் சடாரென நிக்கவும் குண்டு மரத்தின் மேல் பட்டு வெடிக்கவும் சரியாக இருந்தது. ஆலமரக் கொப்புகள் நாலாபுறங்களும் சிதறிப் பறந்தன. பக்கத்தில் இருந்த வீட்டின் யன்னல் கண்ணாடிகள் பொலபொல வென உடைந்து கொட்டியது. றோட்டில் நின்ற மாட்டின் குடல் வெளிவந்தபடி கிடந்தது. அன்னம் கைகளைத் தூக்கிப் பார்த்தாள். இரத்தம் அப்பிக் கிடந்தது, மாலினியும் பரந்தாமனும் மடியில் சரிந்தி ருந்தனர்.

"இஞ்சேருங்கோ! ...."

கணவனை உலுப்பினாள். அவரும் அசையவில்லை. காரோடிய இளைஞர் கதவுக்கு வெளியே கிடந்து முனகிக் கொண்டிருந்தார்.

"மாலினி!... மாலினி ....

பரந்தாமன்!. . . பரந்தாமன்! ...."

ஒருவரிலும் அசைவில்லை.

"ஐயோ!. ....என்ரை ஐயோ! என்னைத் தன்னந்தனியா விட்டுட்டுப் போட்டியளோ!. . நான் என்ன செய்வேன் .. . மாலினி கொம்மாவை விட்டுட்டுப் போட்டியோடி"

பிள்ளைகளை அணைத்தபடி அன்னம் குழறிக்கொண்டிருந்தாள். ..... .ஒலி எழுப்பியபடி அம்புலன்ஸ் வந்து பக்கத்தில் நின்றது. ✷

---

### வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள்.

உங்கள் ஆக்கங்களை 04 - 07 - 1997 இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, LondonSE1 4QB.**



www.tamilarangam.net



# பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் செய்ய முடியாததால் அந்தச் சொல்லை உபயோகிக்காமல் விட்டுவிட்டார்கள்

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

**நீதிபதி:** ஐயா, அதை எங்கே சொல்கிறீர்கள்? சரி தொடருங்கள்.

**திரு. வயலன்கோட்**

**கேள்வி:** இந்த முழுக்கட்டுரையும் தேசிய விடுதலை இயக்கங்கள், ஒப்பந்தம்–1, ஜெனிவா மரபுகள் பற்றியது. நீங்கள் எழுதுகிறீர்கள் **"தேசிய விடுதலை இயக்கங்கள் பற்றிப் பேசும்போது இந்தக் கட்டுரையில், இந்தப்புத்தகத்தில், வேறு நல்ல வார்த்தைகள் கிடைக்காததால் பயங்கரவாதம், பயங்கரவாதி என்ற வார்த்தைகளை உபயோகிக்கப் போகிறேன்."**

ஐயா, நீங்கள் தேசிய விடுதலை இயக்கங்கள் பற்றிப் பேசுகிறீர்கள் பயங்கரவாதம் என்ற சொல்லையும் உபயோகிக்கிறீர்கள். ஆனால் அது தேசிய விடுதலை இயக்கங்களுக்குப் பொருந்தாது என்று கூறுகிறீர்கள்?

**சாட்சி:** நான் சொன்னது போல, நான் அதனை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஒப்பந்தம்–1 தேசிய விடுதலை இயக்கங்களைக் குறிப்பிடும்போது பயங்கரவாதம் என்ற சொல் சட்டரீதியாக பயங்கரவாதத்தைக் குறிப்பிடுகிறது என நான் நம்பவில்லை.

**கேள்வி:** ஆனால் ஒப்பந்தம்–1ன் கீழ் அது (பயங்கரவாதம்) வரைவிலக்கணம் செய்யப்படவில்லை. அப்படியானல் எப்படிச் சொல்லமுடியும்.?

**பதில்:–** ஒப்பந்தம்–1இன் முழுநோக்கமும் தேசிய விடுதலை இயக்கங்களை போர் சம்பந்தமான சட்டங்கள், வழக்கங்கள் இவற்றிற்கு உட்படுத்துவதேயாகும்......... அத்தோடு பயங்கரவாதத்திற்கான வரைவிலக்கணத்தைத் தவிர்ப்பதுமாகும்.

**கேள்வி:** ஆனால் பயங்கரவாதம் பற்றிய வரைவிலக்கணத்தை அது (ஒப்பந்தம்) தரவில்லை.

**பதில்:** தரவில்லை. ஆம்.

**கேள்வி:** மெத்தச்சரி. நான் விளங்கிக் கொள்ளவேண்டும். நீதியரசர் கூறியதைப்பார்ப்போம்.

"ஆய்வு நோக்கங்களுக்கு பொது மக்களுக்கு எதிராக அரசு அல்லாத தனி ஆட்களால் கட்டவிழ்த்துவிடப்படும் உலகளாவிய வன்முறையைப் பற்றியே நான் பேச விரும்புவேன்........"

எனவே ஐயா, எனக்குச் சொல்லுங்கள், நான் இப்போது வாசித்ததில் காணப்பட்ட பயங்கரவாதத்தை உட்கிரகிக்கின்றீர்களா? அல்லது உலகளாவிய வன்முறை தான்..........பயங்கரவாதம் என்று வரைவிலக்கணம் செய்கிறீர்களா?

**பதில்:–** நான் பயங்கரவாதத்தை வரையறை செய்யவில்லை. இதை நான் தெளிவு படுத்தியிருக்கிறேன். நான் நினைக்கவில்லை யாரும் அதை வரையறை செய்யலாம் என்று.

**கேள்வி:** ஆக, பயங்கரவாதம் பற்றிய வரைவிலக்கணம் உங்களிடம் இல்லை.

**பதில்:–** அதுதான் எனது சாட்சியத்தின் முழு அடிப்படை. சர்வதேச சட்டத்தில் பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கம் இல்லை. ஐக்கிய அமெரிக்கச் சட்டத்தில் பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் இருக்கிறது. இதுபற்றி உங்களுடன் கதைத்து இருக்கிறேன். நான் பயங்கரவாதத்திற்கு விளக்கம் தருவதற்கு அது சற்று வித்தியாசமானது.

## - பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

**கேள்வி:** நாம் மீண்டும் திரும்பி நோக்கினால், ஐயா......... நீங்கள் இன்று காலை இங்கு பேராசிரியர் குயிக்லி சாட்சியம் அளிக்கும்போது இருந்தீர்கள்.

**பதில்:–** பெரும்பாலான சாட்சியத்தை நான் செவிமடுத்தேன்.

**கேள்வி:** நல்லது. நான் அவருக்கு சில சம்பவங்களைச் சுட்டிக்காட்டினேன். பொதுமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை, நேரடியாகப் பொதுமக்களைக் குறிவைக்கும் தாக்குதல்களை நான் பேரூந்து நிலையங்கள், அங்காடிகள், பொதுக் கட்டிடங்கள்.........

ஐயா, நான் சரியாக விளங்கிக் கொண்டால், நீங்களும் பேராசிரியர் குயிக்கிலியின் நிலைப்பாட்டிலேயே இருக்கிறீர்கள்?

நீங்கள் இந்தச் செய்கைகள் சந்தர்ப்பங்களில் பயங்கரவாதம் என மதிப்பீடு செய்ய மாட்டீர்கள். காரணம் பயங்கரவாதத்திற்கு வரைவிலக்கணம் இல்லையென்பதாகும்?

**பதில்:–** இல்லை, நான் என்ன சொல்கிறேன் என்றால் இந்தச் செயல்கள் ஒப்பந்தம் ஒன்றின்கீழ் போர்க்குற்றங்களாகக் கொள்ளப்பட வேண்டும். பன்னாட்டுச் சமூகமும் இச் செயல்களை அவ்வாறே (போர்க்குற்றங்களாக) கணிக்கின்றன. பயங்கரவாதத்தை வரைவிலக்கணம் செய்ய முடியாத காரணத்தால் பயங்கரவாதம் என்ற சொல்லை உபயோகிக்காமல் விட்டுவிட்டார்கள். அவர்கள் (பன்னாட்டுச் சமூகம்) அதனை(செயல்களை) போர்க் குற்றங்கள் என்று வரையறை செய்துவிட்டார்கள். நான் நம்புகிறேன் பேராசிரியர் குயிக்கிலியின் சாட்சியமும் இவ்வாறுதான் அமைந்திருந்தது.

**கேள்வி:** பேராசிரியரே, இது நியாயமான கேள்வி என நம்புகிறேன். பயங்கரவாதத்திற்கு வரைவிலக்கணம் இல்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள்? அப்படித்தானே?

**பதில்:** இல்லை....... சட்டவாதி, பன்னாட்டு சட்டவாதி என்ற கோதாவில் நான் பன்னாட்டு ஒப்பந்தங்கள், வழக்குகள் இவற்றில் தங்கியிருக்கிறேன். ஐ. நாடுகள் சபையால் கடந்த 25 ஆண்டுகளாகப் பயங்கரவாதத்தை வரைவிலக்கணம் செய்ய முடியாமல் இருக்கிறது.

**கேள்வி:** இதை நான் மிகவும் மெச்சுகிறேன். ஆனால் நான் உங்களுக்கு தெளிவான எடுத்துக்காட்டைக் காட்டினேன். பொதுமக்கள், பேரூந்து நிலையம் அங்காடிப்பாக்கம் இவற்றின் மீதான குண்டுத்தாக்குதல் பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் இல்லாதபோதும் பயங்கரவாதச் செயல்கள் என்று சொல்வீர்களா?

**பதில்:–** இவை போர்க்குற்றங்கள் என்றுதான் நான் சொல்வேன். பன்னாட்டுச் சமூகம் அவ்வாறே வரையறை செய்கிறது.

**கேள்வி:** தேசிய விடுதலை இயக்கங்களை ஒரு கணம் மறந்துவிடுங்கள். தேசிய விடுதலை இயக்கத்தில் சம்பந்தப்படாத ஒருவர் அரசியல் காரணங்களுக்காக அங்காடிப்பாக்கத்தில் குண்டொன்றை வைத்துவிடுகிறார். தேசிய விடுதலை இயக்கங்களை ஒரு வினாடி மறந்து விடுங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். பயங்கரவாதத்திற்கு வரைவிலக்கணம் இல்லையென்னும் பட்சத்திலும் அந்தச் செயல் பயங்கரவாதச் செயலாகக் கணிக்கப்பட முடியுமா?

**பதில்:** அந்த நாட்டுச் சட்டத்தைப் பொறுத்தது. ஐக்கிய அமெரிக்காவில், ஒக்லகாமா நகரில் இருந்த மைய அரசின் கட்டிடத்தை (குண்டுவைத்து) தகர்த்ததாகக் குற்றம்சாட்டப்பட்டவர்கள் கொலைக்குற்றச்சாட்டிலேயே விசாரணை செய்யப்படுகிறார்கள். பயங்கரவாதக் குற்றாச்சாட்டில் அல்ல. ஏனென்றால், ஐக்கிய அமெரிக்காவில் பயங்கரவாதக் குற்றம் என்றொன்று இல்லை. தெளிவில்லாத காரணத்தால் (பயங்கரவாதம்) செல்லுபடியாகாமல் போகிறது.

ஐக்கிய அமெரிக்காவில் உள்ளவர்கள் அதற்கு (பயங்கரவாதத்திற்கு ) சரியான வரைவிலக்கணம் காணமுடியவில்லை. அதனால் கொலைக்குற்றம் சாட்டி வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். இங்கு கனடாவில் யாராவது ஒரு பைத்தியக்காரன் வீதியில் இறங்கி பேரூந்துக்குக் குண்டு எறிவானாகில், நிச்சயமாக கொலைக்குற்றச்சாட்டில் அவன்மீது வழக்குத் தொடரப்படும்.

**கேள்வி:** ஒரு பேரூந்தில் இராணுவம் இல்லாத சிவிலியன் குண்டுவைத்தால் அது பயங்கரவாதச் செயலாக இருக்குமா?

**பதில்:–** அது எப்படி என்பதைப் பொறுத்தது........

**நீதியரசர்:** பேராசிரியரே நீங்கள் வார்த்தைகளை மறந்துவிடுகிறீர்கள். ஒரு மடையன் நீங்கள் சொன்னமாதிரி செய்திருந்தால் அவன் மீது கொலைக் குற்றம் சுமத்தப்படலாம். அப்போது உங்கள் உதாரணம் சரியாக இருக்கும். ஆனால், வழக்கறிஞர் அரசியல் காரணங்களுக்காக என்று சொன்னார்.

நான் அதனைச் செய்திருந்தால் கடவுள் தடுக்க வேண்டும். என்மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருக்கும். ஆனால், நான் அரசியல் காரணங்களுக்காகச் செய்திருந்தால்......... நான் கேள்வியை விளக்கியது இந்த வகையில்தான்.

**சாட்சி:** மீண்டும் ஒக்கலகாமாவில் குண்டு வைத்தவர்களைப்பற்றிப் பார்க்கும்போது, குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளை எடுத்துக்கொள்வோம். பயங்கரவாதத்திற்கு அமெரிக்க நாடு கொடுத்திருக்கும் வரையறைப்படி இது ஒரு குற்றமாகக் கருதப்படும்.

**திரு. வயிலன்கோட்**

**கேள்வி:** ஆனால், உள்நாட்டுச் சட்டப்படி உலகத்தின் எந்தப்பாகத்திலும் அது குற்றமாகக் கருதப்படும்.

அதுவல்ல எனது கேள்வி.

**பதில்:–** அது கொலை. அப்படித்தான் சொல்லியிருந்தேன்.

**கேள்வி:** அது அல்ல எனது கேள்வி. அது உள்நாட்டுச்சட்டப்படி வழக்குத் தொடரப்பட்டிருக்கும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். நான் எதிர்பார்க்கிறேன், ஒரு பேரூந்துக்குக் குண்டு வைப்பது கிரிமினல் குற்றம்தான் என்று. ஆனால், அது பயங்கரவாதச் செயலாக அமையுமா?

**பதில்:–** அது உள்நாட்டுச் சட்டம், உள்நாட்டுச் சட்டதிட்டம் பயங்கரவாதத்தை எப்படி வரையறை செய்கிறது என்பதைப் பொறுத்தது. நான் அறிந்தள்வில் கனடாவிலும் பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் வரையப்படவில்லை. அமெரிக்காவில் சட்டம் இருக்கிறது. ஆனால், அது கிரிமினல் வழக்குகளுக்கு உபயோகப் படுத்தப்படுவதில்லை.

**கேள்வி:** இன்னொரு கேள்வியை உங்களிடம் கேட்க விரும்புகிறேன். பயங்கரவாதத்திற்கு உங்களுடைய வரைவிலக்கணம், உங்கள் சொந்த வரைவிலக்கணம் என்ன?

**பதில்:–** இந்தச் சொல் பிரஞ்சு மொழிச் சொல்லாகும். எனது தாய்வழி பிரஞ்சு கனேடியன், மொன்றியல்.

தொடரும் ......

www.tamilarangam.net



# போரும் பொருண்மியமும்

தமிழீழ மக்களது பொருண்மிய வாழ்வின் மீது அரசு தொடுத்திருக்கும் மனிதநேயமற்ற காட்டுமிராண்டித்தனமான யுத்த மானது அவர்களை உணவு, உடை, உறைவிடம் போன்ற அடிப்படை வசதிகளே அற்ற நிலைக்குத் தள்ளியுள்ளது.

தமிழீழத்தின் வயல்கள் மற்றும் பொருண்மிய இலக்குகள் தகர்க்கப்படுவதுடன் திட்டமிட்டு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கு சிறீலங்கா அரசு தடை விதித்தும் வருகிறது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் நிவாரணம் வழங்குவதுகூட போலிக்காரணங்கள் கூறப்பட்டு அரசினால் தடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பட்டினி, நோய் போன்றவற்றிலிருந்து காப்பற்றவேண்டிய பொறுப்பு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இராணுவத் தாக்குதலகளிலிருந்து தப்பி தமது சொந்த இருப்பிடங்களைவிட்டு வெளியேறி வந்த மக்களிற்குத் தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொடுப்பதில், அவர்களிற்கு சுயவேலை வாய்ப்பினை உரு வாக்கிக் கொடுப்பதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது.

பாதுகாப்பான இடங்கள் தெரிவு செய்யப்பட்டு பத்தாயிரம் குடிசைகள் அமைக்கும் திட்டம் செயற் படுத்தப்படுகிறது. பயன்படுத்த ப்படாது கிடந்த நிலங்கள் திருத்தப்பட்டுப் பயிர்ச் செய்கை ஊக்குவிக்கப்படுகிறது. நிலம், காலநிலை என்பனவற்றிற்குப் பொருத் தமான குறைந்த காலத்தில் கூடிய பலன் தரத்தக்க உணவுப்பயிர் விதைகள் தருவிக்கப்பட்டு மக்களிற்கு வினியோகிக்கப்படுகிறது. அன்றாட பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்யக் கூடிய சிறிய குடிசைக் கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.

எரிபொருள், மின்சாரத்தடைகளின் பாதிப்புகளை ஈடுசெய்ய புதிய உத்திகள், பொருத்தமான தொழில் நுட்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு அறிமுகப்படுத்தப்படுகின்றன.

நீரிறைக்கப் பயன்படும் காலினால் மிதிக்கும் இயந்திரம் (ீநனயட ிரஅி), காற்றாடி இயந்திரம் (றுைனெ அடைட), குறைந்த விறகைப் பயன்படுத்திக் கூடிய பயனைத் தரத்தக்க இரட்டைச் சூட்டடுப்பு, வைத்திய சாலைகள் போன்ற அத்தியாவசியத் தேவைகளிற்கு வேண்டிய மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள சூரியக் கலம் (ளுழடயச உநடட), கடதாசி, பொலித்தீன் போன்றவற்றின் மறு உற்பத்தி (சுநஉலஉடலைபெ) என்பன தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புதிய அறிமுகங்களில் சிலவாகும்.

விவசாயம்சார் கைத்தொழில்கள், உணவுபதனிடல் போன்ற சிறு தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டு ஆரம்பிக்க விரும்புபவர்களிற்கு கடன் வழங்கல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் வழங்கப்படுகிறது.

(தொடரும்)

## மக்களுடன் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

### தமிழீழப் பயணம்

கடந்த திங்களன்று (26.05.97) வோடம் லொட்ச் ஸ்போட்ஸ் சென்ரர் திடலில் பிரமாண்டமான முறையில் தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா இடம் பெற்றது. அதில் தமிழர்களின் கலை, கலாச்சார, வாழ்வியலை விளக்கும் முறையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் (TEEDOR) ஒழுங்கு செய்யப்பட்ட "தமிழீழப் பயணம்" என்னும் ஒரு வாழ்வியல் கண்காட்சி இடம் பெற்றது. அது புலம் பெயர்ந்து வாழும் எமது சிறார்கள், எமது தாய் நாட்டின் வாழ்வு முறைகளை அறியக் கூடிய வகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. உள்நுழையும் போதே ஆலய தரிசனம், மதகுருமார்களின் வரவேற்பும் அந்தந்த மதத்தினரின் ஆலய வழிபாட்டு முறைகளும் சின்னஞ் சிறுவர்களினால் செய்து காட்டப்பட்டது.

உள்ளே அம்மா தாலாட்டுவதும், அம்மி, ஆட்டுக்கல்லு போன்றவற்றுடன் எமது தாய் நாட்டில் எவ்வாறு வாழ்கிறார்கள் என சிறுவர்கள் செய்துகாட்டியமையும் அப்படியே எம்மை தாய்நாட்டுக்கு அழைத்துச் சென்றது. வெளியே விறகு கொத்துவோரும் மண் வெட்டுபவரும், துலாவும் கிணறும் என்று பலதரப்பட்ட எமது வாழ்வின் அன்றாட அம்சங்களை கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தினர். ஆவலுடனும் ஆர்வத்துடனும் உந்துதலுடனும் அக் காடசி-களைப் பார்க்க கொட்டகை முன் மக்கள் திரண்டனர். இதைவிட வெளியே பலத்த ஆரவாரங்களுக்கிடையே எமது பாரம்பரிய விளையாட்டான



தயிர்முட்டி அடித்தல் நிகழ்வு நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

மக்கள் வெளியே வரும்போது புன்முறுவலுடன், தமது குழந்தைகட்கு நல்ல நிகழ்வுகளைக் காட்டிய திருப்தியுடனும் நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திய திருப்தியுடனும் சென்றனர்.

இது போன்ற நிகழ்வுகள் மேலும் இடம் பெற வேண்டும் என மக்கள் பேசிக்கொண்டு சென்றதைக் கேட்கக்கூடியதாகவிருந்தது.

- குமார் -

## தளிர் மாலை

## 1997

**தமிழ்ச் சிறார்களுக்கிடையே போட்டிகள்**

பொது அறிவுப் போட்டி (General Knowledge)
பேச்சுப் போட்டி (Speech)
சித்திரப் போட்டி (Art)
மாதிரி அமைத்தல் (Model Making)
வினோத உடைப் போட்டி (Fancy Dress)
இவற்றுடன்
தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையேயான கலை நிகழ்ச்சிப்போட்டிகள்

06–09–.97 இல் உள்ளபடி போட்டிகளுக்கான வயதுப் பிரிவுகள்
Group A 5 வயதுக்கு உட்பட்டவர்கள்
Group B 5 – 7 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
Group C 7 – 9 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
Group D 9 – 12 வயதுக்கு இடைப்பட்டவர்கள்
Group E 12 – 15 வயதுக்கு இடைப்பட்டவர்கள்

**இடம்**

**Camden Town Hall**
**Bidborough Street**
**London WC1H 9JE**

**Nearest underground: King's Cross, Euston**

**காலம்**

**06 - 09 - 97**
**Saturday**
**5.00 pm - 10 pm**

விண்ணப்ப முடிவுத் திகதி 31-7-97

விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
**0181 365 0249**
**or**
**0171 403 4554**
**after 9.pm 0181 503 3503**

தமிழீழ மண்ணின் வளங்களை, நல்லமுறையில் எவ்வாறு பயன்படுத் தலாம், பேணலாம் என்பது சம்பந்த மாகவும், எமது மண்ணின் பொரு ளாதார நல்வாழ்வை எவ்வாறு கட்டி எழுப்பலாம் என்பது சம்பந்தமாகவும் களத்தில் பத்திரிகையில் வெளி யிடுவதற்கு கட்டுரைகள், ஆய்வுகள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புகட்கு: 0181 365 0249

**TEEDOR - UK**
**202 Eelam House**
**London SE1 4QB**

www.tamilarangam.net



# தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் 7வது சர்வதேச உதைபந்தாட்டப்போட்டி

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் 7வது சர்வதேச உதைபந்தாட்டப்போட்டி கடந்த மாதம் வங்கி விடுமுறை தினமான 5ம்திகதி திங்கட்கிழமை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை என்றும் இல்லாத மக்கள் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றது. வானொலியும் தொலைக்காட்சியும் மழை பெய்யும் என அறிவித்தும் வருணபகவான் கழகத்தின் மீது கருணை கொண்டு வெய்யில் நாளாக முழுநாளும் காட்சி தந்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் Challange Cup இற்கு 24 கழகங்கள் பங்கு பற்றின. வெளிநாடுகளில் இருந்து 4 கழகங்கள் பங்கு பற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் 4 கழகங்கள் தங்களுக்குள் முதல் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றிக் கொண்டன. ஆரம்பம் முதல் கடைசி ஆட்டம் வரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

காலையில் இருந்தே லண்டனின் பல்வேறு பகுதிகளில் இருந்து கழக ஆதரவாளர்கள் மைதானத்தில் கூட ஆரம்பித்திருந்தனர்.

முதலாவது சுற்றுப்போட்டி காலை 10 மணியளவில் 2 நிமிட அமைதி காத்து ஆரம்பமானது. இரு சுற்றுப் போட்டிகளைத் தொடர்ந்து மதியம் இடைவேளையை அடுத்து கால் இறுதிப் போட்டி ஆரம்பமானது. நாவாந்துறை உதைபந்தாட்டக்கழகத்திற்கும் சன்றைஸ் உதைபந்தாட்டக்கழகத்திற்கும் இடையில் நடை-பெற்ற போட்டியில் நாவாந்துறைக் கழகம் வெற்றி பெற்றது.

விளையாட்டரங்கு 2இல் நடைபெற்ற போட்டியில் சேர்பிற்றன் Elvar கழகங்களுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் சேர்பிற்றன் வெற்றி பெற்றது.

மைதானம் 3இல் E17 கழகத்திற்கும் ஜேர்மனியில் இருந்து வந்த ஈசன் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற போட்டி மிக விறுவிறுப்பாக இருந்தது. இதில் ஈசன் கழகம் வெற்றி பெற்றது.

மைதானம் 4இல் மோதிய Nothern Sports கழகமும் Lewisham United மும் மோதியதில் Nothern Sports வெற்றி பெற்றது.

அரை ஆட்டப் போட்டியில் மைதானம் 3இல் நாவாந்துறை Essence கழகங்கள் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் நாவாந்துறை கழகம் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மைதானம் 2இல் நடைபெற்ற அரை ஆட்டப் போட்டியில் சேர்பிற்றன் கழகம் ஹசியம் யுனைட்டட்டை வெற்றி கொண்டது.

இறுதிப் போட்டியாக நாவாந்துறைக்கும் சேர்பிற்றன் இற்கும் இடையில் TRO Challenge Cup இற்கான நடைபெற்ற போட்டி சுமார் 6.30 மணியளவில் நடைபெற்றது. இப்போட்டியில் நாவாந்துறை 1-0 என்ற Goal வித்தியாசத்தில் TRO கழகத்தின் Challenge Cup ஐத் தட்டிக் கொண்டது.

அன்றைய தினம் 16 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கான உதைபந்தாட்டமும் 12 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கான உதைபந்தாட்டமும் சிறப்பாக நடைபெற்றது. எதிர்கால வீரர்களின் விளையாட்டும் மிக மிக விறுவிறுப்பாக நடை-பெற்றதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

16 வயதிற்கு உட்பட்ட கழகங்களில் 11 கழகங்கள் பங்கு பற்றின. இதில் இறுதியில் ஹசியம் யுனைட்டட் TRO கழகத்தின் Cupஐத் தட்டிக் கொண்டது.

12 வயதிற்கு உட்பட்ட கழகங்களில் 7 பாடசாலைக் கழகங்கள் பங்கு பற்றின. இங்கு முதலாம் இடத்தை ஹரோ தமிழ்ப்பாடசாலை வெற்றி கொண்டது. இப்போட்டியில் வோல்தம் பொறஸ்ட் தமிழ்ப்பாடசாலை, திருவள்ளுவர் பாடசாலை, மஹாஜனா கல்லூரிகள் பங்கு பற்றின.

அன்றைய தினம் பார்வையாளர்கள், கழகங்கள், அதிஸ்ட இலாபச் சீட்டு, சிறுவர் விளையாட்டுப்போட்டி, தமிழீழ உணவகம், கார் தரிப்பிடம் போன்றவற்றால் கிடைக்கப்பட்ட நிதி வன்னியில் இடம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் அடிப்படை மருத்துத் தேவைகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்று குலுக்கப்பட்ட அதிஸ்ட
இலாபச் சீட்டுஇழுப்பு விபரம் வருமாறு
1ம் பரிசு இல- 1720
2ம் பரிசு இல - 5555
3ம் பரிசு இல - 7939

ஒரு நிறைவான விளையாட்டு நிகழ்ச்சியினைக் கண்டு களித்த திருப்தியுடனும் அதே சமயம் தாய் நாட்டில் எம்மவர்கள் படும் துயரைத் துடைக்க எம்மால் ஆனதைச் செய்தோம் என்ற மனச் சந்தோசத்துடன் மக்கள் மைதானத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர.



வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற நாவாந்துறை விளையாட்டுக் கழக வீரர்கள்


தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவில்

## மாபெரும் நடன மாலை

இலண்டனில் புகழ் பெற்ற நடன ஆசிரியைகள், திருமதி பத்மினி குணசீலன், திருமதி ராகினி ராஜகோபால், திருமதி ரஜனி சுரேஸ்குமார் மற்றும் பல முன்னணி நடன ஆசிரியைகளின் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகளின் மாபெரும் நடன நிகழ்ச்சி.

இவர்களுடன் செல்வி அம்பிகை சீவரத்தினம், திருமதி ஆன் பிரிமினி விமலதாசா ஆகியோரின் மாணவிகள் பங்கு பற்றுகிறார்கள். இவர்களுடன் பிரபல பக்க வாத்தியக்கலைஞர்கள் திரு முத்து சிவராசா, திரு கிருபாகரன், திரு கணநாதன் , திரு கந்தையா சிதம்பரநாதன், திரு சோமசுந்தரம் தேசிகர், திரு ஞானவரதன் மேலும் பலர் சிறப்பிக்க உள்ளனர். கலைப்பண்பாட் டைப் பிரதிபலிக்கும் கரகாட்டம், கோலாட்டம் நிகழ்ச்சிகளும் இடம்பெறும். இடம் Brent Town Hall, Forty Lane, Wembley.

**காலம்: 14.06.97 சனி மாலை 5.30 மணி.**



மேலதிக தொடர்புகளுக்கு

**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்**

(பிரித்தானிய கிளை)

Registered Charity No: 1010029

79 Hoe Street, Walthamstow,
London E17 4SA

**தொலைபேசி இல: 0181 - 520 5876**


## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் துயர் துடைப்பு நாட்கள் ஜுலை 05 முதல் 13 வரை

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் தமது சொந்த வாழ்விடங்களைவிட்டு ஏதிலிகளாகிய எமது மக்களின் துயர் துடைக்க வெளிநாடுகளில் வாழும் நாம் எம்மாலான அதிகூடிய மனிதாபிமான ரீதியான பங்களிப்பைச் செய்ய முன்வரவேண்டும். தமிழீழத்தில் இடம்பெயர்ந்து இருக்க இடமின்றி, உண்ண போதிய உணவின்றி, உடுக்க உடையின்றி, மருத்துவ வசதிகள் இன்றி அல்லலுறும் எம்மக்களுக்கு நாம் உடனடியாக உதவிகள் செய்ய வேண்டியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஜுலை மாதம் 5ம் திகதிக்கும் 13ம் திகதிக்கும் இடையிலான நாட்களை துயர் துடைப்பு நாட்கள் என பிரகடனம் செய்து நிதி சேகரிக்கத் திட்டமிட்டுள்ளது. இந்நிகழ்வில் சகல தமிழீழ மக்களும் சகல வேறுபாடுகளையும் மறந்துவிட்டு பங்கேற்றுக் கொள்வது காலத்தின் தேவையாக உள்ளது.

சுமார் 8 இலட்சம் மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி தற்காலிகமான இடங்களில் வசித்து வருகிறார்கள். சிறிலங்கா அரசும், இராணுவமும் மேற்கொள்ளும் பொருளாதாரத் தடையினாலும், நிவாரணங்கள் வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகளினாலும், இடம் பெயர்ந்த மக்கள் எந்தவித உதவிகளும் இல்லாமல் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழத்தில் இருந்து புலம் பெயர்ந்து சுமார் 3 லட்சம் மக்கள் வெளிநாடுகளில் வாழ்கிறோம். எமக்கிடையே நிதியைத் திரட்டி தமிழீழத்தில் இடம்பெயர்ந்து அல்லலுறும் எம் மக்களின் துயர் துடைப்போம்.

தாயகத்தில் அல்லலுறும் மக்களின் துயர் துடைக்கும் இப்பணியில் இணைந்து செயலாற்ற விரும்பும் மனிதாபிமானம் கொண்ட தமிழ் நெஞ்சங்களை அவ்வவ் நாடுகளிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தொடர்பு கொள்ளும்படி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டி நிற்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினான்கு

(தொடர்ச்சி)

விசவாயுக் கூடங்களை ஏமாற்ற, மின்சாரம் செலுத்தப்பட்ட முள்ளுக் கம்பி வேலிகளில் தாங்களே விழுந்து சாவைத் தேடிக்கொண்ட ஆயிர மாயிரம் பேரைப் பற்றிக் கரேன் கேள்விப்பட்டாள்.

பசிக்கும் நோய்க்கும் இரையாகிய பலர், பெயரிடப்படாத கிடங்குகளில் எரிக்கப்பட்ட பலர், இவர்களைப் பற்றியும் கரேன் கேள்விப்பட்டாள்.

மீள் குடியமர்த்தலுக்காக என்ற போர்வையில் பிள்ளைகளைத் தாய் மாரிடமிருந்து பிய்த்தெடுத்தல், புகையிரத வண்டியில் வயதான வர்களையும், பெலவீனமானவர்க ளையும் நிறைத்து அனுப்புதல் போன்ற இரக்கமற்ற விளையாட்டுக்களைப் பற்றியும் காதில் விழுந்தது.

பேன்களை நீக்கும் அறைக்குச் சவர்க்காரம் கொடுத்து அனுப்புவதும் அப்படித்தான். பேன் நீக்கும் அறை விசவாயுக்கூடமாகவும், சவர்க்காரம் கல்லால் ஆனதாயும் இருந்தது.

பிள்ளைகளைக் காப்பாற்ற துணி ஏணைகளில் பிள்ளைகளை மறைத்து விட்டுச் செல்லும் தாய்மாரைப், பற்றியும் அவளுக்குச் சொன்னார்கள். ஆயினும், ஜேர்மனியருக்கு இந்த யுக்தி விளங்குமாதலால் எப்போதும் அந்த இளம் குருத்துக்களைக் கண்டு பிடித்துவிடுவார்கள்.

தாங்களே கிண்டிய கல்லறைகளின் அருகே, நிலத்தில் மண்டியிட்டுக் கொண்டிருக்க, அவர்களின் தந்தைமார் கையால் கண்களைப் பொத்திய படியிருக்க, கைத்துப்பாக்கிகள் அவர்களின் மண்டைகளைச் சிதறடித்த கொடுமைகள் ஆயிரமாயிரம் கரேனின் காதுகளில் விழுந்தன.

குழந்தைகளையும், பெண்களையும் வெறும் கைகளாலேயே கழுத்தை நெரித்துக் கொன்றவனும், பச்சைக் குழந்தைகளை பீப்பாய்களில் குளிர் நீரில் அமிழ்த்தி, அவை உயிரை விடுவதில் இன்பம் கண்டவனுமான எஸ். எஸ். ஹப்ஸ்ரம்ப்யூறர் விறிட்ஸ் கெபோயர் (Fritz Gebauer) SS என்பது கரும் சட்டை அணிந்த ஜேர்மனிய சிறப்புப்படைப் பிரிவாகும். (Haupsturm Fuehrer) என்பது ஜேர்மனிய இராணுவ உத்தியோக நிலையைக் குறிக்கும். கப்டன் தரத்துக்குச் சமமானது பற்றியும் கேள்விப்பட்டாள்.

ஒரு குண்டிலேயே பலரை ஒரு நேரத்தில் கொல்லும் வழியைக் கடைப்பிடித்து, ஒவ்வொரு முறையும் தன் முந்தின சாதனையை முறியடிக்க முயல் பவனுமான ஹெய்னன் (Heinen) இன்னொருவன்.

ஒரு மனிதன் தலைகீழாய்த் தொங்க விடப்பட்டால் எவ்வளவு நேரம் உயிரோடிருப்பான் என்பது பற்றிப் பந்தயம் கட்டுவதில் விருப்பமுள்ள பிராங்வார்சொக் (Frank Warzok) பற்றியும் அறிய முடிந்தது.

உடல்களைக் கிழித்தெறிபவனான ஓபர்ஸ்ரம்பான் ப்யூகரர் ரொக்கிற்றா (Obersturmbann Fuehrer Rokita) கைதிகளின் தலையிலும், வயிற்றிலும்

**லியோன் யூரிஸ்**

துளையிடுபவனும், நகங்களைப் பிடுங்கு பவனும், கண்களைத் தோண்டுபவனும், பெண்களை அவர்களின் கூந்தலைத் தடிகளில் கட்டித் தொங்க விடுபவனுமான ஸ்ரெயின் (Steiner) இன்னும் ஒருவன்.

பாபியார் (Babiyar) படுகொலை களுக்கு பொறுப்பாயிருந்த ஜெனரல் பிரான்ஸ் ஜக்கெலன், இவன் இரு நாட்களில் கீவ் (Kiev) புற நகரப் பகுதியிலிருந்து, பாபியார் இல் முப்பதாயிரம் யூதர் களைக் கைது செய்து ஆரவார ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்த யூக்ரேனியர்கள் முன்னிலையில் துடிக்கத்துடிக்கச் சுட்டுக் கொன்றவன்.

பேராசிரியர் ஹார்ட்ஸ்சின் (Strasbourg) ஸ்ராஸ்போர்க் வைத்திய ஆராய்ச்சிக் கூடத்தையும், அவனது விஞ்ஞானிகள் குழுவையும் பற்றிக் கேள்விப் பட்டதோடு, அவர்களின் ஆராய்ச்சி களின் விளைவால் உருவ விகார மடைந்திருந்த பெண்களையும் அங்கே கண்டாள்.

டச்சவ் (Dachauv)தான், "விஞ்ஞான ஆராய்ச்சி"" கூடங்களிலேயே பெரியது. அங்கே டாக்டர் ஹெய்ஸ்கீயர் (Dr.Heisskeyer) சிறு குழந்தைகட்கு சயரோக கிருமிகளை ஊசிமூலம் செலுத்திவிட்டு அந்நோயால் அந்தக் குழந்தைகள் சிறிதுசிறிதாக இறந்து போவதை உன்னிப்பாக அவதானித்தவன். டாக்டர் சூட்ஸ் (Dr.Schutz) இரத்தத்தை நஞ்சூட்டலில் ஆர்வமுள்ளவன். டாக்டர் ராஸ்ச்சர் (Dr.Rascher) ஜேர்மனிய விமானிகளைக் காப்பாற்ற விரும்பியவன். உயர்மட்ட வெப்பநிலைகள் மீள் சிருஷ்டிக்கப்பட்ட (Similated) அறை களில் மனிதகினியா எலிகள் உறைந்து சாவதை விசேட ஜன்னல்கள் ஊடாக அவதானிப்பான். வேறுவிதமான பரிசோதனைகளும் இங்கு நடத்தப்பட்டன.

பாடலாசிரியர் (Mund)ஐ அழைத்து "சாவின் நர்த்தனம்" (Death Tango) என்ற பாடலை எழுத உத்தரவிட்ட ஜனோவ்ஸ்கா (Janawska) என்ற முகாமின் அதிகாரியான வில்ஹோஸ் (Wilhaus) ஐப் பற்றியும் கேள்விப்பட்டாள். ஜனோவ்ஸ்கா முகாமில் சாகடிக்கப்பட்ட இரண்டு லட்சம் யூதர்களும் இந்த சாவின் நர்த்தனம் பாடலிசையைத்தான் இறுதியாகக் கேட்டனர். ஜனோவ்ஸ்காவில் வில்கோசின் வேறு பொழுது போக்குகளைப் பற்றியும் கரேன் அறிந்தாள். பச்சை மழலைகளை மேலே வீசிவிட்டு, அவர்கள் நிலத்தை அடையமுன் எத்தனை குண்டுகளை அம் மழலை உடல்களுள் செலுத்தலாம் எனப் பார்ப்பான் வில்கோஸ். அவன் மனைவி ஒட்டிலி (Otilie) யும் இப்படியான துப்பாக்கி வீராங்கனையே.

> பச்சை மழலைகளை மேலே வீசிவிட்டு, அவர்கள் நிலத்தை அடையமுன் எத்தனை குண்டுகளை அம் மழலை உடல்களுள் செலுத்தலாம் எனப் பார்ப்பான் வில்கோஸ். அவன் மனைவி ஒட்டிலி (Otilie) யும் இப்படியான துப்பாக்கி வீராங்கனையே.

பொல்லுகளால் அடித்தும், கால்களால் உதைத்தும் கொல்லும் ஜேர்மனியரின் லித்துனியன் காவலர்களையும் (Lithuanian Guards) ஆயிரக்கணக்கான கைதிகளைக் கொடூரமாகக் கொலை செய்த குரோசியன் உஸ்ராசிஸ் (Croatian Ustashis) கள் பற்றியும் கேள்விப்பட்டாள்.

கரேன் இவைகளால் பாதிக்கப்பட்டு மிகவும் அழுதாள். இரவில் தூக்கம் கெட்டு, கேள்விப்பட்ட பெயர்கள் மூளைக்குள் மின்னலிட்டோடின. தனது தாய், தந்தை, சகோதரர்கள் புச்சன்வால்ட்டுக்கு (Buchenwald - இன்னொரு சித்திரவதைத் தடைமுகாம்) அனுப்பப்பட்டார்களா? அல்லது டச்சாவ் முகாமின் பயங்கரங்களில் தங்கள் சாவைச் சந்தித்தார்களா? பத்து இலட்சம் பேர் கொன்றொழிக்கப்பட்ட செல்ம்னோ (Chelmno) முகாமில் செத்தார்களா? அல்லது ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேரைக் கொன்ற மெய்டனக் (Maidanek) முகாமிலா? அல்லது சொப்பிபோர்? (Sobibor) அல்லது ராவ்நிகி? (Trawniki) அல்லது பொனியாட்டோவ் (Poniataw) கிவிவொஜ் ரொக்கி? (Krivot Rog) கிராஸ்னிக் (Karsnik)கின் மரணக் குழிகளில் சுடப்பட்டார்களா? அல்லது டியெட்சினில் (Diedzyn) நாய்களால் கூறுகளாகக் கிழிக்கப்பட்டார்களா? அல்லது ஸ்ருட்தொவ் (Stutthop) இல் சித்திரவதை செய்யப்பட்டு இறந்தார்களா?

சவுக்குகள்! குளிர்நீர்த் தொட்டிகள்! மின் அதிர்ச்சி! சூடாக்கப்பட்ட இரும்பு– இனப்படுகொலை!

அது சொய் செல் (Choisel) அல்லது டோறா (Dora) நியுவென்கமே (Neuengamme) முகாம்களிலா? அல்லது குறொஸ்–றோசென் (Gross-Rosen) முகாமிலா? அல்லது ஜனோவ்ஸ்கியின் சாவின் "நர்த்தனத்தை" க்கேட்டார்களா? அல்லது டான்சிக் (Danzig)கில் சவர்க்காரத்திற்குக் கொழுப்பிற்காக உருக்கப்பட்டவர்களில் அவளது குடும்பத்தாரும் இருந்தனரா? பிரான்சின் லூர்செமில்சுக்கு அணித்தாக இருந்த லா சியோடாட், இடம்பெயர்ந்தோர் முகாமின் சகல அம்சங்களிலும் சாவின் சாயை படர்ந்திருந்தது. மேலும் இப்பெயர்களை கரேன் கேள்விப்பட்டாள். டனாஜிபன் (Danagien) ஈவாரி (Eivari) கோல்ட்பி ல்ஸ் (Goldpilz) வீவாரா (Vievara) பொர்ட் குண்டே(Portkunde) அவளால் துயில் கொள்ள முடியவில்லை. உணவருந்த முடியவில்லை. கிவியோலி (Kivioli) வார்வா(Varva) மக்டபேர்க் (Magdeburg) பிளாஸ்கோ (Plaszhw) செப்னீ (Szebnie) மோத்தஸென் (Mauthaucen) சக்சென் கோசன் (Sachsenhausen) ஓரானியன்பேர்க் (Dranieburg) லான்ட்ஸ்பேர்க் (Lansber) பேர்கன் பெல்சன் (Bergen-Belsen) றெமின்ஸ்டோர்ப் (Reinsdore) பிளிசினி (Bliziny)

இனப்படுகொலை! பொசன்பேர்க் (Fussen berg) றேவண்புரூக் (Ravensbruck) நட்ஸ்வெய்லர் (Natzweiler)

ஆனால் இந்தப் பெயர்கள் எல்லாம் அவைகளுள் எல்லாவற்றிலும் பார்க்கப் பெரிதான அசுவிற்ஸ் (Uschwitz) இன் பக்கத்தில் உறைபோடக்கூடக் காணாது.


அசுவிற்சில் 30இலட்சம் பேர் கொல்லப் பட்டனர்.

அசுவிற்ஸ் களஞ்சியங்களில் மூக்குக் கண்ணாடிகள் நிரம்பியிருந்தன.

அசுவிற்ஸ் சப்பாத்துக்கள், உடுப்புக்கள், பழந்துணிகளாலான பரிதாபமான பொம்மைகள் நிரம்பிய களஞ்சியங்களைக் கொண்டிருந்தது.

அசுவிற்ஸ் மெத்தைகள் தயாரிப்புக்காக தலைமயிர்களினால் நிரம்பியிருந்த களஞ்சியங்களைக் கொண்டிருந்தது.

அசுவிற்சில் தான் கொல்லப்பட்டவர்களின் தங்கப் பற்கள் திட்டமிட்ட முறையில்



வெளியே பிடுங்கப்பட்டு தங்கம் உருக்கப்பட்டு ஹிம்லருடைய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பப் பட்டது.

அசுவிற்சில் தான் பிரத்தியேகமான முறையில் வடிவம் பெற்றிருக்கும் மனித மண்டையோடுகள் கடதாசிக்குமேல் வைக்கும் பாரங்களாகப் பாவிக்கப்பட்டன.

அசுவிற்சில்தான் எரிக்கப்பட்டவர்களின் எலும்புகள் சுத்தியலால் அடித்துப் பொடிப்பொடியாக்கப்பட்டு கொலை நடந்ததன் அடையாளங்கூட இல்லாமல் செய்யப்பட்டது.

அசுவிற்சின் முகப்பு வாசலில் "உழைப்பு விடுதலை அளிக்கும்" என்ற அறிவிப்புப் பலகை தொங்கியது.

கரேன் கான்சன் கிளமென்ற் ஆழமான தூக்கத்தில் ஆழ்ந்தாள். அவள் கேட்கக் கூடியஅளவு கேட்டாள். பார்க்க முடிந்தளவு பார்த்தாள். அவள் களைத்துக் குழம்பினாள். தொடர்ந்து செயற்படும் உறுதி அவள் இரத்தத்திலிருந்து வழிந்தோடிப் போய்விட்டது போலிருந்தது. ஒருவர் தன் முயற்சிகளில் சோர்வடையும்போது ஏதாவது ஒரு திருப்புமுனை வந்து திரும்பவும் உற்சாகம் பெறுவது அடிக்கடி நடப்பதுபோல், அவளும் மேல்நோக்கி வந்தாள்.

அவள் ஒரு அனாதைப் பிள்ளையின் தலையைத் தடவவும் அந்தப் பிள்ளை அவளில் ஒரு ஆழ்ந்த கருணையை உணர்ந்துகொண்டால் அது நிகழ்ந் தது. பிள்ளைகள் அதிகமாக விரும்பும் மென்மையான அன்பை கரேனால் கொடுக்க முடிந்தது.

தொடரும்...

www.tamilarangam.net






## அவலங்கள்


சென்ற கணவன் திரும்பவில்லை
சிறை பிடித்தாரோ! சிங்களத்துப் படைகள்
என்று ஏங்கியிருக்கும் மனைவியவள்!
சென்ற மகன் சேதி தெரியாமல்
சிந்தை கலங்கியிருக்கும் தாயவள்!
இவை தமிழீழத்தின்
இன்றைய அவலங்கள்!

-ஜே. வத்சாயினி, யேர்மனி

## உலைக்களம் ஆனதோ!

குண்டு மழை பொழிய
குருதி வெள்ளம் பாய-அதில்
கொண்டவன் மிதந்தானோ!
குழந்தைகள் துடித்தாரோ!
கொடியவள் ஏவிய
சூலிக் கணைகளால்
உறவுகள் கனவாய் கலைந்ததோ!
உள்ளங்கள் உலைக்களம் ஆனதோ!

-சந்தி செல்வகுமாரன், யேர்மனி.



## தீராத தாகம்

வழிமேல் விழிவைத்து காத்திருந்து
கண்கள் பூத்ததுவோ!
வல்லவன் உம்பிள்ளை வாரானோ!
கண்டதும் நெஞ்சம் களித்திடுமோ!
வாரி அணைத்து கரங்களால் அமுதூட்ட
மனம் துடித்திடுமோ!
நெஞ்சம் தளராதே தாய்க்குலமே!
மண்காக்கும் மகனைப் பெற்றவளல்லவா நீ!

-தனம், பிரான்ஸ்

## கரை கண்டவர்கள்

எதுவரை துன்பம்
அதன் கரை கண்டோம்
இனியொரு துன்பம் எமக்கேதும்
உண்டோ?
நடுக்காட்டில் தெருவோரத்தில்
எமக்கான வாழ்வு!
இதுதானா?
சமாதானத்திற்கான போரில்
சந்திரிகா கண்ட தீர்வு!

-குமுதா, ஜேர்மனி

## துணையற்று துடிக்கும் எம் குடும்பம்

விடிபொழுதில் சென்ற சேயே!
வீடு நீயும் திரும்பவில்லை.
மதிபொழுது ஆயும்
மனைக்கு நீ வரவுமில்லை.
எது நடந்த தென்று
எண்ணி நாம் தவிக்கின்றோம்!
நல்ல பதில் கிடைக்குமென்று
நாம் இங்கு விம்முகின்றோம்!

-ஈழதீசன்

## ஈழமகள் பிறப்பாள்

கன்னத்தில் கைவைத்து, நெஞ்சோடு
கையணைத்து,
என்னத்தை இழந்துவிட்டீர்? ஏன் இந்த
சோகம்?
கண்முன்னே இனிய உறவுகளை
இழந்தீரோ?
சொந்தங்களையிழந்து
நிர்க்கதியாய்
எந்தப் பெண்ணால் வாழமுடியும்
நிம்மதியாய்?
நேரகாலம் நெருங்குதம்மா!
ஈழமகள் பிறப்பாள்-உங்கள்
துயரக் கோலம் யாவும் அவள்
துடைப்பாள்!

-புங்கையூர் த. மதி

## எதிர்பார்ப்பு

பிறப்பு ஓர் இடம்
இருப்பு ஓர் இடம்
அன்னியனின் வெறியால்
அகதி வாழ்வு!

சமாதானமும்
அமைதியும்
எதிர்பார்த்து ஏக்கம்!
மிஞ்சி இருப்பது சோகம்!

-யாழ்பாடி

**ஆக்கங்கள் ஆனுப்பியோரின் விபரங்களை நன்றிகூர்தலுடன் பிரசுரிக்கின்றோம்:**

ந.ஜனார்த்தனன், ஜேர்மனி. ஜெகநாதன் டேறா. அமலா ஜெயந்தன், ஜேர்மனி. யே. ஜெயறூபன் டென்மார்க். செந்தில் விநாயகன் ஜேர்மனி. நிஷாந்தி இந்திரகுமார், பிரான்ஸ். சிவராஜா விஜயருபன், நோர்வே. அம்பி, டென்மார்க். செ. நாகேந்திரன், லண்டன். ந. லிங்கம், ஜேர்மனி. குமார். சுவிஸ். இ.சிவா, சுவிஸ். சரா மோகன், டென்மார்க். வி.எஸ். பாலசிங்கம். ஜெகநாதன். ஜமுனா,ஜேர்மனி. ம.தேவன்ரவி, ஜேர்மனி. சி.வேலாயுதம்.

## மட்டக்களப்பில் நடந்த பாலியல் ....

அல்லது தெரியப்படுத்தினாலோ குடும்பம் முழுவதையும் கொன்றுவிடுவோம் எனவும் கொலைப் பயமுறுத்தல் விடுத்துள்ளனர்.

இருப்பினும், நடந்த சம்பவ அதிர்ச்சியில் இருந்து இன்னமும் மீளமுடியாத அப் பெண்ணின் கணவர், இச் சம்பவத்தை மட்டக்களப்பு சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்துள்ளார். இருப்பினும் வழமை போலவே சிறிலங்கா அரசு வெளிஉலகை ஏமாற்றும் வேலையாக விசாரணைக் குழு அமைத்தாலும், படையினர் எவ்வித தண்டனையும் பெறுவதில்லை என்பது கண்கூடு. மாறாக, இவ்வாறான செயல்களுக்கு அரசின் கூடுத லான ஆதரவும் அனுசரணையும் கிடைப்பதே நடைமுறையாக உள்ளது. இவ்வாறாக, சிங்களப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் தமிழ்ப் பெண்கள் மிகுந்த பேரபாயத்தில் சிக்கி பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழீழ மண்ணிலிருந்து இனவெறி கொண்ட சிங்களப் படைகளை விரட்டியடிக்கும் வரைக்கும் இவ்வாறான மனித குலமே தலைகுனிந்து கொள்ளும் விதமான சம்பவங்கள் சிங்களப் படையால் நடாத்தப்பட்டுக் கொண்டேயிருக்கும். ✷

10.5.97 இல் சுவிஸ் சார்கான்சில் நடைபெற்ற செஞ்சோலை கலைமாலை நிகழ்வில்...




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலக மனச்சாட்சியின் உரத்த குரல்களுக்கு ஒரு விண்ணப்பம் !

எம் மண்ணில் இனிவரும் நாட்களில்.......
மந்த மாருதம் தழுவும் வசந்தோற்சவம்.
மரங்களுக்கு ருதுசோபனம்.

குயில்கள் எம்முற்றத்து வேம்புகளில் வந்து
குக்கூவென குரலெடுத்துக் கூவும்.

அடுத்தடுத்துவரும் திங்கட்கிழமைகளில்
அம்மன் கோவில்களில் பொங்கல் நடக்கும்.

வேப்பிலையும், வெட்டரிவாளுமாக
காவலிருந்த தேவியின் மேனிகுளிரும்.

வெக்கை தணிந்து போவாள் வீரமாகாளி.

எனினும் எம் மண் தன்னிலைமை மாறாது.

பணிதலறியாதவள் எம் தாய்.

கண்களில் மையும்
கால்களில் சிலம்பெனினும்
கைகளிலிருந்து வீரவாள் நழுவாது.

சுற்றிவளைத்து எல்லைகளைச் சுருக்கி,
தேசத்தை சிறையிருத்திவிட்டு,
பேசலாம் வருகவென மேசைக்கழைத்து-
எச்சிற்சோறளித்து ஏமாற்றிவிடலாமென
யாரும் நினைத்தால்........
பாவம் அவர்கள்.

வெட்டியடித்துவிட்ட வெறும் வயலென்று
எட்ட நின்று எம்மைக் கணக்கிடுவோர்
எவரெனிலும்......
நாங்கள் முளைக்கப் போட்டிருக்கும் நாற்று
மேடையை
முதலில் அளவெடுத்துக் கொள்ளுங்கள்.

உள்ளே எரிந்தபடி கிடக்கும் எரிமலையை
கொத்திப் பிளந்து குளிரவைப்போமென
எத்தனை பேர் வந்து போயினர்.

சோதிப்பிழம்பை எவராலும் தொடமுடியவில்லை.

பசித்த வயிறெனிலும்......
யாசித்தறியாதவள் எம் தாய்.

வாசலுக்கு எவர் வந்தாலும் வரவேற்பாள்
அடங்கிப்போவென யாரும் பணித்தால்.......
எக்காளத்தொனியில் எம் தாய் சிரிப்பாள்.




- வியாசன்

விழிகள் சிவந்து விரிய்
சீதளத் திருமுகத்தில் தீயெழ
பிள்ளைகளைப் போர்க்களமனுப்புவாள் பெருமாட்டி.

உலக மனச்சாட்சிக்கு
ஒரு விண்ணப்பம்.

எத்தனை வதைபட்டு
இடிந்துள்ளோம்.

இங்கே....... குஞ்சுகளை இழந்து
ஒவ்வொரு கூடும் துடிக்கிறது.

உயிரைக் கரைத்தெடுத்த
நீரில் உலையேற்றி
அமுது படைக்கின்றோம்.

எம்மை
தூக்கி நிறுத்த ஒருவரற்று
தோளிற் சுமைதாங்கியுள்ளோம்.

ஆண்டனுபவிக்க
ஒரு அரசுகட்டில்
வேண்டுமென்பதற்காக
நாங்கள் போராடவில்லை.

பத்துத்
தலைமுறைக்குச்
சொத்துச் சேர்த்துவிட்டு
செத்துவிடவேண்டுமென்ற
சொப்பனங்கள் எமக்கில்லை.

தங்கக் கட்டிலில் சயனிக்கும்
கனவேதும் கூட
எங்களுக்குக் கிடையாது.

எங்களை மனிதர்களாக........
எங்களைத் தமிழர்களாக.......
வாழ வழிசமைத்தீர்களானால்.......
கோடி நமஸ்க்காரம்.

உலக மனச்சாட்சியின்
உரத்த குரல்களே!
உண்மைக்கு ஒளியூட்டுங்கள்.
தர்மத்துக்குச் சாட்சியாகுங்கள்.

"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்""
ஆதிக்கத்துக்கெதிராக
போரிடு என்று
அப்பர் சுவாமிகள் போதித்த
அனல் வரியிது.

குனிந்த தலை நிமிராது
பணிந்து போவென்று
எந்த மதமுமே
எடுத்துரைத்தது கிடையாது.
அடக்க வருபவர் முன்
அடங்கிப் போவென
கடவுளெவரும்
கட்டளையிட்டதில்லை.

அன்புக்கு
தலைவணங்கு என்பது
ஆணவத்துக்குச்
சாமரம் வீசென்று அர்த்தமல்ல......

சாந்த சொரூபம்,
சமரச தேவர்களென
நம்பி ஏமாந்த வரலாறே
நமது.

காளான்களுக்குக் குடைபிடித்து
கைசலித்தவர்கள் நாங்கள்.

கொஞ்சம் நிமிர்ந்து உட்கார நினைத்தாலே......
சிம்மாசனத்துக்குத் தீமூட்டி விடுகின்றனர்.

திறைசெலுத்தி சிற்றரசாக இருவென்றால்,
தமிழன் அங்க அடையாளங்களையிழந்து
அழிந்து விடுவான்.

நாங்கள் சாவுக்குத் தாலி கட்டி
பாடைக்குப் பரிசு கொடுப்பவர்களல்லர்.

அமைதிப் புறா வந்து தோள்களிலிருந்தால்
அதைத் தட்டி விடுபவர்களுமல்லர்.

வெள்ளைப் பூக்களே எமக்கும் விருப்பம்.

இலை சொரிந்து மொட்டை மரமாகி
எழிலிழந்து கிடக்கிறது எம் வாழ்வு.

ஊற்றுவாய் அடைத்த கிணறுபோல்
இடிந்து கொண்டிருக்கிறது எம்தேசம்.

புயலடித்த பூமிபோல
அழகிழந்து விட்டாள் எம் அன்னை

வாழ்வுக்கு ஏங்குவதே எம் வரலாறாகி விட்டது.
விலங்கற்றுக் கைகளை வீசி
எம் தெருக்களில் நடக்கவே விரும்புகின்றோம்.

நில்லென ஒருவன் நிறுத்தவும்,
செல்லென இன்னொருவன் உத்தரவிடவும்
எஜமானர்களற்ற பூமிக்கே ஏங்குகின்றோம்.



காற்றைப் போல ஒரு கட்டற்ற வாழ்வு
நேற்றெமக்கு இருந்தது.

மீண்டுமந்த வாழ்வை
எம் வாசலிற்காண அவாவுற்றோம்,

கேட்டோம்!

தரமறுத்த போதே
இந்தத் தர்மயுத்தம் கருக் கொண்டது.

எந்த வழியெனிலும்
எமக்கு வேண்டும் விடுதலை.

கோடி இன்னல்கள் வந்து குதறட்டும்
ஆடி விழாது இந்த ஆலமரம்.

நிலத்தைப் பறித்து நெருப்பூட்டுவதால்.......
பலமிழந்து போகாதெம் படையணி.

ஒன்று பத்தாகி....... பத்து நூறாகி
வென்றொருநாள் வீடுவரும் கன்றுகள்.

துப்பாக்கி வாயில்
உலோகச் சன்னங்களுக்குப் பதிலாக
பூக்களைச் சொருகச் சொல்கின்றீர்.

சரி, அப்படியே செய்கின்றோம் ஆண்டவரே!
எமக்கு, விடுதலைப் பொருளைத் தருவதாக
இருந்தால்.......

உலக மனச் சாட்சியே!

சமுத்திரங்களைக் கடந்து......
உங்கள் கைகள் நீளுகின்றன.

நமக்காகவென்றால்
நன்றிகள்.

www.tamilarangam.net





## அதிர்வுகள் தொடரும்

வன்னிக் காட்டில்
விரிந்த நிலப்பரப்பில்
எரிந்தது நெருப்பு.
வேங்கையின் கருவி
பேசிய மொழியின்
வீரியம் விரிய
வீழ்ந்தது பகை.
சிங்க மமதை
தீயில் கருக
சிங்களம் அதிர்ந்தது.
இனியும்
அதிர்வுகள் தொடரும்.
புது வேங்கைகள்
அணியாய் திரளும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்